




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:133 | 28-11-2025 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


### இன்றைய பஞ்சாங்கம்

28.11.2025 கார்த்திகை 12
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
அஷ்டமி இரவு 7.16 வரை
பிறகு நவமி.

நட்சத்திரம்:
சதயம் இரவு 10.45 வரை
பிறகு பூரட்டாதி.

யோகம் :
சித்தயோகம்.

கரணம் :
இன்று காலை 9.12 வரை
கரசை பின்பு இரவு 8.03 வரை
வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.14 யோகம்
சரியில்லை பின்பு இரவு 10.57
வரை சித்த யோகம் பின்பு
யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 10.57 வரை
புனர்பூசம் பின்பு பூசம்

நல்ல நேரம்
காலை 6–7 மணி.
மாலை 5–6 மணி
இராகு காலம்
காலை 10.30–12.00 மணி.


எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி.


குளிகை
காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# ‘டித்வா’ புயல் உருவானது

## ஆறு மாவட்டங்களுக்கும் ரெட் அலர்ட்







**சென்னை, நவ.28:** தென்மேற்கு வங்கக் கடலில் டித்வா புயல் உருவாகி உள்ள நிலையில், தமிழகத்தில் இன்று (நவ.28) நான்கு மாவட்டங்களுக்கும், நாளை (நவ.29) ஆறு மாவட்டங்களுக்கும் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தென்மண்டல வானிலை ஆய்வு மைய தலைவர் பி.அமுதா இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, டித்வா புயலாக வலுப்பெற்று, தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் சென்னையிலிருந்து 700 கி.மீ தொலைவில் நிலைகொண்டுள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், வட தமிழகம் - புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை 30-ம் தேதி அதிகாலை நெருங்கும்.

இந்தப் புயலின் காரணமாக அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கான எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.



அடுத்த 24 மணி நேரத்தில் டெல்டா மாவட்டங்களில், குறிப்பாக 5 மாவட்டங்களில் மிதமான மழை முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. ஏனைய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது.

டெல்டாவில் 4 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம் ஆகிய 4 மாவட்டங்களுக்கு நாளை (நவ.28) அதி கனமழைக்கான ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மயிலாடுதுறை திருவாரூர், நாகப்பட்டினம் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை மறுநாள் (நவ.29) ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது.

29-ம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி,பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் அலர்ட் (மிக கனமழை) கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திருச்சி, கரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

30-ம் தேதி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (நவ.27) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அடுத்த 5 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தவெகவில் இணைந்தார் செங்கோட்டையன்!

**சென்னை,நவ.28:** அதிமுக மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சா செங்கோட்டையன், தனது கோபிசெட்டிப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினா பதவியை புதன்கிழமை ராஜிநாமா செய்தாா.

இதனைத் தொடர்ந்து, சென்னை பட்டினம்பாக்கத்தில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யின் வீட்டுக்கு நேற்று மாலை நேரில் சென்ற செங்கோட்டையன், விஜய்யை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.



இந்த நிலையில், சென்னை பனையூரில் இன்று நடைபெற்ற நிகழ்வில், தவெக தலைவர் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்துள்ளார்.

திருப்பூர் முன்னாள் எம்பி சத்யபாமா உள்பட செங்கோட்டையனின் ஆதரவாளர்களும் தவெகவில் இணைந்துள்ளனர்.

முன்னதாக பனையூர் தவெக அலுவலகத்துக்கு வருகைதந்த செங்கோட்டையன் மற்றும் அவரது ஆதரவாளர்களை தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

தவெகவில் இணைந்துள்ள செங்கோட்டையனுக்கு தவெக நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பதவி கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1977 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக எம்ஜிஆர் பதவியேற்ற போது, முதல்முறையாக கோபிசெட்டிபாளையம் தொகுதியில் போட்டியிட்டு, சட்டப்பேரவை உறுப்பினர் ஆனார் செங்கோட்டையன்.

எம்ஜிஆரின் விசுவாசியாகவும், தொடர்ந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் விசுவாசியாகவும் அறியப்பட்டசெங்கோட்டையன், கோபிசெட்டிபாளையம் தொகுதியிலிருந்து மட்டும் 8 முறை சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜெயலலிதாவின் பிரசாரப் பயணத்தை திட்டமிடுவதில் வல்லவராக அறியப்பட்ட செங்கோட்டையன், அவரது மறைவுக்குப் பிறகு பிரிந்த அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என்கிற கருத்தை முன்வைத்தார்.

கடந்தமாதம் பசும்பொன்னில் நடைபெற்ற தேவா் ஜெயந்தி விழாவில் முன்னாள் முதல்வா் ஓ.பன்னீா்செல்வம், அமமுக பொதுச் செயலா் டி.டி.வி.தினகரன், வி.கே.சசிகலா ஆகியோரைச் சந்தித்தாா். இதையடுத்து, அவரை கட்சியின் அடிப்படை உறுப்பினா் பொறுப்பிலிருந்து நீக்கி அதிமுக பொதுச் செயலா் எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை எடுத்தாா்.

அதன் பின்னர், செங்கோட்டையனின் அரசியல் நகா்வு எந்த மாதிரியாக இருக்கும் என்கிற எதிா்பாா்ப்பு எழுந்த நிலையில், விஜய் தலைமையிலான தவெகவில் இணைந்துள்ளார்.

தமிழக அரசியலில் அரை நூற்றாண்டு அனுபவமும், தேர்தல் பிரசாரங்களை ஒருங்கிணைக்கும் ஆளுமையும் படைத்தசெங்கோட்டையனின் வருகை தமிழக வெற்றிக் கழகத்துக்கு கூடுதல் பலத்தை சேர்த்துள்ளது.

## செங்கோட்டையனுக்கு பதவியை அறிவித்தார் விஜய்

தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையனை நியமித்து கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

கூடுதலாக ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்புச் செயலாளராகவும் செங்கோட்டையன் நியமிக்கப்பட்டுள்ளார்.

விஜய் தனது அறிக்கையில்,

“தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களோடு பயணித்தவர்: தாம் சார்ந்திருந்த கழகத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர்; அனைவரிடத்திலும் எளிமையோடும் அன்போடும் பண்போடும் பழகி, நன்மதிப்பைப் பெற்றவர்; மூத்த அரசியல் தலைவர். முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் இன்று முதல் நம் தமிழக வெற்றிக் கழகத்தில்



இணைந்து, மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கிறார். அவரை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அண்ணன் செங்கோட்டையன், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 28 பேர் கொண்ட, எனது கண்காணிப்பில் இயங்கும் கழக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக (CHIEF COORDINATOR) நியமிக்கப்படுகிறார். இவர் இக்குழுவை வழிநடத்தி, கழகத்தின் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்க எனக்கு உறுதுணையாகச் செயல்படுவார். மேலும், அவருடன் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்தியபாமா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் வெங்கடாசலம், முத்துக்கிருஷ்ணன் மற்றும் பிற புதிய உறுப்பினர்களையும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கழகத் தோழர்களும் நிர்வாகிகளும் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்” என்று பதிவிட்டுள்ளார்.

## தமிழகத்தில் 97.43% SIR படிவங்கள் விநியோகம் இந்திய தேர்தல் ஆணையம்

**சென்னை, நவ.28:** தமிழகத்தில் 6.24 கோடி வாக்காளர்களுக்கு 97.43% SIR படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



வாக்காளர்களிடம் பெறப்பட்ட 4.53 கோடி (70.70%) விண்ணப்பங்களை BLO-க்களால் தேர்தல் ஆணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 70.70% விண்ணப்பங்கள் BLO-க்களால் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.








# திருக்குறள் குறள்-453

**மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்**
**இன்னா னெனப்படுஞ் சொல்**



மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும், இப்படிப் பட்டவன் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல், சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

## சிந்திக்க ஒரு நொடி



பொறுமையும் நிதானமும் தான் ஒருவரை வாழவைக்கும். கோபமும் அவசரமும் அவரை அழிக்க தான் செய்யும்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## தீபத் திருவிழா...





திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் தீபத் திருவிழாவின் 4-ம் நாளான நேற்று காலை உற்சவத்தில் தங்க நாக வாகனத்தில் சந்திரசேகர் வீதி உலா வந்தார்.



பொள்ளாச்சி நவம்பர்-27 ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி அம்மன் அபிஷேகம், அலங்காரங்கள், வண்ண மலர் மாலைகளுடன், வெட்டி வேர் மாலையுடன், தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை மாலை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

# திட்டக்குடியில் பிரபாகரன் பிறந்த நாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி சார்பில் ரத்ததான முகாம், மரக்கன்றுகள் வழங்கும் விழா நடைபெற்றது




**திட்டக்குடி.நவ.28:** தமிழ்தேசியத் தலைவர் பிரபாகரன் 71வது பிறந்தநாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் வழிகாட்டுதலின்படி கடலூர் மாவட்டம் திட்டக்குடி தனியார் பிரபு மருத்துவமனையில் ரத்ததான முகாம் மற்றும் இலவச மரக்கன்றுகள் வழங்கு விழா கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.இதில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் பொதுமக்கள் தாமாக முன்வந்து ரத்ததானம் செய்தனர்.

மேலும் ரத்ததானம் செய்தவர்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள், பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து திட்டக்குடி பல்வேறு இடங்களில் நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள் பல்வேறு வகையான மரக்கன்றுகளை நட்டு வைத்து பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இதில் திட்டக்குடி தொகுதி குருதி கொடை பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் சுந்தரபாண்டியன், மருத்துவ பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் பிரபு,கட்சிப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்



துணை முதல்வர் உதயநிதிக்கு திமுக எம். பி.ஜெகத்ரட்சகன் புத்தகம் வழங்கி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

## திருமண விழா....



ஊத்தங்கரை, நவ.28: ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் இல்லதிருமணம்கே.பி.முனுசாமிமணமக்களை வாழ்த்தின. ஊத்தங்கரை சட்ட மன்ற உறுப்பினர். T.M. தமிழ்ச்செல்வம்.MLA அவர்களின் கழக இல்ல திருமண மத்தூர் உள்ள பாரதி மஹாலில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச் செயலாளர். முன்னாள் அமைச்சர். வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர்.அண்ணன் மாண்புமிகு K.P.முனுசாமி. BA.,BL.,MLA அவர்கள் மணமக்களை வாழ்த்தினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட_கழக_செயலாளர் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர்.அண்ணன் உயர்திரு_K._அசோக்குமார்.Ex.MP.,MLA அவர்கள், ஊத்தங்கரை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.ம திருமதி மனோரஞ்சிதம்.Ex.MLA பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்திரு KE.கிருஷ்ணமூர்த்தி.Ex.MLA செய்தி தகவல்:சிவசக்தி ஊத்தங்கரை

## ஆர்ப்பாட்டம்




சுசீந்திரம் கோயில் நுழைவு வாயில் முன் பாஜகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஆலந்துார் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முன் தூய்மை காவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் இனிப்பு மற்றும் அறுசுவை உணவை வழங்கினார்.



ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர பணியினை சிறப்பாக மேற்கொண்டைமைக்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை திருப்பத்தூர் கலெக்டர் சிவசவுந்தரவல்லி வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



விருதுநகர் கொங்கன்குளம் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை, கலெக்டர் சுகபுத்ரா பார்வையிட்டு மாற்றுத் திறனாளிக்கு ரூ.1.5லட்சம் மதிப்பிலான வண்டியை வழங்கினார்



துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளன்று திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தங்க மோதிரத்தை அமைச்சர் நாசர் அணிவித்தார்.உ டன் எம்எல்ஏக்கள் ராஜேந்திரன், சந்திரன் உள்ளனர்.




ராசிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சிறு விளையாட்டரங்கம்அமைக்க பூமி பூஜையை அமைச்சர் மதிவேந்தன்துவக்கி வைத்தார். கலெக்டர் துர்காமூர்த்தி, ராஜேஷ்குமார் எம்.பி. உடன் உள்ளனர்.

தஞ்சை கலெக்டர் அலுவலக வளாகத்தில் எஸ்ஐஆர் குறித்து, தகுதியுள்ள எந்த வாக்காளரும் விடுபடக்கூடாது என்று விழிப்புணர்வு கோலம் போடப்பட்டுள்ளதை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டு துண்டுபிரசுரங்கள் வழங்கினார். அவரதுதலைமையில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.





மதுரை வடக்கு மாசி வீதி இராமாயண சாவடி முன்பு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா 51வது வட்ட திமுக நிர்வாகிகளால் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.



திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஜஆர் படிவங்களை வீடுகளில் சென்று வாக்குச்சாவடிநிலை அலுவலர்கள் பெற்றுக் கொண்டனர்.



ராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்காளர் கணக்கிட்டு படிவங்கள் பணியை சிறப்பாக செய்து 100% முழுமையாக நிறைவு செய்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் களுக்கு கலெக்டர் ரஞ்சித்சிங் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.




மதுரை தியாகராஜர் கல்லூரியின் மகளிர் ஆய்வு மையம் சார்பில், சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. இதில் சிறப்பு வருந்தினர்களை பேராசிரியர் அருணா ராமச்சந்திரன் கவுரவித்தார்.

## படிவங்கள் திரும்ப பெறும் நடவடிக்கை: கலெக்டர் ஆய்வு



**இராமநாதபுரம், நவ.28:**

இராமநாதபுரம் நகராட்சி பகுதியில் தேர்தல் அலுவலர் / கலெக்டர் சிம்ரன்ஜீத் காலோன் வாக்காளர்கள் கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்யப்பட்டு திரும்ப பெற்று வருவதை நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ராமநாதபுரம் நகராட்சிக் குட்பட்ட திரௌபதி அம்மன் கோயில் தெரு, ஓம்சக்தி நகர் மற்றும் கேணிக்கரை பகுதிகளில் வாக்காளர்களால் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் திரும்பபெற்று வருவதை பாவையிட்டதுடன், வாக்காளர்களிடம் படிவங்களை பூர்த்தி செய்து திரும்பப்பெற எதுவாக வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் வழிகாட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதை பாவையிட்டார். மேலும் வாக்காளர்களும் விரைந்து படிவங்களை பூர்த்தி செய்து வழங்க, மாவட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணி மேற்கொள்ள வேண்டுமென தேர்தல் அலுவலர் / கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

## தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் தென்காசி கலெக்டர் கமல்கிஷோர் ஆலோசனை



**தென்காசி, நவ.28:**

தென்காசி கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் தனியார் பேருந்துகளை பாதுகாப்பான முறையில் இயக்கிடுவது தொடர்பாக, உரிமையா ளர்களுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் முன்னிலை வகித்தார். பின்னர் கலெக்டர் கமல்கிஷோர் தெரிவித்ததாவது:

ஆய்வுக்கூட்டத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் பேருந்தினை மெதுவாகவும் பாதுகாப் பாகவும் இயக்கிடவும், வாகனத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் வாகனம் இயக்கப்பட வேண்டும், போக்குவரத்து வட்டார அலுவலர்கள் தனியார் பேருந்து வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள வேக கட்டுப்பாடு கருவி சரிவர இயங்குகிறதா? என்பதை ஆய்வு செய்து உறுதிப்படுத்திட வேண்டும். மேலும், வட்டாரப் போக்குவரத்து அலுவலர், காவல்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களை உள்ளடக்கி, வேகக்கட்டுப்பாட்டு நிர்ணயம் செய்வதற்கு குழு அமைக்க நடவடிக்கை மேற்கொ ள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அதிவேகமாக இயக்கப்படும் பேருந்துகள் கண்டறியப்படும் நேர்வில், சம்பந்தப்பட்ட பேருந்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள் ளப்படும். அதனைத் தொடர்ந்து தென்காசி,துரைசாமிபுரம் அருகில் 24.11.2025 அன்று நடந்த பேருந்து விபத்து போன்று இனி வருங்காலங்களில் விபத்துக்கள் நடைபெறாத வகையில் தனியார் பேருந்துகளை இயக்கிட வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் அறிவுறுத்தினார். இவ்வாய்வில், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் செல்வி (சங்கரன்கோவில்), சரவணபவன் (தென்காசி), மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் ரோந்துப் பணியை அதிகரிக்க வேண்டும்: எஸ்பி அறிவுறுத்தல்



**திருவாரூர், நவ.28:**

திருவாரூர் மாவட்டத்தில், ரோந்துப் பணியை அதிகரிக்க வேண்டும் என காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் காவல்துறை அதிகாரிகளிடம் அறிவுறுத்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில், இரவு மற்றும் பகல் நேரங்களில் ரோந்துப் பணிகளை போலீசார் அதிகரிக்க வேண்டும் என மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் தெரிவித்தார். இது குறித்த மாதாந்திர கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் தலைமை வகித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) ஜே. செட்ரிக் மேனுயுவல் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், மாவட்டத்தில் கடந்த மாதம் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், விசாரணையில் முன்னேற்றம், நிலுவையில் உள்ள வழக்குகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான குற்றங்கள், போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சாலை விபத்துக்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து, எஸ்.பி. கருண் கரட் பேசியதாவது:-

குற்றங்களை தடுக்கும் விதமாக இரவு மற்றும் பகல் நேரங்களில் ரோந்துப் பணிகளை அதிகப்படுத்த வேண்டும். போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் பயன்பாட்டை தடுக்க திடீர் சோதனைகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் வாகன சோதனையை அதிகரித்து, சட்டவிரோத நடவடிக்ககைளை தடுக்க வேண்டும் என பேசினார்.

சிறந்த காவல் நிலையங்களாக தேர்வு செய்யப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளுக்கு, சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. மேலும், கடந்த மாதம் சிறப்பான பணி செய்ததற்காக 16 காவல் அதிகாரிகள் மற்றும் 16 ஆளுநர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில், சைபர் குற்றப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அருள்செல்வன், அனைத்து உட்கோட்டத் துணைக்கால் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## வாக்காளர் படிவத்தினை பதிவேற்றம் செய்யும் பணிகள்: திண்டுக்கல் கலெக்டர் சரவணன் ஆய்வு



**திண்டுக்கல், நவ.28:**

பழனி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து மீளப் பெறப்படும் வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு படிவத்தினை பதிவேற்றம் செய்யும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் செ.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு படிவம் 04.11.2025 முதல் 04.12.2025 வரையில் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு மீளப்பெறும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக சிறப்பு தீவிர திருத்தம் 2026 நடைபெற்று வருகின்றது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2124 வாக்குச்சாவடி மையங்களில் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று, கணக்கெடுப்பு படிவங்களை (Enumeration Form) கடந்த 04.11.2025 முதல் 96.7% வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது அப்படிவங்களை பூர்த்தி செய்து மீளப்பெறும் பணிகள் 04.12.2025 வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப்பணியில் சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள், தேர்தல் பிரிவு பணியாளர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், மாவட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (SVEEP) கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு பேரணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பழனி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிவகிரிப்பட்டி மற்றும் கோதைமங்கலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 கணக்கெடுப்பு படிவத்தினை, வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து மீளப் பெறப்படும் பணிகளையும், சிவகிரிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பழனி நகராட்சி அலுவலகம் மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து மீளப் பெறப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தினை பதிவேற்றம் செய்யும் பணிகளையும், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் செ.சரவணன் நேரில் ஆய்வு செய்தார். இந்நிகழ்வுகளின் போது, பழனி வட்டாட்சியர் பிரசன்னா, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சைகாந்தி ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

## வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகும் வாய்ப்பு எதிரொலி: அலுவலர்களுடன் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ஆய்வு

**சென்னை, நவ.28:**



தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கையின் தெற்குப் பகுதியில் ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும், இது அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்தகாற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளது என்றும், இதனால் தமிழ்நாட்டின் டெல்டா மற்றும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய கடலோர மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் பேரிடரை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகத்தினர் தயார் நிலையில் இருக்குமாறு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. முதலமைச்சர் பல்வேறு துறை உயர் அலுவலர்களுக்கும் மற்றும் மாவட்ட கலெக்டர்களுக்கும் பேரிடரை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கியுள்ளார். மேலும், கடந்த இரு நாட்களில் தென்மாவட்ட மற்றும் டெல்டா மாவட்ட கலெக்டர்களுக்கு காணொலிக் காட்சி மூலம் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இன்றும், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்ட கலெக்டர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் காணொலி காட்சி மூலம் தயார்நிலை குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது. நீர்த்தேக்கங்களில் உபரிநீர் இருப்பினை முன்கூட்டியே திறத்தல் மற்றும் முறையான நீர் மேலாண்மையின் மூலம் நகரம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் ஏற்படாதவாறு பாதுகாக்குமாறும், பாதிப்புக்குள்ளாகக் கூடிய தாழ்வான பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்குமாறும், தேவைக்கேற்ப பொதுமக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்குமாறும், அவர்களுக்கு தேவையான பாதுகாப்பான குடிநீர், உணவு மற்றும் மருத்துவ வசதிகளுக்கு ஏற்பாடு செய்யுமாறும் மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆகியோரின் வெளியேற்றத்தில் கவனம் செலுத்துமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள 122 பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையங்களும், 6033 தற்காலிக நிவாரண முகாம்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள பல்துறை அலுவலர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பேரிடரை எதிர்கொள்ள அனைத்து உபகரணங்களுடனும், கனரக வாகனங்களுடனும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கூடுதலாக ஐந்து அணியினர் அரக்கோணத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் எம்.சாய்குமார், பேரிடர் மேலாண்மைத் துறை செயலர் பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### கிராம்பின் மருத்துவப் பயன்கள்!

சமையலுக்கும், கறிகளுக்குச் சுவையூட்டவும், கறி மசாலா வகைகள் தயாரிக்கவும் முக்கிய இடம் பிடிக்கும் கிராம்பு ஏராளமான மருத்துவ குணங்கள் கொண்டது. மேலும் கிராம்பு வாசனைத் தயாரிப்பு, சோப்புத் தயாரிப்பிலும் பயன்படுகிறது.

கிராம்பில் கார்போ ஹைட்ரேட், ஈரப்பதம், புரதம், வாலடைல் எண்ணெய், கொழுப்பு, நார்ப்பொருள், மினரல், ஹைட்ரோகுளோரிக் அமிலச் சாம்பல்கள், கால்சியம், பாஸ்பரஸ், தயமின், ரிபோ பிளேவின், நயாசின், வைட்டமின் -சி மற்றும் ஏ போன்றவை உள்ளன. கிராம்பின் மொட்டு, இலை, தண்டு போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது.கிராம்பில் பலவித மருத்துவ குணங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் ஊக்கு வித்தல், தூண்டுதல் உண்டாக்கும் பொருளாக உள்ளது. பல வலிகளைப் போக்குவதுடன் வயிற்றுப் பொருமல் போன்றவற்றுக்கும் மிகச் சிறந்த நிவாரணி.

ஜீரண உறுப்புகளில் சுரக்கும் நொதிகளை கிராம்பு ஊக்குவிக்கிறது. இதனால் ஜீரணக்கோளாறுகள் நீங்குகின்றன.கிராம்புப் பொடியை வறுத்து அரை கிராம் தேனில் குழைத்து சாப்பிட்டால் வாந்தி நிற்கும். கிராம்பில் உள்ள விறைக்கப் பண்ணும் ஒரு பொருள் வயிற்றிலுள்ள சில உறுப்புகளை விறைப்படையச் செய்து வாந்தியைத் தடுக்கிறது.

சிறிது சமையல் உப்புடன் கிராம்பை சப்பிச் சாப்பிட்டால் தொண்டை எரிச்சல், கரகரப்பு நீங்கி தொண்டை சரியாகும். தொண்டை அடைப்பால் ஏற்படும் எரிச்சலைத் தவிர்க்க, சுட்ட கிராம்பு மிகச் சிறந்தது.கிராம்பு எண்ணெய் மூன்று துளியுடன் தேன் மற்றும் வெள்ளைப்பூண்டுச் சாறு சேர்த்து படுக்கைக்குப் போகும் முன்பு சாப்பிட ஆஸ்துமாவால் ஏற்படும் சுவாசக் குழல் அழற்சி சரியாகும்.

முப்பது மில்லி நீரில் ஆறு கிராம்புகளைப் போட்டு கொதிக்க வைத்து அந்தக் கசாயத்தில் தேன் கலந்து குடித்தால் ஆஸ்துமா கட்டுப்படும். கிராம்புப் பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர, வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும். கிராம்பு எண்ணெயை பாதிக்கப்பட்ட ஈறுகளில் தடவிவர குணம் கிடைக்கும்.

3-5 துளி நல்லெண்ணெயில் ஒரு கிராம்பை சூடு காட்டி அந்த எண்ணெயை வலியுள்ள காதில் இட்டால் சுகம் கிடைக்கும்.தசைப்பிடிப்புள்ள இடத்தில் கிராம்பு எண்ணெயைத் தடவி வர குணம் கிடைக்கும். கிராம்பு மற்றும் உப்பை பசும்பாலில் அரைத்து அந்தப் பசையைத் தடவினால் தலைவலி பறந்துவிடும். தலையிலுள்ள நீரை உப்பு உறிஞ்சி எடுப்பதால் தலைபாரம் குறைந்து குணம் கிடைக்கிறது.கண் இமைகளில் ஏற்படக்கூடிய அழற்சிகளை போக்க கிராம்பை நீரில் உரசி அந்த நீரைப் பயன்படுத்தினால் குணம் கிடைக்கும்.

### லவங்கப்பட்டையின் மருத்துவ குணங்கள்

*மூட்டு நோய் உள்ளவர்கள் காலை, மாலை இரு வேளைகளிலும் ஒரு டம்ளர் சூடானத் தண்ணீரில் இரண்டு ஸ்பூன் தேனும், சிறிய ஸ்பூன் லவங்கப்பட்டை பொடியும் கலந்து தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். லவங்கப் பட்டை எண்ணெயைக் கொண்டு மசாஜ் செய்வதும் மூட்டு வலிக்கு நல்லது.

*தேன் மற்றும் லவங்கப்பட்டை பொடி இரண்டையும் கலந்து பிரெட்டின் மேல் ஜாமுக்கு பதில் தடவி உண்பதால் கொலஸ்ட்ரால் குறையும். இதயத்தில் இருக்கும் தமனிகளில் இருக்கும் கொழுப்பினை குறைக்கும். ஏற்கனவே மாரடைப்பு நோய் வந்தவர்களும் இதைச் சாப்பிடுவதால் மறுபடி மாரடைப்பு ஏற்படுவதை தவிர்க்கலாம். வயது ஏற ஏற நம் இதயத்தின் தசைகள் வலுவிழந்து போகின்றன. தேனும் லவங்கப் பட்டையும் இதய தசைகளை வலுப்பெறச் செய்கின்றது.

லவங்கப்பட்டை டைப் 2 சர்க்கரை நோயின் அளவைக் குறைக்கிறது. உடலில் இயற்கையாகவே இன்சுலின் உற்பத்தியாகத் தூண்டுகிறது.

ட தண்ணீருடன் 2 மேசைக்கரண்டி தேனும், 3 டீஸ்பூன் லவங்கப்பட்டைப் பொடியும் சேர்த்து சாப்பிட கொழுப்பினால் வரும் தொந்தரவுகள் குறையும்.

# தமிழ்நாடு முழுவதும் 702 ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை: ஆர்டிஐ தகவலில் அதிர்ச்சி



**சென்னை, நவ.28:**

பயணிகள் பாதுகாப்பில் அக்கறை காட்டுகிறோம் என ரயில்வே துறை தெரிவித்து வரும் நிலையில், அதிகரித்து வரும் காலி பணியிடங்களால் கூடுதல் ரயில்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தெற்கு ரயில்வேக்கு உட்பட்ட தமிழகத்தில் சமீபகாலமாக ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. இதனால் பணியில் உள்ள ரயில்வே ஓட்டுநர்களுக்கு பணிச்சுமை அதிகரித்து வருகிறது. பண்டிகை காலங்களில் தங்களுக்கு பணிச்சுமை அதிகரித்து வருவதாக கூறி ஏற்கனவே தெற்கு ரயில்வே ஓடும் தொழிலாளர்கள் சங்கத்தினர் போராட்டங்களை நடத்தினர்.

இந்நிலையில் சென்னை சிட்லபாக்கத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் தயானந்த் கிருஷ்ணன் தமிழ்நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை, சேலம் உள்ளிட்ட 4 ரயில்வே கோட்டங்களில் உள்ள ரயில் ஓட்டுநர்கள் காலி பணியிடங்கள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி இருந்தார். அதற்கு பதிலளித்த சம்பந்தப்பட்ட கோட்ட அதிகாரிகள், 'சென்னை ரயில்வே கோட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ரயில் ஓட்டுனர் பணியிடங்கள் 2047, நடப்பு பணியிடங்கள் 1586, காலி பணியிடங்கள் 461' என தெரிவித்துள்ளனர். திருச்சி ரயில்வே கோட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ரயில் ஓட்டுனர் பணியிடங்கள் 447, நடப்பு பணியிடங்கள் 372, காலி பணியிடங்கள் 75 எனவும், மதுரை ரயில்வே கோட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ரயில் ஓட்டுனர் பணியிடங்கள் 491, நடப்பு பணியிடங்கள் 411, காலி பணியிடங்கள் 80 எனவும், சேலம் ரயில்வே கோட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ரயில் ஓட்டுனர் பணியிடங்கள் 642, நடப்பு பணியிடங்கள் 556, காலி பணியிடங்கள் 86 எனவும் பதில் அளித்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் 3 ஆயிரத்து 627 லோகோ பைலட்டுகள் பணியாற்ற வேண்டிய இடத்தில் 2925 பேர் மட்டும் பணியாற்றுகின்றனர். அதாவது 702 பேர் பற்றாக்குறை உள்ளது. இதனால் கூடுதல் ரயில்கள் இயக்க முடியாமலும், ஏற்கனவே உள்ள ரயில் ஓட்டுநர்கள் மன அழுத்தத்துடன் பணிபுரிவதாலும் பயணிகள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ரயில் ஓட்டுநர் காலி பணியிடங்களை விரைந்து நிரப்ப வேண்டும் என ரயில் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து தென்காசி மாவட்ட ரயில் பயணிகள் சங்க தலைவர் பாண்டியராஜா கூறுகையில், "தமிழ்நாடு முழுவதும் 702 ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை என்ற தகவல் மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை காரணமாக பணியில் இருப்பவர்கள் கடும் மன அழுத்தத்தோடு, அதிக பணிச்சுமைக்கு ஆளாகின்றனர். இது ரயில் பயணிகளின் பாதுகாப்பில் நேரடி தொடர்புடையது.

மேலும் மதுரை, தென்காசி, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து சென்னை, பெங்களூரு, மும்பை உள்ளிட்ட பெரு நகரங்களுக்கு ரயில் தேவை மிக அதிகமாக உள்ளது. ரயில் ஓட்டுநர்கள் பற்றாக்குறை காரணமாக கூடுதல் ரயில்களை இயக்க முடியாத நிலை உள்ளது. பண்டிகை காலங்களில் கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்க முடியாத நிலையும் ஏற்படுகிறது. எனவே ரயில் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் கூடுதல் ரயில் தேவைகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள 702 காலி பணியிடங்களை நிரப்புவதற்கு ரயில்வே துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.




# கார்த்திகை தீபம் பாதுகாப்பு பணியில் 15,000 போலீசார் பாதுகாப்பு: ஐகோர்ட்டில் டிஜிபி அறிக்கை தாக்கல்



**சென்னை, நவ.28:**

திருவண்ணாமலை கார்த்திகை தீப விழாவில் 15,000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளதாக தமிழக டிஜிபியும், திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். டிசம்பர் 3ம் தேதி நடைபெற இருக்கும் கார்த்திகை தீபத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வர் என்பதால், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனக்கோரி வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அந்த மனுவில், கூட்டத்தை கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் போதுமான காவல்துறையினரை பணியில் அமர்த்த வேண்டும். வாகனம் நிறுத்துவதற்கு போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மருத்துவ வசதிகள் வழங்க தற்காலிக முகாம்கள் அமைக்க வேண்டும். கிரிவலப்பாதையில் போலி சாமியார்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகளை அனுமதிக்க கூடாது. கடைகள் அமைக்க அனுமதிக்க கூடாது. கோவிலில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.பி.பாலாஜி, தமிழக அரசு, திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம், காவல்துறை ஆகியோர் நவம்பர் 24ம் தேதிக்குள் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தார். இந்த நிலையில், இந்த வழக்கு ஐகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. தமிழக டிஜிபியும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். அதில், திருவண்ணாமலை கார்த்திகை தீபம் பாதுகாப்பு பணியில் 15 ஆயிரம் போலீசார் ஈடுபடுத்தப்பட உள்ளனர் பக்தர்களின் வசதிக்காக கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி பாஸ் திட்டம், இந்த ஆண்டும் செயல்படுத்தப்படும் கோயிலில் 26 இடங்களில் எல்இடி திரைகள் அமைக்கப்பட்டு உள்ளன. 7 மருத்துவக் குழுக்களை நியமிக்க, சுகாதார துறையை கேட்டுக் கொண்டுள்ளோம் தமிழக டிஜிபி-யும், தி.மலை மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

# தானிஷ்க் ஜுவல்லரியில் பழைய நகைகள் எக்ஸ்சேஞ்ச் திட்டம்

டாடா குழுமத்தின் ஒரு அங்கமான தனிஷ்க், இந்தியாவில் அதிக நம்பிக்கைக்குரிய ஆபரண பிராண்டாக திகழும் நிலையில், இந்நாட்டில் பழைய தங்க நகைகளை புதிய நகைகளாக மாற்றும் இந்நாட்டின் மிகப்பெரிய இயக்கத்தை தொடங்கி தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

இந்தியாவின் உண்மையான தங்க இருப்புகள், தங்கச் சுரங்கங்களில் இல்லை. மாறாக, நாடெங்கிலும் உள்ள இந்திய மக்களின் வீடுகளில் தான் இருக்கின்றன. இந்திய இல்லங்களில் மட்டும் 25,000 டன்கள் தங்கம் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், அந்த பிரமாண்டமான சொத்தும், வளமும் பெரும்பாலான நேரங்களில் வீடுகளுக்குள்ளேயே வேறு ஆதாயப்பலன்களை வழங்காமல் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. இதே நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் தேவையில் ஏறக்குறைய 99% என்ற அளவிற்கு தங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

சுயசார்பு என்ற நம் நாட்டின் குறிக்கோள் இலக்கை அடைவதற்கான பயணத்தின் வேகத்தை இந்த இறக்குமதி தங்கத்தின் மீதான சார்ந்திருப்பு மெதுவாக்குகிறது. இந்த முரண்பாடுக்கு தீர்வு காணும் விதத்தில், தங்களிடம் ஏற்கனவே இருக்கின்ற தங்க ஆபரணங்களின் மதிப்பை வெளிக்கொணருமாறு குடும்பங்களை தனிஷ்க் ஊக்குவிக்கிறது. 2025 நவம்பர் 30-ம் தேதி வரை அனைத்து கேரடேஜ்களிலும் (9 KT என்ற குறைந்த அளவு வரை) பழைய தங்க நகைகளை மாற்றும்போது பூஜ்ய (0%*) பிடித்தம் என்ற சிறப்பு சலுகையை நுகர்வோர்களுக்காக தனிஷ்க் முதன் முறையாக வழங்குகிறது.

# ஆண்டுக்கு 50 செயற்கை கோள்கள் வீதம், 3 ஆண்டுகளில் 150 செயற்கை கோள்கள் ஏவ திட்டம்: இஸ்ரோ தலைவர்






**நாகர்கோவில், நவ.28:**

ஆண்டுக்கு 50 செயற்கை கோள்கள் வீதம், 3 ஆண்டுகளில் 150 செயற்கை கோள்கள் ஏவ திட்டமிட்டு இருப்பதாக, இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறினார்.

இஸ்ரோ தலைவர் நாராயணன், நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விண்வெணி துறையில் 2040ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடுகளின் விண்வெளி திட்டங்களுக்கு இணையாக, இஸ்ரோவின் திட்டங்கள் இருக்கும். மற்ற நாடுகளுடன், இந்தியாவுக்கு போட்டி இல்லை. ஆனால் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக இஸ்ரோவின் வளர்ச்சி அமைந்து இருக்கும். அதற்கான இலக்கை நோக்கி நாம் பயணித்து கொண்டு இருக்கிறோம். மகேந்திரகிரி இஸ்ரோ மையம் மிகப்பெரிய வளர்ச்சியில் உள்ளது. 8 ஆயிரம் ஏக்கரில் மகேந்திரகிரி ஐஎஸ்ஆர்ஓ மையம் அமைந்துள்ளது. ரூ.1200 கோடியில் 3, 4 ஆய்வு கூடங்கள் உள்ளன. மகேந்திரிகிரி ஐஎஸ்ஆர்ஓ மையத்துக்கு, ஒன்றிய அரசு தேவையான உதவிகளை செய்து வருகிறது.

விண்வெளி துறையில் தனியார் என்பது வரவேற்க கூடியதாகும். தற்போது விண்ணில் 57 செயற்கை கோள்கள் செலுத்தி உள்ளோம். இன்னும் 3 ஆண்டுகளில் 3 மடங்கு எண்ணிக்கையை அதிகரித்து கூடுதலாக 150 செயற்கை கோள்கள் செலுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு பணிகள் நடக்கின்றன.

அரசு மட்டும் இதை செய்ய முடியாது. தனியார் பங்களிப்பும் இருக்க வேண்டும். முழுக்க, முழுக்க அவர்கள் இஸ்ரோவின் கட்டுப்பாட்டில்தான், இந்த திட்டத்தை செய்வார்கள். அவர்களுக்கு தேவையான உதவிகளை இஸ்ரோதான் செய்யும்.

எனவே தனியார் பங்களிப்பு என்பது பிரதமரின் சிறப்பான திட்டமாகும். பேரிடர் எச்சரிக்கை தொடர்பாக துல்லியமான தகவல்களை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் இஸ்ரோ செயற்கை கோள்களை செலுத்தி வருகிறது.

புவி கண்காணிப்பு செயற்கைகோள் திட்டங்களுக்கு முக்கியத்தவம் கொடுக்கிறோம்.

சந்திரயான் 4 மற்றும் சந்திரயான் 5 ஆகிய திட்டங்களுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சந்திரயான் 5 திட்டம் ஜப்பானின் விண்வெளி மையத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது. இந்தியாவுக்கு சொந்தமான விண்வெளி மையம் 2035ல் அமைக்கவும் திட்டம் வகுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான முதற்கட்ட பணிக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. நாசா கூட நிறைய திட்டம் உள்ளது.

அமெரிக்காவுடன் 6000 கிலோ கிராம் தொலை தொடர்பு செயற்கைகோளை வணிக ரீதியாக நமது ராக்கெட்டில் இருந்து செல்ல இருக்கிறது. டிசம்பரில் இது அனுப்பி வைக்கப்படும். இதற்கான தேதி முடிவாகவில்லை

. சுபான்ஷூ சுக்லா நாசாவின் உதவியுடன் விண்வெளிக்கு சென்று திரும்பி உள்ளார். அமெரிக்காவும், இந்தியாவும் கூட்டு முயற்சியில் சென்றார். 2040ல் இந்தியாவின் ராக்கெட் மூலம் சந்திரனுக்கு ஆட்களை அனுப்ப இருக்கிறாம். இவ்வாறு அவர் கூறினார்.

# திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா: பூத வாகனத்தில் சந்திரசேகரர் வீதிஉலா

**திருவண்ணாமலை, நவ.28:**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 2-ம் நாள் உற்சவமாக நேற்று முன்தினம் இரவு பஞ்ச மூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர், பராசக்தி அம்மன் ஆகியோர் வெள்ளி விமானங்களிலும், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர் வெள்ளி இந்திர வாகனத்திலும், சண்டிகேஸ்வரர் மர விமானத்திலும் எழுந்தருளி மாடவீதியை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

3-ம் நாளான நேற்று காலை 10 மணியளவில் விநாயகரும், அம்பாளுடன் சந்திரசேகரரும் அருணாசலேஸ்வரர் கோவிலில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினர். அங்கிருந்து வந்து ராஜகோபுரம் எதிரே உள்ள 16 கால் மண்டபத்தில் தயாராக இருந்த மூஷிக வாகனத்தில் விநாயகரும், பூத வாகனத்தில் அம்பாளுடன் சந்திரசேகரரும் எழுந்தருளினர். அங்கு சாமிக்கு பூஜைகள் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



பின்னர் மேள தாளங்கள் முழங்க விநாயகரும், அதன்பின்னர் சந்திரசேகரரும் கோவிலில் இருந்து பக்தர்கள் வெள்ளத்தில் மாடவீதிகளை வலம் வந்து அருள்பாலித்தனர். மாட வீதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளின் அருகே சாமி வந்ததும் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர். மேலும் கோவிலில் 1008 சங்குகளில் புனித நீர் நிரப்பப்பட்டு சிறப்பு யாகசாலை பூஜை நடந்தது. தொடர்ந்து காலையில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்றது. இதிலும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.


தீபத் திருவிழாவின் 3-ம் நாள் விழாவின் போது பக்தர்கள் காணிக்கை செலுத்துவதற்காக பிரார்த்தனை உண்டியல் வைக்கப்படும். அதன்படி 3-ம் நாள் விழாவான நேற்று காலை கோவிலில் பிரார்த்தனை உண்டியல் கோவில் கொடிமரம் அருகில் வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் நகர முக்கிய



பிரமுகர்கள் கலந்து கொண்டு உண்டியலில் காணிக்கை செலுத்தினர். தொடர்ந்து பக்தர்கள் பலர் பிரார்த்தனை உண்டியலில் காணிக்கை செலுத்தினர். மேலும் கோவில் கலையரங்கத்தில் அரசு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், பக்தி சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இரவு 10 மணியளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிம்ம வாகனம் மற்றும் வெள்ளி அன்ன வாகனத்தில் எழுந்தருளி கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

# நவரத்தினங்கள்



1...பிரைவசி

“பெரியம்மா! எனக்கு ஒரு வாரம் வேலை பெங்களூரில். நான் உங்க கூட இருக்கலாமா?” என்று போனில் தங்கை பெண் பெங்களூர் வருவதற்குப் பெர்மிஷன் கேட்டாள். சின்ன வயதில் வளர்ந்த முறையில் உரிமையுடன் தான் கேட்கிறாள். தவறு இல்லை. ஆனால் அதெல்லாம் பழங்காலம். அந்தக் காலம்! அந்தக் காலம்! இப்போது எல்லாமே மாறிவிட்டது. இரு அண்ணன்களும் அவளுடன் சகஜமாகப் பேசி சிரித்த காலங்கள் மலையேறி போச்சு. எப்ப பார்த்தாலும் லேப்டாப்பைச் சுமந்து கொண்டு ஏதோ பேசிக்கொண்டு நடப்பதையே பார்க்க நமக்கே எரிச்சலாக வரும். இதனை இவள் எப்படி நினைப்பாளோ?

இதற்கு மருமகளும் சம்மதிக்க வேண்டும். அவளோட ரூம் வாழ்வே தனிப்பிரைவசி. இவனே அவளிடம் பேசுவது சில நிமிடங்கள் தான். நமக்கு அடுப்படி தான். ஆனாலும் நாம் செய்யும் எதுவும் லட்சியம் இல்லை. அவர்கள் ஆர்டர் பண்ணுவதும் தெரியாது. சாப்பிடுவதும் தெரியாது. “என்னடா நான் செய்து விட்டேனே?” என்று சொல்லி சாப்பிடச் சொல்லுவேன். சில நேரம் சாப்பிட்டு விடுவான். ஆனால் இது கொஞ்ச நாள் தான். அதற்கு அப்புறம் அவனே சொன்னான் “சாப்பாடு செய் அம்மா என்று சொன்னால் மட்டுமே செய்தால் போதும்!” என்று சொல்லிவிடுவான். ஆனாலும் மனசு கேட்காது ஏதோ செய்து வைப்பேன் ஆனாலும் அதில் ஒன்று கூட செலவாகி இருக்காது காலையில் வரும் துணைதெய்வத்தை எடுத்துச் செல்லச் சொன்னால் சில சமயம் எடுத்துச் செல்வாள் பல சமயம் அவளும் “எனக்கு வேண்டாம் அம்மா தூர போட்டு விடலாம்!” என்பாள் பாத்ரூம் சென்றால் அதிகமாக பொருட்கள் இருக்கும். கண்ணில் படும். இதனை இரண்டு தனித்தனியாக யூஸ் செய்கிறார்களோ என்று தோன்றும். இது என்னத்துக்கு இப்படி செய்கிறார்கள் நன்றாக இல்லையே என்று தோன்றும்.

ஆனால் இது என்ன கண்றாவி என இவரும் என்னைக் கண்டிப்பார். “இதுதான் சிக்கனத்திற்கு எடுத்துக்காட்டா? இது என்ன குடித்தனம்!” என்பார்.ஆனாலும் வாய்மொழியாகத்தனக்குத்தானே சொல்லிக் கொண்டுதான் இருக்க வேண்டும். பொதுவாக பையனிடம் கேட்டால் “அதாம்மா! நான் ஆன்லைனில் ஆர்டர் பண்ணினேன். அவளிடம் சொல்ல மறந்து விட்டேன்.

அவளும் ஆர்டர் பண்ணி விட்டாள். அதுதான் என்பான். இதில் என்ன வேடிக்கை என்றால் அவன் ஆர்டர் பண்ணி வரும் பொழுது அவள் இல்லை அவள் ஆர்டர் பண்ணி வரும் பொழுது அவன் இல்லை வேறு ஏதோ பொருள் என்று வாங்கி நினைத்து வாங்கி வைத்து விட்டேன்!” என்பான். அவளிடம் இதைப் பற்றி கேட்கவே முடியாது.

“சரி! பார்த்து விட்ட பிறகு அவளிடம் கேட்டிருக்கலாமே என்றால், அது பிரைவேசி இல்லை அம்மா!” என்பான். இந்த வார்த்தைதான் ஒரு காலத்தில் நாம் கூட்டுக் குடும்பத்தை விட்டு விலகத் தோன்றிய ஆணிவேர். இது இப்போது வளர்ந்து அதன் ஆணிவேர் மட்டுமே நம்மைக் கொஞ்சம் அசைக்கிறது. பிரைவசி என்பது இருவருக்குள் தேடிய போது அது அழகாகத் தோன்றியது போல் இருக்கிறது. ஆனால் இப்போது அந்த வார்த்தை நம்மை கண்ணுக்கு வேறு உருவில் வருவது போல அல்லவா இருக்கிறது. வாழ்க்கையில் ஒட்டி வாழ்வதை அழகாக வாழ்ந்த நம் முன்னோர்கள் சிறந்தவர்களாகத் தோன்றினார்கள். ஆனால் இனி எல்லாம் நினைவுகளே மருந்துகளாக இருக்குமே தவிர பிரைவசி இன்னும் கிளைவிடும். அதன் கிளைகளைப் பார்க்கும் தைரியம் கூட இல்லை நமக்கு.

“பெரியம்மா ரொம்ப ஆழ்ந்து யோசனையா?” என்ற கேள்வியால் திரும்பவும் தன்னிலைக்கு வந்தேன். “இல்லையம்மா என்று சொன்றவள் “வாயேன்!” என்றேன். “அண்ணா மன்னியிடம் பேசிவிட்டுசொல் நீயே சொல்லாதே!” என்றாள். மெதுவாக பையனிடம் ஆரம்பித்து விஷயத்தைச் சொல்ல “இல்லை அம்மா! அதெல்லாம் சரிப் படாது! எங்க பிரைவசி கெடும். மேலும் “இக்காலத்தில் இரவில் தங்குவது என்பது இயலாத காரியம்!” என்றான். “நான் அவளுக்கு நல்ல அக்காமடேஷன் அரேஞ்ச் பண்ணிக்கிறேன் தங்கச் சொல்லி நானே அவளிடம் பேசிக் கொள்கிறேன்!” என்றான். சரி என்று அத்துடன் முடித்துக் கொண்டேன். “என்ன உலகம் இது எங்கே போகிறது?” என்று தெரிய வில்லை.

அந்தக் காலத்தில் ஏழு மணி ஆனால் வீட்டை பூட்டிக்கொண்டு உறங்கி விடுவார்கள். தன் குடும்பத்துடன் காலத்தை கழிப்பார்கள். ஆனால் இங்கு விடிய விடிய விழித்துக் கொண்டிருப்பவர்கள் ஏன் நம் பந்துக்கள் வந்து தங்கி இரவை கழிப்பது எப்படி என்று யோசிக்கிறார்கள் என்பது கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது.

ஏதாவது விசேஷமாக இருந்தால் மட்டுமே கூட்டத்தோடு கூட்டமாக இருக்கலாம். தனி மனிதனாக அவர்கள் வீட்டில் அவரைச் சந்திப்பது என்பது முடியாது போலும் என்று தோன்றியது.

பிரைவசிக்கு நாம் கொடுத்த உருவம் மாறி இப்பொழுது அதன் உருவம் நமக்கே தெரியவில்லையே!

BANUMATHINACHIYAR SIVAGIRI

# "ராஜநடை"



"சர்ர்ர்ர்"ரென்று வந்து நின்ற அந்த மாருதி வேனிலிருந்து இறங்கிய ஒருவன், சற்றுத்தள்ளி அமர்ந்திருந்த பிச்சைக்காரனை நோக்கிச் செல்ல,

அவனைத் தொடர்ந்து அந்த வேனிலிருந்து இறங்கிய இன்னொருவன், கையில் ஒரு உணவுப் பொட்டலத்தை எடுத்து வந்து முதலில் இறங்கியவனிடம் கொடுத்து, "இந்தா ரமேஷ்... இதை வாங்கி அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடுக்கிற மாதிரி போஸ் கொடு" என்றான்.

அதேபோல் அந்த ரமேஷூம் பிச்சைக்காரனிடம் நெருங்கி அவனிடம் அந்த உணவு பொட்டலத்தை நீட்டினான்.

கடும்பசியோடிருந்த அந்தப் பிச்சைக்காரன் ஆசையோடு அதை வாங்கிக் கொள்ள கை நீட்ட,

"யோவ்... யோவ்... இருய்யா... பறக்காதே... சார் மொதல்ல கேமராவை ரெடி பண்ணிட்டும்" என்ற ரமேஷ் அந்த இன்னொருவன் பக்கம் திரும்பி, "என்ன கோபி கேமரா ரெடியா?" கேட்டான்.

"ஒரே நிமிஷம்... ஒரே நிமிஷம்!" என்ற கோபி கேமரா லென்ஸ் வழியே இவர்களைப் பார்த்து விட்டு, தலையைத் தூக்கி மேலே வானத்தைப் பார்த்தான்.

"இங்க லைட்டிங் கொஞ்சம் அதிகமா இருக்குது.... அதோ... அங்க போயிடலாம்!" என்றான். மூவரும் அங்கிருந்து நகர்ந்து ஒரு மரத்தடிக்குச் சென்றனர்.

அங்கே ரமேஷ் உணவுப் பொட்டலத்தை கொடுக்க, பிச்சைக்காரன் வாங்க, கோபி போட்டோ பிடித்தான்.

"என்ன கோபி... போட்டோ எப்படி வந்திருக்கு?" ரமேஷ் கேட்டான்.

"ம்ஹூம்... நல்லாவே இல்லை... உன் முகத்துல இருட்டடிக்குது" என்ற கோபி சுற்றும்முற்றும் பார்த்து விட்டு, யோசனையோடு வேறோர் இடத்தில் சென்று நின்றான். "இங்க வாங்க... இங்க வெச்சு... ஒண்ணு எடுத்துப் பார்ப்போம்’

தன் கையிலிருந்த உணவு பொட்டலத்திலிருந்து வெளியே பரவிய வாசனை பிச்சைக்காரனின் வயிற்றுப் பசியை அதிகரித்தது.

அந்த கோபி குறிப்பிட்ட இடத்திற்கு ரமேஷூம், பிச்சைக்காரனும் சென்றதும், பிச்சைக்காரன் கையிலிருந்த உணவுப் பொட்டலத்தை "வெடுக்"கென்று பறித்து, மறுபடியும் கொடுப்பது போல் போஸ் கொடுத்தான் ரமேஷ்.

அந்த போட்டோவும் திருப்தி ஆகாததால் வேறு ஒரு இடத்திற்கு சென்று அங்கு நின்று புகைப்படம் எடுத்தனர்.

ம்ஹூம்.... அதுவும் ஒகே ஆகவில்லை.

உணவு பொட்டலத்தைக் கொடுப்பது. திரும்ப வாங்கிக் கொள்வது, மறுபடியும் கொடுப்பது, திரும்ப வாங்கிக் கொள்வது, என பலமுறை அந்த பிச்சைக்காரனை இங்குமங்கும் அலைய விட்டுப் பாடாய்படுத்தினர் அந்த இருவரும்.

போதாக்குறைக்கு அந்த பொட்டலத்திலிருந்து வெளிவந்த வாசனை வேறு பிச்சைக்காரன் பசி அடி வயிற்றுப் பசியைத் தூண்டிக் கொண்டேயிருந்தது.

சரியாக முக்கால் மணி நேரத்திற்கு பிறகு, "ஓ.கே. ப்பா... ஓ.கே!... இந்த ஸ்டில் ஓகே" என்றான் கோபி.

"அப்பாடா" என்ற ரமேஷ் பிச்சைக்காரன் பக்கம் திரும்பி, "போப்பா... போ!... அந்தப் பொட்டலத்தை எடுத்திட்டுப் போய் அப்படி எங்காவது ஓரமா உட்கார்ந்து சாப்பிடு" என்றான்.

அதுவரை அமைதி காத்த அந்த பிச்சைக்காரன், பலமாய்ச் சிரித்து விட்டு, "தம்பிகளா... நான் பிச்சைக்காரன்தான்! ஆனா... எனக்கும் தன்மானம் இருக்கு!... சுத்தமா பத்து பதினைந்து தடவை கொடுக்கிறது... திருப்பி வாங்கிக்கிறது... கொடுக்கிறது... திருப்பி வாங்கிக்கிறது... இப்படியே பண்ணிட்டு... கடைசில "போ... போய்ச் சாப்பிடு"ன்னு சொன்னா நான் சாப்பிட்டுடுவேன்!னு நெனச்சீங்களா?... இப்படி ஒரு சோத்தை நான் திங்கத்தான் வேண்டுமா?... இதை விடப் பட்டினி கிடந்ததே கூட சாகலாம்!" என்றபடி அந்த உணவுப் பொட்டலத்தை அங்கிருந்த ஒரு சுவற்றின் மீது வைத்து விட்டு ராஜ நடை நடந்தான் அந்தப் பிச்சைக்காரன்.



-முகில் தினகரன்

கோயம்புத்தூர்.

# புகழ்ச்சோழ நாயனார் வரலாறு

தொடர்-38

ஆன்மிக களஞ்சியம்



-சிவ.முத்து லட்சுமணன்

போச்சம்பள்ளி

இமயமலையின் பாறைகளில் கொடியை பறக்கவிட்ட சாகசக்காரர்களான ஆரம்பகால சோழர்களின் மையமாக உறையூர் இருந்தது. இது தலைநகராக இருந்ததால், நான்கு மடங்கு அரச படையின் வழக்கமான இயக்கம் இருந்தது. இந்த நகரம் அழகான உயரமான வீடுகளின் வரிசைகளைக் கொண்டிருந்தது. இந்த நகரத்தின் மையத்தில், ஒரு கிரீடம் போல, பிறை அலங்கரிக்கப்பட்ட கடவுளான பஞ்சவர்ணேஸ்வரரின் கோயில் இருந்தது, அவர் ஒரு முனிவருக்கு (உதங்க) ஐந்து வண்ணங்களில் தோன்றினார். இது இப்போது திருச்சிராப்பள்ளி நகரத்தின் மையத்தின் ஒரு பகுதியாக அமைகிறது.

புகழ் சோழர் என்ற பெயரே புகழைத் தரும், அவரது செயல்களால் அவருக்கு அழியாத புகழைப் பெற்றுத் தந்தவர், அந்தப் புகழ்பெற்ற நகரத்திலிருந்து ஆட்சி செய்த ஒரு மன்னர். அவர் ஒரு பேரரசர், சுற்றியுள்ள மற்ற மன்னர்கள் அவருக்கு விசுவாசமாக இருந்தனர். ஆனால் அவர் ஷம்பு மற்றும் அவரது ஊழியர்களின் சேவகர். சைவ மதம் அவரது ராஜ்ஜியத்தின் எல்லைகள் வரை அதன் நறுமணத்தைப் பரப்பியது. மூன்று கண்களைக் கொண்ட இறைவனின் அனைத்து கோயில்களிலும் மிகுந்த பக்தியுடன் வழிபாடு செய்யப்பட்டது. பக்தர்களின் தேவைகளை அக்கறையுள்ள மன்னர் கவனித்துக்கொண்டார். அமைதியும் செழிப்பும் ராஜ்ஜியத்திலும் மக்களின் மனங்களிலும் பரவியிருந்தது. பக்தர்கள் மீதான அவரது மரியாதை மிகவும் அதிகமாக இருந்தது, அவரது அரச யானை பெரிய கடவுளுக்குச் சொந்தமான பூக்களை மிதித்ததற்காக எரிபத்தரால் கொல்லப்பட்டபோது, அவர் எரிபத்தர் முன் விழுந்து, "குற்றத்திற்காக அந்த யானையைக் கொல்வது போதுமான நீதி அல்ல, தயவுசெய்து என்னையும் கொன்றுவிடுங்கள்!" என்று கூறினார்.



ஒருமுறை புகழ் சோழர் தனது அரசவையினர் மற்றும் குடும்பத்தினருடன் சோழர்களின் பாரம்பரிய நகரமான கருவூருக்குச் சென்றார். அவர் தனது அரண்மனையை அடைவதற்கு முன்பு, பெரிய மலையை வில்லாகக் கொண்ட கருவூரில் இறைவனை வணங்கினார். அவரது வலிமைக்கும் அன்பிற்கும் அடிபணிந்த ராஜ்யங்களிலிருந்து விலைமதிப்பற்ற ரத்தினங்களை அந்தந்த மன்னர்கள் பரிசாக அளித்தனர். ஒரே ஒரு மன்னர் மட்டுமே தனது மேலாதிக்கத்தை ஏற்கவில்லை என்பதை அவர் அறிந்தார். பாரம்பரியத்தின்படி, எதிரியின் கோட்டையை ஆக்கிரமிக்க தனது நான்கு மடங்கு படையை அவர் கட்டளையிட்டார். புகழ் சோழரின் வலிமைமிக்க மற்றும் துணிச்சலான படை கோட்டையையும் எதிரியையும் எளிதாகக் கைப்பற்றியது. அவர்கள் தங்கள் வீரத்தைக் காட்ட தலைகளின் குவியல்களை ராஜாவிடம் கொண்டு வந்தனர். சிவ பக்தரின் அடையாளமாக இருந்த, சிவப்பு நிற முடியுடன் கூடிய தலைகளில் ஒன்றைக் கண்டு ராஜா திகைத்துப் போனார்.

பழங்கால மன்னர்கள் போரிட்டு ராஜ்ஜியங்களின் எல்லைகளை விரிவுபடுத்துவது வழக்கம் என்றாலும், புகழ் சோழர் நடந்ததை நினைத்து குற்ற உணர்ச்சியில் மூழ்கினார். அவர் மிகுந்த சோகத்துடன், "நான் எப்படி இந்த சாம்ராஜ்யத்தை ஆளுகிறேன்? ஒரு பக்தரின் தலையை மழுங்கிய தலையைப் பார்த்த பிறகும், நான் எப்படி இன்னும் என் புகழைக் கெடுத்து ஆட்சி செய்கிறேன்?" என்று கேட்டார். தனது அமைச்சர்களுக்கு புதிய மன்னரை, தனது மகனை, கடவுளின் சரியான பாதையில் முடிசூட்டவும் வழிநடத்தவும் உத்தரவிட்டார். தனது அமைச்சர்கள் மற்றும் குடிமக்களின் துக்கத்திற்கு, அவர் தனது உயிரைத் துறக்க முடிவு செய்தார். புனித சாம்பலால் பூசப்பட்ட அவர், துண்டிக்கப்பட்ட தலையை ஒரு தங்கத் தட்டில் வைத்து, நெருப்பில் நுழைந்தார், இறைவனின் மகிமை அவரது இதயத்தை நிரப்பியது. அவர் இறைவனின் பாதங்களை அடைந்தார், அவரது புகழ் இப்போது அதன் உச்சத்தை எட்டியுள்ளது. தனது யானையின் தவறுக்காக எரிபத்தரை வணங்கிய புகழ்சோழரின் பக்தியும், தனது வீரர்களின் தவறுக்காக தனது உடலை தியாகம் செய்த புகழ்சோழரின் பக்தியும் மனதில் நிலைத்திருக்கட்டும்.

தொடரும்...

# கைசிக ஏகாதசி சிறப்புகள்



கார்த்திகை மாதம் வளர்பிறையில் வரும் ஏகாதசி கைசிக ஏகாதசி என்று கூறப்படுகிறது. இதன் பெருமைகளை நாம் காண்போமா?
கார்த்திகை மாத தேய்பிறை ஏகாதசி ரமா ஏகாதசி எனவும், வளர்பிறை ஏகாதசி பிரமோதினி ஏகாதசி எனவும் என்றும் அழைக்கப்படுகிறது. பிரமோதினி ஏகாதசியே கைசிக ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது.

**கைசிக ஏகாதசியின் சிறப்பு:**
இந்தக் கைசிகப் பண் ஏகாதசியன்று திருக்குறுங்குடி கோவிலில் குடி கொண்டுள்ள நம்பியின் மீது, பக்தியுள்ள பாணர் குலத்தைச் சேர்ந்த நம்பாடுவான் என்னும் பக்தரால் பாடப்பட்டதாகும். கைசிக ஏகாதசி வரலாற்றை நினைவு கூறுவதே இந்த ஏகாதசியின் சிறப்பாகும்.

**திருக்குறுங்குடி உற்சவம் :**
திருக்குறுங்குடியில் என்றும் கைசிக ஏகாதசி அன்று நம்பாடுவானின் கதை நாடகமாக நடித்துக் காட்டப்படுகிறது.
இந்த ஏகாதசி என்று விரதம் இருந்தால், ஆண்டில் அனைத்து ஏகாதசி விரதங்களும் இருந்த பலன் கிடைக்கும். அன்று துளசி இலை கொண்டு பகவான் ஸ்ரீ விஷ்ணுவை வணங்குவது மிகவும் சிறப்பாகும் நவரத்தினத்தை பகவானுக்கு சமர்ப்பிப்பதை காட்டிலும் உத்தமமாகும்.

கைசிகம் என்பது ஒரு வகை பண் ஆகும். இது வராக அவதாரத்தில் பூமாதேவித் தாயாருக்கு வராகப் பெருமாள் கூறியதாகும். அதாவது இந்தச் சரித்திரம் வராக மூர்த்தி பூமி பிராட்டியிடம் சொன்னது. வசுந்தரா தேவியிடம் சொன்னது.

பெருமாளுக்கு ஜாதி, குலம் போன்ற வித்தியாசம் கிடையாது. பக்தனா? என்பது மட்டும்தான் பகவான் பார்க்கிறான்.

திருப்பதி கோவிலுக்கு செல்கின்றவர்கள் பலர் பாமரர்கள். அவர்கள் இடைவிடாது நாம ஜெபம் கோவிந்தா! கோவிந்தா! என்று சொல்லிக் கொண்டே மலையேறுவர். பொது தரிசனத்தில் பகவான் கோவிந்தனை ஒரு சில நொடிகள் மட்டுமே தரிசிக்கின்றனர். பகவான் மலையப்பனோ அவர்களை திவ்யமாக கடாக்ஷிகிறார்.

திருக்குறுங்குடி என்ற திவ்ய தேசம், திருநெல்வேலிக்கு அருகே வானமாமலைக்கு அருகில் உள்ளது.

இதன் அருகில் மகேந்திரபுரி உள்ளது.
இந்தக் கோவிலில் பெருமாளின் பெயர் சுந்தர பரிபூரண நம்பி என்றும், அழகிய நம்பி என்றும் வடிவழகிய நம்பி என்றும் அழைப்பார்கள்.
பராங்குச நாயகி என்னும் நாயிகா பாவத்தில் நம்மாழ்வார் பாடும் பாசுரம்.

எங்ஙனேயோ
அன்னைமீர்காள்! என்னை
முனிவது நீர்
நங்கள் கோலத்
திருக்குறுங்குடி நம்பியை
நான் கண்ட பின்
சங்கினோடும் நேமியோடும்
தாமரைக் கண்களோடும்
செங்கனிவாய் ஒன்றினோடும்
செல்கின்றதென் நெஞ்சமே

அன்னைமீர்காள்! என்னைப் பெற்ற நீங்கள் எனக்கு விருப்பமானதைச் செய்யாமல், என்னை நினைத்து உகக்க வேண்டியிருக்க இப்படிக் கோபப்படுவது ஏன்? நம் குடிக்குத் தனித்துவம் வாய்ந்தவராய், அழகிய திருமேனி உடையவராய், திருக்குறுங்குடியில் கல்யாணகுண பூர்த்தியையுடைய நம்பியை நான் அனுபவித்தபின் அவருடைய சங்கினோடும், திருவாழியோடும், தாமரைபோலே அழகாய் இருக்கும் திருக்கண்களோடும் சிவந்த கனிபோலே தனித்துவமாய் இருக்கும் திருவதரத்தோடும் என் நெஞ்சு ஆசையுடன் செல்கிறது.
என்ற அனுபவித்து பாடுகிறார்.

திருக்குறுங்குடி அருகில், பாணர் குலத்தில் பிறந்த நம்பாடுவான் என்பவர் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு ஏகாதசியும் விரதம் இருந்து அன்று இரவு, திருக்குறுங்குடி கோவில் வாசலில் நின்று நம்பியை தியானித்து பண்வாசிப்பது வழக்கம். ஒரு நாள் கோவில் திறந்ததும் அர்ச்சகர் அளிக்கும் பிரசாதத்தை பெற்றுக் கொண்டு தன்னுடைய துவாதசி பாரணையை முடித்துக் கொள்வார்.

கார்த்திகை மாதம் பௌர்ணமிக்கு பிறகு வரும் ஏகாதசி அன்று வழக்கம்போல் காட்டு வழியாக செல்லும் பொழுது நம்பாடுவானை ஒரு பிரம்ம ராட்சசன் பிடித்துக் கொண்டான்.
பிரம்ம ராட்சசன் நம்பாடுவானை சாப்பிடத் தயாராக இருந்தது.
நம்பாடுவான் பிரம்ம ராட்சசனிடம் நான் திருக்குறுங்குடி சென்று நம்பிக்கு கைசிகப் பண்ணில் பாட்டுப் பாடி அவரை வழிபாடு செய்து விட்டு வந்து உனக்கு இரையாகிறேன் என்று கூறினார். ஆனால் ராட்சசன் அவருடைய வார்த்தைகளை நம்பவில்லை.
நம்பாடுவான் 18 சத்தியங்களை பிரம்ம ராட்சசனிடம் செய்தான்.
அதற்கு நம் பாடுவான் நான் திரும்பி வராவிட்டால், சத்தியத்தை மீறியவன் எந்த நரகத்தை சென்று அடைவானோ அந்த நரகத்தை அடைவேன் என்று கூறினார்.
பிறர் மனைவியை ஆசைப்பட்டவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன், ஆனால் ராட்சசனோ எதற்கும் மசியவில்லை.

நான் நம்பாடுவான் ஒவ்வொரு சத்தியமாக செய்து கொண்டே போகிறான். வேதம் படித்தவர்களை கொல்வது, மது அருந்துவது, தான் நல்ல உணவை உண்டு விட்டு விருந்தினர்களுக்கு, சுமாரான உணவை தருபவன், எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன் என்றான்.

ஒருவன் நிலத்தை தானம் கொடுத்து விட்டு, அந்த நிலத்தைய அபகரித்துக் கொள்பவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

இளம் பெண்ணை திருமணம் செய்து கொண்டு அவனை ஏமாற்றியவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

அமாவாசை, ஏகாதசி மற்றும் சிரார்த்த நாட்களில் தன் மனைவியுடன் தாம்பத்யம் வைத்துக் கொள்பவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

உண்ட வீட்டிற்கே எவன் துரோகம் நினைக்கின்றானோ அவனடையும் நரகத்தை நான் அடைவேன்.

தன்னுடைய பெண்ணை ஒருவருக்கு திருமணம் செய்து கொடுப்பதாக சொல்லிவிட்டு, வேறு ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டால், அவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

தினமும் குளிக்காமல் உணவருந்துபவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

ஒருவருக்கு இந்த நாளில் இந்த பொருளைத் தருகிறேன் என்று வாக்கு கொடுத்துவிட்டு, அதே தினம் அந்த நபர் வந்தவுடன் தரமாட்டேன் என்று கூறுபவன் எந்த நரகத்தை அடைகிறானோ அந்த நரகத்தை அடைவேன்.

நண்பனின் மனைவியை அபகரித்தவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

ராஜபத்தினி குரு பத்தினியை அபகரித்தவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

இரண்டு மனைவிகளை திருமணம் செய்து கொண்டு, ஒரு மனைவியிடம் மட்டுமே அன்பு செலுத்துபவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

பிரம்ம ராட்சசன் இவ்வாறு கூறியதும் நம்பாடுவான் அவனிடம், நான் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி பகவானை நோக்கி பாடி விட்டு வருகின்றேன். நான் உனக்காக பகவானிடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றேன் என்று கூறி, பிரம்ம ராக்ஷசனுக்காக நம்பாடுவான் கைசிகப் பண்ணில் பாடி வேண்டிக் கொண்டான். பெருமாளுடைய கடாக்ஷத்தால் அந்த பிரம்ம ராக்ஷசனும் சாப விமோசனம் பெற்றான்.

பெருமாள், நம்மை பாடுபவன் என்ற காரணத்தினால் அவனுக்கு "நம்பாடுவான்" என்ற பெயரளித்தார்.

நம்பாடுவான் நீண்ட காலங்கள் வாழ்ந்து பெருமாளுக்கு கைங்கரியம் செய்து முக்தி அடைந்தான்.



ஹரே கிருஷ்ணா
**கீதா வீரராகவன்**
ஸ்ரீரங்கம்.

# தினம் ஒரு தலைவர்கள் துரைச்சாமி வரலாறு

துரைச்சாமி சிவகங்கைச் சீமையில் ஆங்கிலக் கிழக்கந்தியக் கம்பெனியர்க்கு எதிராக 1785 முதல் 1801 முடியப் போராடி தம் இன்னுயிர் ஈந்த சின்ன மருதுவின் மகன்.

**வாழ்க்கைச் சுருக்கம் :**
சின்ன மருது மகன் துரைச்சாமியின் இயற்பெயர் முத்து வடுக நாத துரை என்றும் பின்னர் அப்பெயர் துரைச்சாமி என மருவியது என்றும் சிவகங்கை அம்மானை எனும் நூல் மூலம் அறியமுடிகிறது. துரைச்சாமி உட்பட 11 விடுதலைப் போராளிகளைப் பிடித்துக்கொடுத்தால் 1000 கூலிச்சக்கரங்கள் ( 18ம் நூற்றாண்டு நாணயம்) பரிசாக வழங்கப்படும் என்று ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனித் தளபதி கர்னல் அக்னியூ 1801, அக்டோபர் 1 இல் சிவகங்கை குடிமக்களுக்கு ஒரு பொது அறிவிப்பை பிரகடனப்படுத்தினார். மருது சகோதரர்கள் 1801, அக்டோபர் 24 இல் தூக்கிலிடப்பட்ட பின்னர் 15 வயதே ஆன துரைச்சாமி உட்பட 73 விடுதலைப் போராளிகளை மலேயாவின் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவிற்கு (இன்றைய பினாங்கு) 1802, பெப்ரவரி 11 இல் தளபதி வெல்ஸ் நாடுகடத்தி அனுப்பிவைத்தார்

**பினாங்கில் துரைச்சாமி :**

1818 ஆம் ஆண்டு தளபதி வெல்ஸ் (COLONEL WELSH) பினாங்குக்குச் சென்றபோது உடல் நலம் குன்றிய தோற்றத்துடன் காணப்பட்ட துரைச்சாமியைக் காண நேரிட்டது. துரைச்சாமியின் இத்தோற்றம் வெல்ஸ் தம் இதயத்தில் கத்தி பாய்ந்தது போன்று இருந்தது என குறிப்பிடுகின்றார்.

**துரைச்சாமியின் இறுதி நாட்கள் :**

கிழக்கிந்திய கம்பெனியின் உயர் அதிகாரி ஜெனரல் ஜேம்ஸ் வெல்ஷ், 1818ல் பினாங் வந்து இறங்கினார். ஓய்வெடுப்பதற்காக பினாங்கில் தங்கியிருந்த வெல்ஷைப் பார்க்க ஒரு பார்வையாளன் காத்திருந்தான். அவன் ஒரு கிழவன். தோல் சுருங்கி, தலை நரைத்து, உடல் மெலிந்து, கைகள் நடுங்க நின்று கொண்டிருந்த அந்தக் கிழவனை உற்றுப் பார்த்தான் ஜெனரல் வெல்ஷ்.

**"யார்?'**

கிழவனால் பதில் சொல்ல முடியாமல் உதடுகள் நடுங்கின. தன்னை வெல்ஷ் அடையாளம் கண்டு பிடித்து விடுவான் என்ற நம்பிக்கையோடு, ஆதரவற்ற கண்களால் ஜெனரல் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் கிழவன்.

அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"யார் நீ?' இம்முறை கோபத்தில் வெடித்தது வெல்ஷின் குரல். பயத்தில், ஆடிப்



போனான் கிழவன். கைகளை மடித்து, உடம்போடு ஒட்டிக் கொண்டு, கூனிக் குறுகிப் போய், உதடுகளும், கண்களும் துடிக்க, ஒரே ஒரு சொல் வெளிப்பட்டது கிழவனிடமிருந்து...

**"துரைசாமி!'**

அந்தப் பெயர் வெல்ஷின் முகத்தில் அறைந்தது. இவனா? இவனா? அந்த துரைசாமியா இவன்?

பதினைந்து வயது பையனாக, 1802ல் வெளி உலகக் கொடுமையின் சாயல் கூடப் படியாத குழந்தை முகத்தோடு, தூத்துக்குடியில் கப்பலேற்றப்பட்டு, தீவாந்தர தண்டனைக்காக நாடு கடத்தப்பட்ட அந்தத் துரைசாமியா?

தடித்த ஆற்காடு நாணயத்தைத் தன் இரண்டு விரல்களால் வளைத்து எறிந்த பெரிய மருதுவின் பரம்பரையில் உதித்த துரைசாமியா?

எவ்வளவு தொலைவில் எதிரி இருந்தாலும், குறி தப்பாமல் ஈட்டி எறியும் வீரன்... கர்னல் பதவியில் இருந்த போது வெல்ஷிக்கு வளறித்தடி சுழற்றும் வித்தையைக் கற்றுக் கொடுத்த மாவீரன் சின்ன மருதுவின் மகன் துரைசாமியா?

துரைசாமியைப் பார்த்து இரக்கப்பட்டான் ஜெனரல் ஜேம்ஸ் வெல்ஷ்; ஆனால், கம்பெனி விதிகளுக்கு எதிராக அவனால் துரைசாமிக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. அவன் வெள்ளை அதிகாரி. ஒரு காலத்தில் அவன் மருதுபாண்டியரின் நண்பன். பிறகு அவர்களை வேட்டை நாயாகத் துரத்திப் பிடித்து, தூக்கில் போட்டவனும் அவன் தான்.

கம்பெனி உத்தரவின் படி துரைசாமியைத் தூத்துக்குடி வரை கொண்டு சென்று, கப்பலேற்றி, "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' என்ற தீவுக்கு நாடு கடத்தியவனும் அவன் தான்.

பதினாறு ஆண்டுகளில், தீவாந்தர தண்டனையும், கொத்தடிமை வாழ்க்கையும் ஆங்கிலக் கொடுமைகளும் ஒரு இளைஞனை கிழவனாக்கி விட்ட கொடுமை வெல்ஷை உலுக்கியது. ஆனாலும், அவன் என்ன செய்வான். பாவம்!

இந்த மண்ணில் போராடி வீழ்ந்து, சருகாகி, உரமாகி மக்கிப்போன பல குடும்பங்களை, சிதிலமாகிப் போன அவர்களது பரம்பரைகளை ஒரு நொடி ஈரத்தோடு எண்ணிப் பார்க்க நமக்கு நேரமில்லையே!

பினாங்கில் வெல்ஷும், துரைசாமியும் சந்தித்த அந்த நிகழ்ச்சிதான் மருதுபாண்டியர் வாரிசு பற்றி ஆதார பூர்வமாகக் கிடைத்த கடைசிச் செய்தி!

இன்னும் எத்தனை, எத்தனை துரைசாமிகளோ!

1891, மே 18 ஆம் நாள் போராளி துரைச்சாமியின் மகன் மருது சேர்வைகாரன் என்பான் மதுரைக் கலக்டரிடம் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்த மனுவில் துரைச்சாமியின் இறுதி நாட்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். துரைச்சாமி பினாங்கிலிருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்டார். அவர் ஆங்கில அரசிடம் பாதுகாப்புக் கோரி மதுரையில் தங்கியிருக்க அனுமதி கேட்டிருந்தார். ஆனால் திடிரென துரைச்சாமி நோய்வாய்ப்பட்டு சிவகங்கைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு காலமானார் என்று அவரது மகன் குறிப்பிடுகின்றார்...

# ஒரே நாளில் வெளியாகும் 10 திரைப்படங்கள்




தமிழில் இன்று (நவ. 28) 10 திரைப்படங்களும், 2 படம் ரீ-ரிலீசும் செய்யப்படுகிறது.தமிழ் சினிமாவில் வெளியாக உள்ள புதுப்படங்கள் மற்றும் மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்ற படங்களின் ரீ-ரிலீஸ் என நாளை திரைக்கு வரவுள்ள படங்கள் குறித்து பார்ப்போம்... அதன்படி, தமிழில் நாளை (நவ. 28) 10 திரைப்படங்களும், 2 படம் ரீ-ரிலீசும் செய்யப்படுகிறது.

**தேரே இஷ்க் மே**

ஆனந்த் எல் ராய் இயக்கத்தில் தனுஷ் , க்ரித்தி சனோன் நடித்துள்ள திரைப்படம் 'தேரே இஷ்க் மே' . ஏ.ஆர் ரஹ்மான் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். 'தேரே இஷ்க் மே' ஒரு தீவிரமான காதல் கதையாகும், இது தனுஷ் மற்றும் கிருத்தி சனோனை சுற்றி நகர்கிறது.

**ரிவால்வர் ரீட்டா**

கீர்த்தி சுரேஷ் கதை நாயகியாக நடித்துள்ள 'ரிவால்வர் ரீட்டா' படத்தை தி ரூட், தி ஃபேஷன் ஸ்டூடியோஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. சரஸ்வதி சபதம் படத்தை இயக்கிய ஜே.கே. சந்துரு இப்படத்தை எழுதி இயக்கியுள்ளார். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

**ஐபிஎல்**

பிரபல யூடியூப்பரும், சர்ச்சைகளுக்கு பெயர் பெற்றவருமான டிடிஎஃப் வாசன் தற்போது படம் ஒன்றில் நடித்து உள்ளார். அப்படத்திற்கு ஐபிஎல் (Indian Penal Law) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இப்படத்தில் நடிகர் கிஷோர் மற்றும் நடிகை அபிராமி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து உள்ளனர். கருணாநிதி இயக்கி உள்ள இப்படத்தை ஜி.ஆர். மதன் கிருஷ்ணன் தயாரித்துள்ளார்.

**வெள்ளகுதிர**

*நிஜம் சினிமா* தயாரிப்பில் சரண்ராஜ்செந்தில்குமார் இயக்கத்தில் ஹரிஷ் ஓரி, அபிராமி போஸ் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'வெள்ளகுதிர'.

**BP 180**

ரேடியன்ட் இன்டர்நேஷனல் மூவிஸ் மற்றும் அதுல் இந்தியா மூவிஸ் சார்பில் பிரதிக் டி சத்பர் & அதுல் எம் போசாமியா இணைந்து தயாரித்துள்ள BP180 படத்தை ஜே.பி இயக்கி உள்ளார். தன்யா எஸ் ரவிச்சந்திரன், மறைந்த நடிகர் டேனியல் பாலாஜி, கே.பாக்யராஜ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

**Friday**

Dakdam Motion Pictures சார்பில் அனிஷ் மசிலாமணி தயாரிப்பில் ஹரிவெங்கடேஷ் இயக்கத்தில் உருவாகி உள்ள படம் FRIDAY. இந்த படத்தில் மைம் கோபி, KPY தீனா, அனிஷ் மாசிலாமணி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

**ஒண்டிமுனியும் நல்லபாடனும்**

திருமலை புரொடக்ஷன் சார்பில் கா.கருப்புசாமி தயாரித்துள்ள ஒண்டிமுனியும் நல்லபாடனும் படத்தை சுகவனம் எழுதி இயக்கியுள்ளார்.

**அஞ்சான்**

திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் சார்பில் லிங்குசாமி இயக்கத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் அஞ்சான். இந்த படத்தில் சூர்யா, சமந்தா ரூத் பிரபு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

**அட்டகாசம்**

சரண் இயக்கத்தில் நடிகர் அஜித், பூஜா நடிப்பில் 'அட்டகாசம்' திரைப்படம் 2004-இல் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது.

நடிகர் ராஜசேகர் மகள் சிவாத்மிகா தற்போது தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் நடித்து வருகிறார். அவர் சேலையில் கிளாமர் ஆக போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். இதோ பாருங்க.



# பேட்ட படத்திற்கு பிறகு ரஜினியுடன் இணையும் விஜய் சேதுபதி?

'ஜெயிலர்' முதல் பாகத்தில் நடித்தவர்களே இரண்டாம் பாகத்திலும் நடிப்பதாக கூறினாலும், ரஜினிகாந்த், ரம்யா கிருஷ்ணன் மற்றும் சிவராஜ்குமார் தவிர்த்து பிற நடிகர்களின் விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

சமீபத்தில் 'ஜெயில் 2' படத்தின் தனது படப்பிடிப்பை முடித்ததாக தெரிவித்த நடிகர் ரஜினிகாந்த் இப்படம் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 12-ந்தேதி 'ஜெயிலர்2' வெளியாகும் என தெரிவித்து இருந்தார்.

இதனிடையே, 'ஜெயிலர்2' படத்தில் சந்தானம் நடிக்க இருப்பதால் நகைச்சுவைக்கு பஞ்சம் இருக்காது என கூறப்பட்டது. இந்த நிலையில், நடிகர் விஜய் சேதுபதியும் இந்த படத்தில் இணைந்துள்ளதாகவும், கோவா படப்பிடிப்பின் போது அவர் படப்பிடிப்பு தளத்தில் இணைந்ததாகவும் தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

இருப்பினும், இத்தகவல் தொடர்பாக விஜய் சேதுபதி மற்றும் படக்குழுவினரிடமிருந்து எந்த தகவலும் வெளியாகவில்லை. உறுதிப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை 'ஜெயிலர் 2 ' படத்தில் விஜய்சேதுபதி இணைவது உண்மையானால், கார்த்திக் சுப்பராஜின் பேட்ட (2019) படத்திற்குப் பிறகு விஜய் சேதுபதி ரஜினிகாந்துடன் இணைந்து பணியாற்றும் இரண்டாவது படமாக இது இருக்கும்.



# வெளியானது லாக்டவுன் படத்தின் டிரெய்லர்



இப்படத்தின் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது.

இத்திரைப்படம் அடுத்த மாதம் 5-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

நடிகை அனுபமா பரமேஷ்வரன் நடிப்பில் விரைவில் திரையரங்கிற்கு வர இருக்கும் படம் 'லாக் டவுன்'. லைகா ப்ரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இந்த படத்தை அறிமுக இயக்குநரான ஏ.ஆர் ஜீவா இயக்கியுள்ளார்.

இப்படத்திற்கு ரகுநந்தன் மற்றும் சித்தார்த் விபின் ஆகியோர் இணைந்து இசையமைக்க சக்திவேல் ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார்.

இத்திரைப்படம் கொரோனா காலக்கட்டத்தில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்ட படமாகும். இப்படத்தின் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து இத்திரைப்படம் அடுத்த மாதம் 5-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்நிலையில், 'லாக் டவுன்' படத்தின் டிரெய்லரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டுள்ளார். நடுத்தர குடும்பத்தை சேர்ந்த பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சனை அதன்பிறகு கொரோனாவால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு என சுழலும் கதையில் அப்பெண்ணிற்கு ஏற்பட்ட பிரச்சனை என்ன? அதில் இருந்து அவர் எப்படி தப்பிக்கிறார் என்பதே இந்த டிரெய்லர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# LIK படத்தின் 2வது சிங்கிள் "பட்டுமா" வெளியானது




'பட்டுமா' பாடல் வரிகளை படத்தின் இயக்குநர் விக்னேஷ் சிவன் எழுதியுள்ளார்.

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'LIK' (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி). இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமானும், எஸ்.ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர்.

நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்திற்கான பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து அடுத்த மாதம் 18-ந்தேதி இப்படம் வெளியாக உள்ளது.

'LIK' படத்தின் 2வது பாடல் 'பட்டுமா' இன்று மாலை வெளியானது. இதுதொடர்பாக போஸ்டர் ஒன்றை வெளியிட்டு படக்குழு முன்னதாகவே தெரிவித்து இருந்த நிலையில், ப்ரோமோவை வெளியிட்டனர்.

இந்த நிலையில், பட்டுமா பாடல் வெளியாகியுள்ளது. அனிருத் இசையில் உருவாகி உள்ள 'பட்டுமா' பாடல் வரிகளை படத்தின் இயக்குநர் விக்னேஷ் சிவன் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



சன் டிவி மூன்று முடிச்சு சீரியலில் ஹீரோயினாக நடிப்பவர் ஸ்வாதி கொண்டே. அவர் ட்ரெண்டி உடையில் போஸ் கொடுத்த லேட்டஸ்ட் புகைப்படங்களை பாருங்க.

# கதாநாயகியாக அறிமுகமாகும் ஜோவிதா லிவிங்ஸ்டன்




முக்கிய கதாபாத்திரத்தில் சோனியா அகர்வால், அயலி புகழ் மதன், ஆதர்ஷ் மற்றும் லிவிங்ஸ்டன் நடிக்கிறார்கள்.
இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் முதல் வாரத்தில் கோபிசெட்டிபாளையத்தில் தொடங்க உள்ளது.
தமிழ் சினிமாவின் பிரபல நடிகர் லிவிங்ஸ்டன். இவரது மகள் ஜோவிதா லிவிங்ஸ்டன். இவர் தந்தையுடன் சேர்ந்து பாடல்களை பாடி சமூக வலைத்தளங்களில் பிரபலமானவர்.
ஜோவிதா லிவிங்ஸ்டன் தற்போது கே.எஸ்.கிஷான் இயக்கத்தில் கதாநாயகியாக அறிமுகமாக உள்ளார். இப்படத்திற்கான தொடக்கவிழா நேற்று நடைபெற்றது.
இது ஒரு ஹாரர் திரில்லர் படம் என்று கூறப்படும் நிலையில், இதில் கதாநாயகியாக ஜோவிதாவும் முக்கிய கதாபாத்திரத்தில் சோனியா அகர்வால், அயலி புகழ் மதன், ஆதர்ஷ் மற்றும் லிவிங்ஸ்டன் நடிக்கிறார்கள். மேலும் இவர்களுடன் சேர்ந்து விஜே விஜய், கிருத்திகாவும் நடிக்கிறார்கள்.
விக்னேஷ் ராஜா இசையமைக்கும் இப்படத்திற்கு சங்கீத் மணிகோபால் ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்.
இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் முதல் வாரத்தில் கோபிசெட்டிபாளையத்தில் தொடங்க உள்ளது. அதனைத் தொடர்ந்து சென்னை மற்றும் பாண்டிச்சேரியில் ஒரே செட்யூலாக நடத்த திட்டமிட்டுள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது.



இந்த ஆண்டு தமிழ் சினிமாவில் மாபெரும் வெற்றியடைந்த படங்களில் ஒன்று குடும்பஸ்தன். இப்படத்தில் கதாநாயகியாக நடித்து தமிழ் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துள்ளார் நடிகை சான்வி மேக்னா. இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் இவர், அவ்வப்போது தனது போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிடுவார். இந்த நிலையில், சுவிட்சர்லாந்து சென்றுள்ள நடிகை சான்வி மேக்னா, அங்கு எடுத்துக்கொண்ட புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

# ராஜா வீட்டு கன்னுக்குட்டி

## திரைவிமர்சனம்




சிங்கப்பூரில் வசிக்கிற நாயகன் ஆதித் சிலம்பரசன் சொந்த ஊருக்கு வந்ததும் தனது காதலியை தேடிப் போகிறார். அவளுக்கு வேறு ஒருவருடன் திருமணமாகிவிட்ட விவரம் தெரிந்து அதிர்ச்சியடைகிறார். அந்த அதிர்ச்சியிலிருந்தும் கவலையிலிருந்தும் அவனை மீட்க அவனது நண்பன் தனது தங்கையை திருமணம் செய்து வைக்கிறார்.
நாட்கள் நல்லபடியாக நகர முரளியின் மனைவி தாய்மையடைகிறாள். அந்த சந்தர்ப்பத்தில் தனது முன்னாள் காதலியைப் பற்றி சில விஷயங்கள் முரளியின் கவனத்துக்கு வருகிறது. அவளுக்கு திருமணமான விவரம் தெரிந்தபோது அதிர்ச்சியடைந்ததை விட பல மடங்கு அதிர்ச்சியடைகிறார்.
இறுதியில் ஆதித் சிலம்பரசன் அதிர்ச்சி அடைய காராரணம் என்ன? அவரது வாழ்க்கை என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் ஆதித் சிலம்பரசன், பெண்ணின் குணமறிந்து காதலில் விழும்போதும், நண்பனின் தங்கையை திருமணம் செய்யும்போதும், நடிப்புக்குப் புதியவர் என்பது தெரியாதபடி உணர்வுகளை வெளிப்படுத்தி நடித்திருக்கிறார். காதலியாக நடித்திருக்கும் காயத்ரி ரெமா, நாயகனுடன் காதல், வேறொருவருடன் வாழ்க்கை, என நடிப்பில் கவனிக்க வைத்திருக்கிறார். வர்ஷிதா, நாயகனுக்கு நண்பனாக வருகிற தம்பி சிவன், அனுகிருஷ்ணா, சரத், ஆகியோர் கொடுத்த வேலையை செய்து இருக்கிறார்கள்.

**இயக்கம்**

காதல் கதையே மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் ஏ.பி. ராஜீவ். மனிதர்களை சந்தர்ப்பச் சூழ்நிலை என்னவெல்லாம் செய்யும் என்பதை சொல்ல வந்திருக்கிறார். நாயகன் காதலியை தவிக்கவிட்டு வெளிநாடு சென்றதற்கான காரணம் தெளிவாக இல்லை. லாஜிக்கே இல்லாமல் நகரும் சில காட்சிகள் படத்திற்கு பலவீனம்.

**இசை**

டைசன் ராஜு இசையில் பாடல்களும் பின்னணி இசையும் சுமார் ரகம்.

**ஒளிப்பதிவு**

ஹரிகாந்த்தின் ஒளிப்பதிவை ஓரளவுக்கு ரசிக்க முடிகிறது.

# வசூல் குவிக்கும் 'மாஸ்க்' எவ்வளவு தெரியுமா?




தெலுங்கு நடிகையான ருஹானி சர்மா கதாநாயகியாக நடித்துள்ளார்.
ஜி.வி.பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.
அறிமுக இயக்குனர் விகர்னன் அசோக் இயக்கத்தில் கவின் நடித்துள்ள படம் 'மாஸ்க்'. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையும், பாடகியுமான ஆண்ட்ரியா, வெற்றிமாறனின் கிராஸ் ரூட் பிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளார்.
இப்படத்தில் தெலுங்கு நடிகையான ருஹானி சர்மா கதாநாயகியாக நடித்துள்ளார். இவர்களை தவிர, சார்லி, பாலா சரவணன், விஜே அர்ச்சனா, சந்தோஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜி.வி.பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.
இப்படம் தொடர்பான டிரெய்லர் மற்றும் பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. இதனை தொடர்ந்து 'மாஸ்க்' படம் கடந்த 21-ந்தேதி உலகம் முழுவதும் வெளியானது.
இந்த நிலையில், 'மாஸ்க்' படம் பாக்ஸ் ஆபிஸில் செய்த வசூல் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, 'மாஸ்க்' படம் ரூ.5 கோடிக்கும் அதிகமான வசூலை குவித்துள்ளதாக கூறப்படுகிறது.



**சீரியல் நடிகை ரவீனாவின் ஹாட் பீச் போட்டோஷூட். ஹோம்லியாக இருந்தவர் இப்படி மாறிட்டாரே?**

# ரஜினியுடன் இணையும் தேசிய விருது பெற்ற படத்தின் இயக்குநர்



கமல்ஹாசன் தயாரிப்பில் ரஜினிகாந்த் நடிக்கும் 173-வது படத்தை சுந்தர் சி இயக்கப்போவதாக இருந்தது. ஆனால் சில காரணங்களால் அப்படத்தில் இருந்து சுந்தர் சி விலகினார் . சுந்தர் சி விலகலுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வரும் நிலையில், அவர் தற்போது 'மூக்குத்தி அம்மன்-2' படத்தை இயக்குவதில் பிசியாக இருக்கிறார்.
இதற்கிடையில் ரஜினியின் புதிய படத்தை இயக்கப் போவது யார்? என்பது குறித்து மிகுந்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இதனிடையே, ரஜினிகாந்த் அவர்களுக்கு ஏற்றார் போல், பிடித்தார் போல் கதை அமைய வேண்டும். அதுவரை கதைக்கேட்டுக்கொண்டு இருப்போம் என கமல்ஹாசன் கூறியிருந்தார்.
இந்த நிலையில், 'பார்க்கிங்' படத்தை இயக்கி கவனம் ஈர்த்த ராம்குமார் பாலகிருஷ்ணன் தான், ரஜினி-கமல் கூட்டணி படத்தை இயக்கப்போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. தற்போது சிம்பு நடிப்பில் புதிய படத்தை இயக்க இருந்த ராம்குமார் பாலகிருஷ்ணன், இப்படத்தை இயக்கலாம் என்று கூறப்படுகிறது. மேலும், நடிகை சாய் பல்லவி மற்றும் நடிகர் கதிர் இப்படத்தில் முக்கிய நடிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல் வெளியாக உள்ளது.
இதனால் இனிவரும் நாட்களில் 'தலைவர் 173' குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## எங்கோ தொலைந்த ஒருவன்

ஒரு மேகம் கலைந்து
செல்வது போல
என்னை எங்கேயோ
தோலைத்துவிட்டேன்
எங்கே என்று
தெரியவில்லை

என் நேசமானவர்களுக்கு
என் வாசம் தெரியும்
சுவாசம் இருக்கிறதா என்பதும்
புலப்படும் எனக்குத்தான் அது
ஒன்றும் ஞாபகமில்லை

ஒவ்வொரு மானுட
முகங்களிலும்
நான் காண மாட்டேன்
என் அடையாளங்கள்
அப்படியாக
சொல்லக்கூடியதும் அல்ல
மரக்கிளைகளின் சாயலில்
விழுதுகளால் தாங்கிப்
பிடித்தவனாக இருக்கலாம்

ஒருவேளை நான்
அமர்ந்திருந்த நதிக்கரையில்
சுற்றித்திரியும் தட்டான்களிடம்
விசாரித்துப் பாருங்கள்
ஒரு மழைப்பூச்சியின்
கரங்களில் மன்றாடிக்
கொண்டிருக்கலாம்

நதியோர நாணல்களில்
வருடிக் செல்லும்
தென்றலுடன் ஏதாவது
கதைத்துக் கொண்டிருப்பேன்
உற்று நோக்கி என்னைச்
சிறைப்பிடியுங்கள்

தயவுசெய்து என்னை
எந்த ஒரு பூட்டிய வீட்டிலும்
யாசிக்காதீர்கள்
நூலகங்களில் உள்ள
ஏதோவொரு பழுப்போறிய
பக்கத்தில் ஒரு
காதுமடிக்கப்பட்ட காகிதமென
சில கவிதை வரிகளைத்
தின்று சீரணித்தவனாக
அடிக்கோடிட்டு பாதுகாப்பாக
உதிரக் காத்திருக்கலாம்

**ஜவஹர் பிரேம்குமார்,**
பெரியகுளம்.

## கடல் நீர்

மூன்று பங்கு கடல் கொண்ட
நாடு ஒரு பக்கம் மலையால்
சூழ்ந்தது நாடு இவைகள்
நாட்டுக்கு இயற்கை
அரணாகும்

கடல் நீர் ஆவியாகி நீ
ராவி யாகும் கார்மேகமாக
வான வீதியில் வல காற்றில்
தவழ்ந்து மிதந்து வரும்
வரும் மேகம்

மரம் காதலியை குளிர்
பார்வை வீசினால் மேக
காதலன் நில மகள் மீது
மழையாக கொட்டோ
கொட்டென கொட்டும்
கொட்டும்

வான் கொடையால் நிலமகள்
மனம் மகிழ்வாள் மேக
காதலின் காதல் பரிசு வான்
மழை நின்ற நில மகள்
தெளிவடைவாள்

மேக காதலன் அவசரப்பட்டு
பெரிய நீர்க்கட்டி நீரிடியாகும்
சிறு சிறு நீர்க்கட்டிகள் அத்தி
கட்டி ஆலங்கட்டி ஆகும்
ஆகும்

காதல் பரிசை காதலன்
கொட்டி தீர்ப்பான் உலக
உயிரினங்கள் யாவும்



அடிப்படை
தேவைகளை
பூர்த்தி செய்து
வாழும் வாழும்

**பேராசிரியர் முனைவர் வேலாயுதம் பெரியசாமி**

## கிராமமும், பட்டணமும்

உழைத்தவர்கள்
ஊமையானார்கள்....

கொடுத்தவர்கள்
குபேரனார்கள்....

பாடுப்பட்டவர்கள்
பாவியானார்கள்....

படித்தவர்கள்
படைப்பாளியானார்கள்...

பகட்டான உடை
உடுத்தி பரணி
வருபவர்கள்
பட்டணத்தார்கள்...

கந்த உடை உடுத்தி
களனியிலே
கடமையை செய்பவர்கள்
கிராமாத்தார்கள்...
வங்கி கடன் பெற்று
வாழ்க்கையை ஓட்டுவார்கள்
பட்டணத்தார்கள்....

கடன் வாங்காமல்
கண்ணியமான
வாழ்க்கை வாழ்பவர்கள்
கிராமாத்தார்கள்...

நேர்மை எங்கே இருக்கு
நிதானம் எங்கே இருக்கு
உண்மை எங்கே
இருக்கு
ஊர் மக்களாகிய
கிராமத்தில்தான்
இருக்கு...!!



**பொன்.கருணா**
நவி மும்பை



## காலமும்... காயமும்..

காயம் தந்த நீ...
ஆகாயவெளியில்
சிறகடிக்கிறாய்...

பிறிதொரு இடத்தில் இருந்து
பீறீடும்... காதலில்...

சொக்கிக் கிடக்கிறாய்....
மாற்றான் தோட்டத்தில்
மலர்கிறாய்...

பூச்செடிகள் இடம்
மாறலாம்...தாங்கி
வளர்த்த...மண் தான்...
பாவம்...

வேர்கள் பிடுங்கிய
காயத்தோடு..
சின்னாபின்னமாகி
கிடக்கிறது...

பூச்செடியோ...
வண்ணங்களில்
வாழ்கிறது...
காயங்கள் உபயத்தில்...
பழகிப்போயிற்று ..வலி...



காலத்தின்
கரிசனையால் ....
ரசனையாகிப்போகிறது.....
காயம் கூட...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## கண்கள்

பேச வார்த்தைகள் இல்லை
என்று நீ சொன்னாலும்
உன் கண்களின்
வார்த்தைகள் பேசுகிறது!
பேச இயலாமல்
விழித்துத் தவிக்கிறேன்!

## நனைகிறேன்!

மழைத் துளிகள் உன்
மேல் சட சடவென விழுகிறது!
உன்னைத்தரிசித்த நான்
கா த லி ல் நனைகிறேன்!

## விழிகள்

ரசித்தபடியே கொஞ்சம்
கொஞ்சமாய்க்குழம்பியை
ருசிக்கிறாய் நீ!
உன்னை ரசிக்கும் என்
விழிகள் துளித் துளியாய்
விழுங்குகிறது
கா த லை!

## மனசு

என்னென்னவோ
சொல்லிக் கெஞ்சுகிறாய்!
இந்த அழகிருக்கிறதே
அது நழுவி நழுவி
என் மனசில் விழுகிறது!

## மயில்

நீ தங்க மயில் என் மனதில்
தங்கும் மயில்!
ஆகவே நம் கா த லி ன்
அழகை வார்த்தைகளால்
(மட்டும்) சொல்லி விட
இயலுமா என்ன?!

## எப்பொழுது?!

அன்புடன் பண்புடன்
நேசமுடன் பாசமுடன்
என்றெல்லாம் எழுதி
எனக்காகக்
கையெழுத்திடும்
நீ எப்பொழுது
கா த லு ட ன் என்றெழுதப்
போகிறாய்?!

## பொங்கும்

என்னை வரவேற்கும் உன்
கண் மையின் அழகு
உன்னை ஒருமையில்
அழைக்கத்தவிக்கிறது
துடிக்கிறது! எப்பொழுது
பொங்கும் இந்தக்கா த ல்?!

## இடம்


ஒவ்வொரு விநாடியும்
என்னைக்கா த லி ல்
நனைய வைப்பதில் நீயே
எப்பொழுதும்
முதலிடத்தில் இருக்கிறாய்!

## கா த ல்

பார்க்கும் பார்வையில் –
பேசும் பேச்சில் –
அணைக்கும் அணைப்பில் –
பரிமாறிக் கொள்ளும்
மு த் த ங் க ளி ல் –
அனைத்திலும்
ஒட்டிக்கொண்டு
உறவாடுவதில் ஒவ்வொரு
நொடியும் ஒட்டி உறவாடுகிறது
இந்தக்கா த ல்!

## கொஞ்சம்

உன்அழகைக்கொஞ்சம்
கிள்ளி எடுத்தாலும்
ஊரிலுள்ளஎல்லாப்
பெண்களுக்கும்
கொடுக்கலாம்!
இப்பொழுது புரிகிறதா?
உன் மீது எனக்குத்
தீ ரா க் கா த ல் என்று!



**முத்து ஆனந்த்** வேலூர்



## அவள்

பிரியும் முன் ஏதாவது
சொல்லிவிட்டு பிரியலாம்
என்றால், சொல்லிவிட்டு
மட்டும் தானா
என்கிறது உன் பார்வை.

புதிதாய் முளைத்த
கொடியின் அரும்பு,
போட்டியிடுகிறது நம்
காதலின் மென்மையுடன்.



விட்ட
பாணத்தில்
கவிழ்ந்தது
முகம்
நாணத்தில்

**கே. பி. ஜனார்த்தனன்**

அத்தனை எளிதாக
இல்லை...

உன் நினைவுகள்
கடப்பதுவும்..

உன் தடயங்கள்
தவிர்ப்பதுவும்...


பிரிவு தவிப்பை தள்ளி
வைப்போம்...

வாழ்க்கை நமதென்று
சொல்லி வைப்போம்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

# நூல் விமர்சனம்

காந்தி தேசம் !
நூல் ஆசிரியர்
எழுத்தாளர் ப .திருமலை !
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !
புதிய தரிசனம் பதிப்பகம் ,
10/ 11 அப்துல் ரசாக்
இரண்டாவது தெரு,
சைதாப்பேட்டை ,
சென்னை .15. தொலை பேசி
044– 4214728.
விலை ரூபாய் 200.




காந்தி தேசம் ! என்ற நூலின் தலைப்பே சிந்திக்க வைத்தது. இந்தியாவிற்கு காந்தி தேசம் என்று பெயர் சூட்டச் சொன்னவர் தந்தை பெரியார் . காந்தி தேசம் ! என்று உலக நாடுகள் நம்மை பெருமையாகப் பார்த்த காலம் இருந்தது அன்று .ஆனால் இன்று உலக நாடுகள் நம்மை சிறுமையாக என்னும் வண்ணம் நமது அரசியல்வாதிகள் ஊழலில் செய்வதில் உலக சாதனை நிகழ்த்தி வருகிறார்கள் .இப்படி பல சிந்தனைகளை விதைத்து நூலின் தலைப்பு .

இனிய நண்பர் நூல் ஆசிரியர் எழுத்தாளர் ப .திருமலை அவர்களை பண்பாளர் திருமலை என்றும் பொருள் கொள்ளலாம் .இவரது எழுத்தில் இருக்கும் வேகம் பேச்சில் இருக்காது .மிகவும் மென்மையானவர் , மே ன் மை யா ன வ ர் , தன்மையானவர் , யாரிடமும் அதிர்ந்து பேசாதவர், பத்திரிகையாளர் என்ற கர்வம் துளியும் இல்லாதவர் .இவர் சட்டம் பயன்றவர் நினைத்து இருந்தால் பெரிய நிறுவனத்திற்கு சட்ட ஆலோசகராகப் பணியாற்றி கை நிறைய ஊதியம் பெற்று சராசரியாக வாழ்ந்து இருக்க முடியும் .ஆனால் அவர் அதை விரும்பாமல் தன் எழுத்தால், உரத்த சிந்தனையால் இந்த சமுதாயத்திற்கு எதையாவது செய்தாக வேண்டும் என்ற ஏக்கத்தில் முன்னணி பத்திரிக்கைகளான தினமணி ,தினமலர் ,குமுதம் போன்றவற்றில் 33 ஆண்டுகள் பணியாற்றி விட்டு ,

தான் உணர்ந்ததை அப்படியே எழுதிட சுதந்திரம் தந்துள்ள புதிய தரிசனம் இதழில் சிறப்பு ஆசிரியராக இருந்து தனி முத்திரை பதித்து வருகிறார்கள் .புதிய தரிசனம் இதழில் எழுதிய சிந்தனை மிக்க கட்டுரைகள் 14 ஐ தொகுத்து நூலாக்கி உள்ளார்கள் .இவற்றை மின் அஞ்சலிலும் புதிய தரிசனம் இதழிலும் தனித்தனியாக படித்து இருந்தாலும் , மொத்தமாக நூலாக படித்தபோது மனம் நெகிழ்ந்தது . விழிப்புணர்வு விதைக்கும் கட்டுரைகள்.

சமுதாயத்தில் சுரண்டல் நடக்கும் மணல் கொள்ளை ,கந்து வட்டிக் கொடுமை ,பாலியல் பலாத்காரங்கள் ,கௌரவக் கொலைகள் , சிறைச்சாலையில் நடக்கும் கொலைகள் ,தற்கொலைகள் ,ஊழல்கள் என பல்வேறு கோணங்களில் நாட்டில் நடக்கும் அவலங்களை ஆதரத்துடன், புகைப்படத்துடன், புள்ளி விவரங்களுடன் , பலரின் கருத்துக்களுடன் கட்டுரை வடித்து உள்ளார் .பிரச்சனையை மட்டும் எழுதாமல் அதற்கான தீர்வுகளையும் தெளிவாக விளக்கமாக எழுதி உள்ளார் .

இந்த நூல் அறிமுக விழா மதுரையில் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பில் மனிதத் தேனீ இரா .சொக்கலிங்கம் தலைமையில் நடந்தது .எழுத்தாளர் சிவக்குமார் நூல் விமர்சன உரை விரிவாக ஆற்றினார் .தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ம .திருமலை அவர்களை சிறப்புரையாற்றினார். அவர் குறிப்பிட்டார் இந்த நூலிற்க்காகவே நூல் ஆசிரியர் ப .திருமலை அவகளுக்கு முனைவர் பட்டம் வழங்கலாம் .அவ்வளவு உழைப்பு நூலில் உள்ளன என்றார் .

நூல் ஆசிரியர் எழுத் தாளர் ப .திருமலை அவர்கள் நாகர்கோவில் மண் வாசனையோடு மிக இயல்பாகவும் , நெகிழ்ச்சியாகவும் ஏற்புரை நிகழ்த்தினார் .கூட்டம் அரங்கு நிறைந்த காட்சியாக இருந்தது .நூல் வெளியீட்டு விழா மாநாடு போல நடந்தது .

இந்த நூலில் புதிய தரிசனம் திரு ஜெயக்குமார் அவர்களின் பதிப்புரை மிக நன்று .மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் மற்றும் தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் வே .வசந்தி தேவி அவர்களின் அணிந்துரை நூலிற்கு கிடித்த வெகுமதி .அவர்களது அணிந்துரையில் இருந்து சிறு துளி உங்கள் பார்வைக்கு இதோ .


" நான் சேர்ந்த இனமாகிய ஆச்டிரியர் இனம் எதிர்காலத்தை விதைக்கும் இனம் .இந்நூலை வாசித்து கிரகித்து பயன் பெறுமா ?இக்கட்டுரைகள் வகுப்பறையில் விவாத மேடை அமைக்குமா ? இளம் உள்ளங்களில் அறச் சீற்றத்தை உர்வாக்குமா ? இவை நூலாசிரியரின் பொறுப்பல்ல. நம் அனைவரின் பொறுப்பு ."

ஆசிரியர்கள் மாணவர்கள் மட்டுமல்ல சமூகத்தின் மீது ஈடுபாடு கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய நூல் .இதழியல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த நூலை பாட நூலாக்கலாம் . ஒரு கட்டுரை எப்படி ? எழுத வேண்டும் என்று பயிற்றுவிக்கும் நூல் . நூலாசிரியரின் கடின உழைப்பை உணர முடிகின்றது .இவரது முதல் நூல் கொத்தடிமைகள் பற்றிய ஆய்வு நூல் . இரண்டாம் நூலான காந்தி தேசம் நாட்டு நடப்பை ஆய்வு செய்த நூல். இந்தக்கட்டுரைகள் நான்கு சுவற்றுக்குள் குளிரூட்டப்பட்ட அறையில் அமர்ந்து எழுதியவை அன்று .நேரடியாக பல இடங்களுக்கு சென்று விசாரித்து பலரை நேர்முகம் கண்டு ஆராய்ந்து புள்ளி விபரங்கள் திரட்டி எழுதியவை ..உள்ளத்தைத் தொடுகின்றது .நூல் படிக்கும் வாசகரையும் அறச் சீற்றம் கொள்ள வைக்கின்றது . கட்டுரைகளில் உண்மை உள்ளது . உண்மையை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த காந்தியடிகள் படமும் பெயரும் நூலிற்கு பொருத்தம் .

முதல் கட்டுரையான "தவித்த வாய்க்கு தண்ணீர் கிடைக்குமல் தவிக்கப் போகிறோம் ." இந்தியாவில் 2020ம் ஆண்டிலேயே கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் .இந்த தண்ணீர் பற்றாக்குறையால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படும் ."

இவ்வாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சக அதிகாரி ராபர்ட் பிளேக் சொன்ன கருத்தை எழுதி தண்ணீர் குறித்து நமக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார் .எல்லாக் கட்டுரைகளிலும் பிரச்சனையை மட்டும் எழுதாமல் அதற்கான தீர்வுகளையும் விரிவாக பட்டியல் இட்டு உள்ளார் .காந்தி தேசம் என்று சொல்லிக் கொண்டு இந்த மண்ணில் மரண தண்டனை தொடர்வது அழகல்ல என்பதையும் மிக அழகாக எழுதி உள்ளார் .

மொத்தத்தில் இந்த நூல் இன்று நாட்டில் நடக்கும் அவலங்களை சுட்டிக் காட்டி காந்தி தேசமாக இல்லை .காந்தி தேசமாக மாற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விடை தான் இந்த நூல். நூல் ஆசிரியர் எழுத்தாளர் ப .திருமலை அவர்களுக்கு பாராட்டுக்கள் .தொடரட்டும் உங்கள் அறச் சீற்றம். வாழ்த்துக்கள் .



## கரம் கூப்பி வணங்குவோம்

சின்ன புள்ள செல்ல புள்ள சிரிச்சு பேசும் அன்பு பிள்ளை
நீதான்டி கண்ணு மான் இருக்கும் இங்கு மயிலிருக்கும்
மகிழ்ச்சி தரும்

நன்னாடு தேன் இருக்கும் தினை இருக்கும் தெய்வம் வாழும்
நன்னாடு மாதம் மும்மாரி பொழியும் மகராசன் தமிழ்நாடு
மூவேந்தர் ஆண்டநாடு

இயல் இசை நாடக மின்னும் முத் தமிழ் வளர்ந்து வாழ்கின்ற
நாடு தங்க தமிழ்நாடு தனிப்பெரும் நன் னாடு வஞ்சமில்லா
நன்னாடு இது

தன்னிகரில்லாத நல்ல நாடு தான் உலகின்
மூத்த குடி முதல் குடி ஆன குமரிக்கண்டம்
தமிழரின் தலை சிறந்த நாகரிகம் அன்றும் இன்றும்

என்றும் விருந்து வைத்த நன்னாடு கடையேழு வள்ளல்கள்
வாழ்ந்த நாடு கொடை கொடுத்த நாடு செந்நெல் விளைந்த
நாடு நஞ்சையும் புஞ்சை

வழங்கிய விளை பொருளுக்கோ பஞ்சமில்லை காதலையும்
வீரத்தை யும் இரு கண்களாக கொண்ட நாடு
அக வாழ்வும் புற வாழ்வும் உள்ளது

பழக்கமும் வழக்கமும் பண்பாடு கொண்ட பழந்தமிழ் நாடு
பாரினில் சிறந்த நாடு ஒழுக்கம் நிறைந்த நாடு
பெண்களை தெய்வமாகவைத்தநாடு



இந்நாட்டை தெய்வத் தமிழ்நாடு என்று
என்றென்றும் கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
வணங்குவோம் நன்றி கூறுவோம் வாழ்வாங்கு
வாழ்வோம் கரம் கூப்பி வழங்குவோம்

**பேராசிரியர் முனைவர் வேலாயுதம் பெரியசாமி**







நேரசைக் கட்டளைக்
கலித்துறை
தாய்மொழி போற்று!

தோற்றமே காணாத
தொன்மை மொழியே
தமிழ்மொழியே!

ஏற்றமே போற்றிடும்
எல்லோர் மொழியே
தமிழ்மொழியே!

தூற்றலே வந்தாலும்
தூய மொழியே
தமிழ்மொழியே!

ஆற்றலும் அன்புடன்
ஆன்ற வகையே
தமிழ்மொழியே!

முனைவர்
**இராம.வேதநாயகம்.**

## பூனை எலியான.....

காட்டில் வெகு தூரம்
அலைந்தும் பாறை
இடுக்குகளிலும்
சிறிய உயிரினங்கள்
இருக்கின்றதா... என மோப்ப
சக்தியால் முகர்ந்து பார்த்து
எதுவும் கிடைக்காததால்
புலிக்கு பசி அதிகமானது
நடக்க முடியாத நிலையில்
தள்ளாடி தரையில் சாய்ந்து
தலையை மட்டும் தூக்கி
நிமிர்ந்து சுற்றும் முற்றும்
பார்த்துக் கொண்டு இருக்கும்
போது செடிகள் அசையும்
உணர்வைக் கண்டதும்
கண்களை திசையை
மாற்றாமல் கூர்மையாக்கி
கொண்டு பாய்வதற்கு
தன் முன்னங்கால்களை
தயார்படித்தி அசையாமல்
இருந்தது புலி

செடிக்குள் இருந்து வழியில்
எதுவும் பசிக்கு உணவு
கிடைக்கிறதா என
பூனை ஒன்று மோப்பம்
பிடித்தபடி வந்தது

இதைக் கண்டதும் புலி
உஷாராய் அதனைக் கூர்ந்து
கவனித்து

அந்த இருளில் கண்களின்
நேர் பார்வை சந்திக்க
மின்னலாய் பளிச் சென
பாய்ந்த சடுதியில் பீதி
கொண்ட பூனை வந்த
திசையை நோக்கி பசியை



விட உயிரே மேல் என பாய்ந்த
ஓடத் தொடங்க புலி கிடைத்த
உணவை விடக்கூடாதென
புலி பூனையை நோக்கி
பாய்ந்த போது பதுங்கி
பதுங்கி உணவு தேடி எலி
ஒன்று செடிப்புதரில் இருக்க
புதரில் பூனை பாய்ந்தது தன்
மேல் ஏதோ ஒன்று விழுகிறதே
என வீச்சென கத்திக்
கொண்டு பாய்ந்து வரும் புலி
மேல் விழுந்ததும் ஏதோ ஒன்று
விழுந்ததே என புலி திரும்பி
பார்த்து எலியைக் கண்டதும்
வந்த வழியைப் பார்த்து
திரும்பிச்
சென்றது
புலி.



**நல.ஞானபண்டிதன்**
திருப்புவனம் புதூர்



## விட்டுக்கொடுத்து வாழ்

விட்டுக்கொடுத்து
வாழ்ந்து பார்
மெட்டு போட்ட இசை போல
வாழ்க்கை அமையுமே...
விவாதம் செய்வது வீண்
வேலை விட்டு விட்டால்
சமரசம் ஆகுமே,
இதில் யாரும் குறைந்தவர்
இல்லை என்று
உணர்ந்து விடு
வேதனையில் வார்த்தைகளை
விட்டு விட்டால் சோதனை
மேல் சோதனை என்று

வேதனை பட வைக்கும்
விவாதத்தில் அடுத்தவர்
பேச்சை செவி கொடுத்தால்
அதுவே விட்டுக் கொடுத்தல்
விவாதம் செய்து வெற்றி
பெற்றால் அதில்
துன்பமே வரும்
அடுத்தவர் மனம்
வேதனையில் புழுங்க நாம்
வாதித்து வெற்றி பெறுவதில்
என்ன லாபம் ..
விட்டுக் கொடுப்போம்
சமரசமாக உறவுகளுடனும்
நட்புடனும் வாழ்வோம்...

**உஷா முத்துராமன்**

உழவு நிலமே வயலாகும்
ஊரின் மருதம் வயலாகும்
அழகாய் விளங்கும்
மருதந்தான்
அளிக்கும் உணவை
மருதந்தான்!

வயலின் தோற்றம்
வண்ணமாகும்
வளங்கள் நிறைந்த
மண்ணாகும்



வயலின் வனப்பே உயர்வாகும்
வண்ண உணவின் களமாகும்!
முனைவர்
**இராம.வேதநாயகம்.**



## நகைச்சுவை

வாடி இருக்கும்
தாமரை முகங்கள்
சூரியனைக்கண்டு
மலர்வதில்லை
அடக்க முடியாத
சிரிப்பலைகளில்
சில்லென்றுபூக்கின்றன!

கவனம் சிதையாமல்
கருத்துகளைச்
சுகமாய்ச்சுமந்து
காந்தமாய் ஈர்த்து
நினைவுகளில் நிலை
நிறுத்தும் களிப்புமிகு
கடிவாளம்!

செவிக்கு நல்லவிருந்தாய்ச்
சோகத்தை மாய்க்கும்
மருந்தாய் ஆயுளை
அதிகரிக்கும் அமிழ்தாய்ச்
சொர்க்கத்தின் நிழலாய்
நிம்மதியை
தருகின்றது!

வயிறு புடைக்க
உணவினை புசித்தால்
உறக்கம் உறவாடும்
வயிறு குலுங்க
சிரித்து விட்டால்
உற்சாகம் உறவாடும்!

இங்கே
வான்மழை
பொய்த்துவிட்டால்
உலகுக்குப்பஞ்சம்
சிரிப்புமழை
பொய்த்துவிட்டால்
உணர்வுகளுக்குப்பஞ்சம் !
உண்டி கொடுத்தோர்
உயிர்
கொடுத்தோராவர்
சிந்தை மகிழ
சிரிப்புகள்
தந்தோர்
சிறகுகள்
தந்தோராவர்!



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## பட்டாம்பூச்சி

பட்டாம்பூச்சி
தோட்டத்திலேயே
இருக்கட்டும்.
பூக்கள்
செடிகளிலேயே
மலர்ந்திருக்கட்டும்.
கண்களின்
பார்வை ஒளி
நீடித்திருக்கும்
வரை
எதையும்
யாரையும்
பிரித்துப்
பார்க்க
வேண்டாம் !



**ரிஷபன்**



## நனைகிறேன்!

மழைத் துளிகள்
உன்
மேல்
சட சடவென விழுகிறது!
உன்னைத்
தரிசித்த
நான்
கா த லி ல்
நனைகிறேன்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

## பேசுவதைக் குறையுங்கள்!



அதிகம் பேசாதே
ஆணவங் கொள்ளாதே
இதயம் வலித்திடவே
இனியும் பேசாதே!
பதமாகப் பேசுவாயே
பாடம் படிப்பாயே
எதையும் அளவாக
இன்பாய்ப் பேசிவிடு!

பிழையைச் செய்யாதே
பெருமை பேசாதே
ஒழுக்கந் தவறாதே
ஒருங்காய் வாழ்வாயே!
பழக்கம் எப்படியோ
பாங்காய் நடந்திடுவாய்
வழக்கப் படிதானே
வாழ்க்கை நடத்திவிடு!

பேசல் குறைத்திடுவாய்
பிழையைத் தவிர்த்துவிடு
ஏசல் நிறுத்திவிடு
இனிமை வழிசெல்வாய்!
ஆசை குறைத்துவிடு
அன்பை நிறைத்துவிடு
தேசம் போற்றிடவே
தேர்ந்தே வாழ்ந்துவிடு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## கண்கள்


பேச வார்த்தைகள் இல்லை
என்று நீ
சொன்னாலும்

உன் கண்களின்
வார்த்தைகள் பேசுகிறது!
பேச இயலாமல்

விழித்துத் தவிக்கிறேன்!

## கொஞ்சம்

உன் அழகைக்
கொஞ்சம் கிள்ளி எடுத்தாலும்
ஊரிலுள்ள
எல்லாப் பெண்களுக்கும்
கொடுக்கலாம்!
இப்பொழுது புரிகிறதா?
உன் மீது
எனக்குத் தீ ரா க் கா த ல்
என்று!



**முத்து ஆனந்த்**
வேலூர்

## பூட்டு !



வாகனத்திற்கு
உண்டு பூட்டு !
வீட்டிற்கும்
உண்டு பூட்டு !
அலைபாயும்
மனதை எதை
வைத்து
பூட்டுவது !

எட்டாத
ஒன்றை பிடிக்க முயலும்
மனதை !

கிடைக்காத பொருள் மேல்
ஆசைப்படும் மனதை !

சொல்லக்கூடாத ஒன்றை
சொல்ல துடிக்கும் மனதை !

அபரிதமான ஆசையை
தூண்டுகிற மனதை...

எதை
வைத்து
பூட்டுவது....
!



**எம்.பி.தினேஷ்.**
கோவை – 25

## வெறுப்பவர் எவருமில்லை



என்னை
வெறுப்பவரை
நான் வெறுமனே
விடுவதில்லை!

ரொட்டித்
துண்டுக்கு
நாவை தொங்கப்
போட்டுக்கொண்டு
அலையும் ஞமிலி போல்
அவர்கள் பின்னே
செல்கிறேன்.

அவர்கள் விரட்டுவதும்
நான் ஓடிப் பதுங்குவதும்,
திரும்பவும் அவர்கள் பின்னே
செல்வதும்,
ஒரு விளையாட்டாய்
அது மாற;


ஏதோ ஒரு கணத்தில்
அவர்கள் ஒரு புன்சிரிப்பை
பிச்சையாய் இட
என் மனம் வெட்கமற்று
கெக்கலிக்கிறது.

நான் பகைவனையும்
வசப்படுத்துவேன்;
என்று எனக்கு நானே
சொல்லிக் கொள்ள;

இறுமாப்புடன் என் நெஞ்சம்
விம்மித் தணிகிறது.

என்னை வெறுப்பவர்
எவருமில்லை
நான் எனக்குள் மட்டும்
சொல்லிக் கொள்ள:
இந்த உலகம்
என்னைப்பார்த்து
நமட்டலாகச் சிரிக்கிறது.

நானுமே எனக்குள்
சிரித்துக் கொள்கிறேன்
சற்று வெட்கத்துடன்தான்.



**சசிகலா**
**விஸ்வநாதன்.**



## ஆசையே விலகிப்போ

அடுத்தவீட்டு வசதிகளைப் பார்த்து பார்த்தே
அதுபோல தான்வாழ வேண்டு மென்று
கடுகடுத்து மனைவியவள் தொல்லை தந்து
கணவனையே சொல்லம்பால் குத்து கின்றாள் !
அடுத்தவீட்டு ஆண்மகனோ நேர்மை யின்றி
அதர்மத்தால் பெற்றதந்த வசதி யென்றே
எடுத்துரைத்த கணவனையே எடுத்தெ றிந்தே
ஏளனமாய்த் தீநாக்கால் ஏசு கின்றாள் !

உண்ணுகின்ற உணவுக்கு வறுமை யில்லை
உடல்மறைக்கும் உடைகளுக்கும் பஞ்ச மில்லை
கண்மறைய வாழ்வதற்குச் சொந்த மாகக்
கட்டியுள்ள சிறியவீடும் உள்ள திங்கே
பண்பாக நடுத்தரத்துக் குடும்ப மாகப்
பழியேதும் இல்லாமல் வாழு கின்றோம்
எண்ணத்தில் ஆசையினை வளர்த்துக் கொண்டால்
எண்ணற்ற இன்னல்தான் அறிவாய் என்றான் !

பகட்டாக நாம்வாழ வேண்டு மென்றால்
பகற்கொள்ளை குறுக்குவழி செல்ல வேண்டும்
அகந்தன்னில் இரக்கத்தை அன்பு தன்னை
அகற்றிநஞ்சாய் மனந்தன்னை மாற்ற வேண்டும்
முகம்பார்த்து பேசியவர் தூற்றி நம்மின்
முதுகின்பின் கைகொட்டிச் சிரிப்பர் என்றான்
தகவுடைய இவ்வாழ்வே போதும் ; ஆசை
தவறென்றாள் ! உணர்ந்தவளை
அணைத்தான் போற்றி !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## இன்றே செய்

துயரத்தின் நினைவுகளில்
துதிபாடி துதிபாடி
வயிரத்தின் நெஞ்சுறுதி
வலிமையினை இழக்காதே !
செழுக்கும் மாடுகளாய்
செறித்தவையை அசைபோடும்
பக்கத்தைப் புரட்டாமல்
படிப்பதினை நிறுத்திவிடு !

நேற்றிரவு கனவுகளின்
நெருடலினைப் பகலெல்லாம்
ஊற்றாகிப் புதுப்பிக்கும்
உணர்வுகளின் நிலைமாற்று !


காலத்தின் ஓட்டத்தில்
கடுகிபுவி மாற்றுகின்ற
கோலத்தின் உறுப்பாகிக்
கொள்கைக்கு வழிசமைப்பாய் !

நடந்திட்ட செயலெல்லாம்
மடிந்தவையே ! நாளையினி
நடக்கின்ற செயலெல்லாம்
நாமறியும் தெளிவில்லை !

வருந்தாமல் உழைத்திடுவாய்
வளரறத்தை நெஞ்சேற்று
இருக்கின்ற இன்றேதான்
இன்பத்தை வரவேற்கும் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



இப்போதெல்லாம்
வெயில் ரொம்பவும் பிடித்து போகிறது
உன் அருகாமையை உணர்வதால்!

உன் கால்தொட்ட சந்தோஷத்தில்
தலை கர்வம் கொள்கின்றன
அந்த கடலலைகள்!

புரியாமல் போனாலும்
கண்கள் பேசும் கவிதைகள்
பேரழகு தான்!



**-லி.நௌஷாத் கான்**

# வாசகர் கடிதம்

அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என மோடி வாக்குறுதி. தமிழகத்தை தீவிரவாத மாநிலம் என கவர்னர் கூறி இருப்பதற்கு தமிழக அரசு கண்டனம் சீரக தண்ணீரின் தன்மைகள் குறித்த கட்டுரை நல்ல பயனுள்ள தகவல். தாமிரபரணியில் வெள்ளம் 30 ஆயிரம் கன அடி நீர் கடலில் பாய்ந்தது. ிருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு பங்குச்சந்தை உயர்வு. ஆருத்ரா நிறுவனம் மோசடி அமலாக்கத்துறை விசாரணை செய்து வருகிறது. ஜனவரி 6 முதல் ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்தம். அடுக்குமாடி குடியிருப்பில் வாக்குச்சாவடி ஏன் அமைக்க வேண்டும் என மம்தா கேள்வி ஸ்டெர்லிங் நிறுவனம் 14,000 கோடி வங்கி மோசடி. இந்தோனேஷியாவில் வெள்ளம் . உக்ரைன் போரில் இதுவரை 25000 பேர் பலி. அமெரிக்காவில் 10 நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு பெண் நெருங்கிய உறவினர்களால் கொல்லப்படுகிறாள் என ஐநா கவலை தெரிவித்துள்ளது. வழக்கம்போல இன்றைய கட்டுரைகள் ஆன்மீக செய்திகள் உள்ளூர் செய்திகள். குழந்தைகள் பகுதி புதுக்கவிதைகள் என அனைத்தும் அபாரமான முறையில் உள்ளது பாராட்டுத்தக்கது. தமிழ்நாடு இ பேப்பர் இந்த வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.




-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

அரசியலமைப்பு
கடமைகளை நிறைவேற்ற
வேண்டும்#பிரதமர் மோடி
தமிழகத்தை தீவிரவாத
மாநிலம் என
சொல்வதா#கவர்னருக்கு
முதல்வர் ஸ்டாலின் கடும்
கண்டனம்
செங்கோட்டையன் இன்று
எம் எல் ஏ பதவியை
ராஜினாமா செய்கிறார்
#தவெக வில் இணைய
வாய்ப்பு
2000 ஏக்கர் நெற்பயிர்கள்
நீரில் மூழ்கின
சீரகத் தண்ணீரால்
கிடைக்கும் நன்மைகள்
தாமிரபரணியில்
வெள்ளம்#30000 கன
அடி நீர் ஸ்ரீவைகுண்டம்
அணையைத் தாண்டி
கடலுக்குள் பாய்கிறது
96.55 சதவிகித எஸ்
ஐ ஆர் படிவங்கள்
விநியோகம்#தேர்தல்
ஆணையம் தகவல்
புதுக் கவிதைகள்
கருத்துகளால் ஜொலித்தன
நூல் விமர்சனம் வெகு
நேர்த்தி
வாசகர் கடிதங்கள்
அட்டகாசம்
ஆருத்ரா கோல்டு
மோசடி#சென்னை உட்பட
15 இடங்களில் அமலாக்கத்
துறை சோதனை
ஜனவரி 6 முதல்
காலவரையறையற்ற வேலை
நிறுத்தம்#ஜாக்டோ ஜியோ
அறிவிப்பு
அடுக்கு மாடி குடியிருப்பில்
வாக்குச் சாவடி
ஏன்#முதல்வர் மம்தா
தேர்தல் ஆணையத்துக்கு
கடிதம்
சட்டவிரோத பாலினப்
பரிசோதனை# மூவர்
குண்டர் சட்டத்தில் சிறை
வரி வசூலில் மென்மையான
முறை#குடியரசுத் தலைவர்
வலியுறுத்தல்
குழந்தைகளை பயன்படுத்தி
மது கடத்தியவர் கைது
விழுப்புரம்; ரயில் நிலையம்
அருகே கஞ்சா விற்ற
இளைஞர் கைது
நாடாளுமன்ற குளிர் காலக்
கூட்டத் தொடர்#நவம்பர்
30ல் அனைத்துக் கட்சி
ஆலோசனைக் கூட்டம்
கவுகாத்தி டெஸ்ட்
தோலிவியைத்
தவிர்க்குமா இந்தியா?
ஸ்டெர்லிங் நிறுவனத்தின்
14000 கோடி
வங்கிக் கடன்
மோசடி#ரூ.5100
கோடி செலுத்த ஒப்புதல்
மாடியில் உள்ள
எஸ்பிஐக்கு செல்ல
ஏணியை பயன்படுத்தும்
வாடிக்கையாளர்
கள்#ஆபத்து
நேரிட அதிக வாய்ப்பு
பத்து நிமிடத்திற்கு
ஒரு பெண் நெருங்கிய
உறவினரால் கொல்லப்
படுகிறார்#ஐநா கவலை
உக்ரைன்
ரஷ்யா போர் ஒரே
வாரத்தில் 25000 வீரர்கள்
பலில்#அமெரிக்க அதிபர்
டிரம்ப்
இந்தியாவுடன் விரைவில்
வர்த்தக ஒப்பந்தம்#கனடா
வெளியுறவு அமைச்சர்
அமெரிக்கா இல்லாமல்
உலகம் இயங்க முடியும்
சூடானில் நடந்து வரும்
உள்நாட்டுப் போர்
#மூன்று மாதங்களுக்கு
நிறுத்துவதாக அறிவிப்பு
ஆப்பிள் நிறுவனத்தில்
தொழிலாளர்கள் பணி
நீக்கம்
வியட்நாமில் வெள்ளம்
# தொண்ணூறு பேர்
உயிரிழப்பு



-பி.சுரேகா
சென்னை

சசிகலா விஸ்வநாதன் எழுதிய " கல்லுளிமங்கன்" நாளுக்கு நாள் விலை உயரும் தங்கத்தை விட, குடியிருக்க சொந்த வீடு எவ்வளவு அவசியம் என உணர்த்தியது. சீரகத்தண்ணீர் அருந்துவதால் செரிமானம், இதய ஆரோக்கியம் மேம்படும் உடலிலுள்ள நச்சுகள் நீங்கும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் உடல் எடை குறையும் கொலஸ்ட்ரால், இரத்த சர்க்கரை அளவு கட்டுக்குள் இருக்கும் என நலம் தரும் மருத்துவம் மூலம் அறிந்தேன்.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

உலகம்போற்றும்
உன்னதகவிஞர்
கனியன்பூங்குன்றனார்பற்றிய
அருமையானவரலாற்றுச்
சேதிகள்அறிந்தேன்!
மகிழ்ந்தேன்!
யாதும்ஊரே!
யாவரும் கேளீர்!
என்ற அற்புதமான
சிந்தனைகள் வாசகத்தை
வழங்கியஉலகறிந்த
போற்றப்படும் கவிஞர் தமிழ்
நாட்டு க்காரர்மட்டுமல்ல
திருப்பத்தூர்
பட்டிக்காரர்அதாவது
தென்தமிழ்நாட்டுக்காரர்உ
லகம்பெருமையுடன்கொண்
டாடும்நம்மஊருக்
கவிஞர் என்பதில்
எல்லை இல்லா
மகிழ்ச்சி !பெருமை!!
அடைகிறேன்,நன்றி!
தமிழ்ச்செம்மல்
விருதாளர்கவிஞர்



-கடல்நாகராஜன்
கடலூர்

வணக்கம் 27. 11.25 அன்று தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அருமையான தகவலை படித்து மகிழ்ந்தேன். இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக இருக்க எனக்கு உதவியது பாராட்டுக்கள்.

திருக்குறளை அதன் பொருளுடன் படிக்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது. இந்திய அரசியலமைப்பு நாள் விழாவில் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிய வந்தவாசி செய்தி மிகவும் அருமை பாராட்டுக்கள்.

சீரகத் தண்ணீரை குடிப்பதால் உண்டாகும் நன்மைகளையும் ரத்த சோகையை தீர்க்கும் அத்திப்பழம் என்ற இரு நல்ல செய்திகளை நலம் தரும் மருத்துவம் பகுதியில் படித்து மகிழ்ந்தேன்..

வரவிருக்கும் வைகுண்ட ஏகாதேசிக்காக திருப்பதியில் வைகுண்ட துவார தரிசனம் ஆன்லைனில் இன்று முன் பதிவு தொடக்கம் என்ற செய்தி திருப்பதிக்கு போகா விட்டாலும் அங்கு போகவேண்டும் என்ற ஆசையே ஏற்படுத்தியது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று பசந்தகுமார் பிஸ்வாஸ் அவரின் வரலாறும் அவரைப் பற்றிய தகவல்களும் அருமையாக இருந்தது .

பல்சுவை களஞ்சியம் பக்கத்தில் வந்த உலகம் போற்றும் கணியன் பூங்குன்றனார் என்ற தகவல் தமிழ் படித்த பெருமையை உணர்த்தியது ஜோக்ஸ் மிகவும் அற்புதம்.

வாங்க சம்பாதிக்கலாம் என்று எந்த துறையில் எப்படி சாதிக்கலாம் என்று அறிவுரை சொன்னது பாராட்டுக்குரியது.

நாடு தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் என்று போளூரில் நடந்த அந்த செய்தியை தெரிந்து கொள்ள முடிந்தது. மாவட்ட ஆட்சியர் தலைவர் திடீர் ஆய்வு செய்தது நல்ல தகவல் பாராட்டுக்கள் .

சுற்றுலா பக்கத்தில் வந்த காட்டுக்குள் ஒரு பயணம் இதனால் திகிலும் சிலிர்ப்பூட்டும் காட்சிகளும் என்ற படமும் தகவலும் மிகவும் அற்புதமாக அங்கு பயணம் செய்வது போல ஒரு உணர்வை ஏற்படுத்தியது .

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நவம்பர் 30 அனைத்து கட்சி ஆலோசனைக் கூட்டம் என்று அரசியலை மிக அழகாக படம் பிடித்து காட்டிய செய்தி பாராட்டுக்குரியது.

திருச்சானூரில் பஞ்சமி தீர்த்த உற்சவம் என்று அதன் படமும் பல்லாயிரக்கணக்க பக்தர்கள் புனித நீராடிய காட்சியும் அற்புதமாக கண்ணுக்கு குளிர்ச்சியாகவும் மனதிற்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது.

பத்து நிமிடத்திற்குள் ஒரு பெண் நெருங்கிய உறவினரால் கொல்லப்படுகிறார் என்ற ஐநா கவலையுடன் சொன்ன செய்தியை படித்ததும் எனக்கும் கவலை ஏற்பட்டது

நல்லதாக அருமையான தகவல்களை மிக அற்புதமாக ஒவ்வொரு விடியலிலும் மிக மிக அருமையாக எங்களுக்கு தொகுத்து கொடுக்கும் நல்ல பணியை செய்யும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்




-உஷா முத்துராமன்




PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்
3 காலண்டர்
100 ரூபாய்
அனைத்து
இல்லங்களிலும்
இருக்கவேண்டிய
அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call Us
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA
MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


PADMA
MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு
பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!


WORK FROM
HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

MARRIAGE Anniversary



K.சுப்பிரமணியன்- S.வளர்மதி

---

## ஆட்கள் தேவை

கோவை டவுன்ஹால் வைசியாள் வீதி போலீஸ் ஸ்டேசன் அருகில் இருக்கும் அரிசி மொத்த வியாபாரம் கடைக்கு கடையில் பணிபுரிய +2 முடித்த ஆண்கள் தேவை

வேலை நேரம்
காலை - 8.45 AM
மாலை - 8.15 PM
ஞாயிறு விடுமுறை

9003992134

---

## GODOWN FOR RENT

NEW GRADE-A WAREHOUSE

20,000 sqft

Location: Salem

- 12th KM Salem - Chennai NH
- Ample Truck Parking
- Dock Leveller

72000 51508

---

Euro Kids™ Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA™
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero

## Admissions Open for AY 25-26

EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior

23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified



No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

---

## WANTED

YELLOW FOREST FURNISHINGS
RS Puram, Coimbatore

ASST PROJECT CO-ORDINATOR
Training will be given

PROJECT MANAGER
Experience in Interior Field Preferred. Liasoning with Architects and Institutional Customers

Attractive Salary + Incentive + Bonus

Whats app Resume
98424 09490

---

## WANTED
## GENERAL MANAGER

For An Security Agency In Coimbatore

- Qualification : Any Degree with Minimum 5 years experience in the related field.
- Age: Below 55 Years
- Salary: Rs.40,000/- per Month

Send your Resume to:
94889 44796
74484 64001
snoufalrizwan2009@gmail.com

---

கோவை பீளமேட்டில் உள்ள லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY

வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை

தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

---

S.R Call Drivers

## S.R Call Drivers Travels

24 Hours
Man Power & All Vehicle Available



Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

---

## WANTED
## DELIVERY BOY

Two wheeler Licence must

Plenum Info Sys
Singanallur
96887 48510

---

## WANTED

For a Sheet Metal Fabrication Company in Malumichampatti
- Welders
- Welding Contractors

Experience in Sheet Metal Welding.

Contact :-
99405 15121

---

## ஆட்கள் தேவை

நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.

6385434442

---

ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை

பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது

94477 69114 | 044 - 6378118

---

## WANTED
## AAIFA BUILDERS

Job location: karungal and marthandam

1. CIVIL ENGINEERS Male and Female (experience and freshers. 20 nos)
2. 3D AND 2D DESIGNER Male and Female
3. OFFICE ADMIN (any Master Degree) Male and Female
4. MARKETING EXECUTIVE Male and Female

Gmail: agnesjerlin55@gmail.com Whatsapp: 99402 43322

---

## WANTED
## PERSONAL DRIVER

Automatic & Manual Gear
Experience Minimum 6 Years

Vacancy : 5 | Salary Above ₹ 25,000* | Male

Candidates must bring thier resume with recent passport size Photo (Passbook, Pan Card & Aadar Card) Copy

Walk-in Interview Date 24-11-2025, Monday | Time : 10.30 am to 1.30 pm, 4.00 pm to 7.00 pm

VENUE : RAJAN & Co, 50 Court Road, Opp. S.L.B.School, NGL-1.

50, கோர்ட் ரோடு, எஸ்.எல்.பி. ஸ்கூல் எதிரில், நாகர்கோவில்–1.
Mob. 9487871915

ராஜன் & கோ
Experience The Revolution

---

## DRIVERS WANTED

பள்ளி வாகனம் ஓட்ட டிரைவர்கள் தேவை

NEAR ANJUGRAMAM

Contact No:
9840391231

---

## சேல்ஸ்மேன்கள் தேவை

ஸ்நாக்ஸ் ஏஜென்ட்-ல் பணிபுரிய அனுபவம் உள்ள சேல்ஸ்மேன்கள் தேவை.

.......நேரில் வரவும்.......

வயது : 25 முதல் 40 வரை
சம்பளம் : 20,000 + இன்சன்டிவ்

Contact No :
9952704949, 8903224949
திரவியம் ஆஸ்பத்திரி பின்புறம், புரவசேரி

---

## SHEMFORD LITTLE STARS

Joshua Street,
Opposite to CSI Matriculation School,
Vettoornimadam, Nagercoil-3

## WE ARE HIRING

OPEN POSITION
COMPUTER OPERATOR

Literacy skill-Tamil, English, Hindi

Contact: 9443049882

---

## ஆட்கள் தேவை

ஏஜென்சியில் பணிபுரிய

- சேல்ஸ்மேன்
  சம்பளம்: ரூ.10,000 + ரூ.100 +Incentive
- ஹெல்ப்பர்
  சம்பளம்: ரூ.10,000 + ரூ.100

நேரில் வரவும். 9 am to 6 pm

தியான் ஸ்டோர்ஸ்
42/1, அசம்பு ரோடு, CBH எதிரில், வடசேரி, நாகர்கோவில்.

செல்: 8110081165
9488888898

---

## ஆட்கள் தேவை

பொன்னான வேலைவாய்ப்பு
(முன் அனுபவம் தேவையில்லை)
வயதுவரம்பு: 18 முதல் 40 வரை

அக்கௌன்ட்ஸ் : 2 நபர்கள்
கல்வித்தகுதி: B.com / Any Degree (பெண்கள் மட்டும்)

பர்னிச்சர் பிட்டிங்ஸ் : 8 நபர்கள்
கல்வித்தகுதி: SSLC/+2/ITI/ Diploma (ஆண்கள் மட்டும்)

சர்வீஸ் ஹெல்பர் : 8 நபர்கள்
கல்வித்தகுதி: தேவையில்லை (ஆண்கள் மட்டும்)

டிரைவர் : 2 நபர்கள் (TATA ACE / CAR)
(முன்னனுபவம் உள்ள, நாகர்கோவில் சுற்றுவட்டார பகுதியில் வசிக்கும் ஓட்டுனர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

சிறந்த சம்பளம் மற்றும் இதர படிகள் திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும்

ஏ பி என் ஆர்டிஸ்டிக், முதல் தளம், சத்யஜோதி டவர்ஸ், சுஷ்ருஷா மருத்துவமனை அருகில், பார்வதிபுரம், நாகர்கோவில்

96297 64844, 97895 99270

---

## WANTED

1. SAFETY OFFICER
2. FIRE GUARD
3. SAFETY SUPERVISOR
4. SAFETY MANAGER
5. SECURITY GUARD


Qualification:
Fire and Safety, Iosh, Nebosh

Contact:
ZION
INTERNATIONAL SAFETY COLLEGE
WCC Road, Nagercoil.
8148632682, 04652-237577

டிசம்பர் மாதத்திற்கான அட்மிஷன் நடைபெறுகிறது!
NEBOSH, IOSH, FIRE AND SAFETY



# பல்சுவை களஞ்சியம்




## பழமை கால கல்யாணம்

# சுமார் 40_45 வருஷத்துக்கு முன்னால
ஒரு கல்யாணத்துக்கு அழைப்பு வந்தா...
10 நாளுக்கு முன்னாடியே குடும்பத்தோடு போயிருவோம்.
கோலம் போட்ட தெருக்களும்.,
சீரியல் பல்பு தோரணமும்.,
புனல் ஸ்பீக்கரில் ஓடும்.
நம்ம வீட்டை மறந்து உறவு வீட்டு வேலைகளை இழுத்து போட்டு செய்வோம்..
பந்தி முதல் பந்தல் வரை சலிக்காம பாப்போம்...
விடிய விடிய பாக்காத உறவுகளுடன் பேசி தூங்காம,கோலமும்,மருதாணியும் வெப்போம்...
வீட்டில் அமர்வதற்கு இரும்பு சேர் அல்லது மர சேர் போடப்பட்டிருக்கும்.

பெண்கள் அமர கலர் கலரா பவானி ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கும்.
அதுல குழந்தைகளும் பெண்களும் உறவுக் கதைகளை பேசிட்டிருப்பாங்க.
சின்ன சின்ன பசங்க எல்லாம் ஓடியாடி விளையாடி கொண்டிருப்பார்கள்.
பெரியவர்கள் தாம்பூலம் நிறைந்த வாயோடு,வீட்டுக்கதைகள்



முதல் அகில உலக கதை வரை பேசிக்கொண்டு இருப்பார்கள்.
சாப்பாட்டு பந்தியில் வெளியாட்களை பாக்கவே முடியாது.
உறவுகளே பரிமாறினார்கள்.
நிச்சயம் ஒரு சண்டையும் கோபித்து கொண்டு அடம்பிடிக்கும் நிகழ்வும் நடக்கும்.
பொண்ணு மாப்பிள்ளை போனாலும்
நாம் ஊர் திரும்ப மனசு வராது.
மனசு நெறைய சந்தோசத்துடனும், கனத்துடனும் திருப்புவோம்.

இப்படியாக.. ஒரு விஷேஷத்துக்கு போயிட்டு வந்தோம்ன்னா அங்கு நடந்த நிகழ்வுகளின் நினைவு சுவடுகள் மறைய மாதங்களோ வருடங்களோ ஆகும்.
ஆனா
இன்னிக்கு?????????????????????

இந்த பழக்கம் எங்க போச்சுங்க?....
யார் மாத்துனது? ஏன்?
காலை 6 மணி முகூர்த்தத்துக்கு 7 மணிக்கு போனா போதும்,
பசங்களுக்கு ஸ்கூல் இருக்கு.
எனக்கு லீவ் இல்ல..
லோன் கட்டனும்...
அவருக்கு ஆபீஸ் மீட்டிங்.
யப்பா எத்தனை காரணங்கள்?!...
இதெல்லாம் போக...
எப்ப இந்த பாழாய்போன செல்போன் வந்துச்சோ...
குறிப்பா இணைய வசதியோட ஆண்ட்ராய்டு கைப்பேசிகள் வந்துச்சோ... அப்போ மறைந்து போனது மனித நேயமும் சக மனித நட்பு பாராட்டலும்,உறவின் புரிதலும்..
இப்போல்லாம்.... பஸ்சுல ,ட்ரையின்ல , கல்யாண வீட்டுல எழவு வீட்டுல, பார்க்குல, பீச்சுல, தியேட்டர்லனன்னு.... இப்படி எங்கெங்கு போனாலும் குனிந்த தலை நிமிராம பக்கத்துல என்ன நடக்குதுன்னு கூட தெரியாம கைப்பேசியே கதின்னு கிடக்குறோம்.
இன்றைய கல்யாண வீடுகளில் கூட 1நாள் கூட யாரும் தங்குவதில்லை.
இப்படி இருந்து நீங்க என்ன சாதிச்சீங்க?
உறவுகளை இழந்ததுதான் மிச்சம்.

---

கடவுள் எப்படிப்பட்டவன்? _கவியரசர் கண்ணதாசன் அவர்கள் சொன்னது:

ஆகாயத்தின்
மேலிருந்து ஆளே
தெரியாமல் ஆட்டியும்
வைப்பான்.
மனிதனின் ஆட்டம்
கொஞ்சம் அதிகமானால்
அடக்கியும் வைப்பான்.
அவன் தான் கடவுள்
பூலோகத்தில்
வாழும்போது புகழையும்
கொடுப்பான்.
பின்னர் புகழுக்காக
வாழும் போது புரட்டியும்
எடுப்பான்.
அவன் தான் கடவுள்

பூவிலே கொஞ்சம்
தேனையும் வைப்பான்.
அங்கே தேனை
வைத்ததை தேனீக்கும்
சொல்வான்.
பின்னர் அந்தத்
தேனடை இருப்பதை
மனிதனுக்கும்
சொல்வான்.
அவன் தான் கடவுள்




கேட்கும் திறனை
கூர்மையாக எலிக்கும்
வைப்பான்.
அந்த எலியே கேட்க
முடியாமல் நடக்கும்
பாதங்களை பூனைக்கும்
வைப்பான்.
அவன் தான் கடவுள்

ஓடும் திறனை
கூட்டுகின்ற
கால்களை (மானுக்கு)
கொடுப்பான்.
பின்னர் அந்த மானை
பிடிக்கின்ற சக்தியை
புலிக்கும் கொடுப்பான்.
அவன்தான் கடவுள்
அற்புதமாய்
சிந்திக்கின்ற
ஆறறிவையும்
கொடுப்பான்.
அதை முழுதும்
பயன்படுத்தாத
மனிதர்களையும்
படைப்பான்.
அவன் தான் கடவுள்

தவம் பல செய்தால்
(மனிதன்) கேட்பதைக்
கொடுப்பான்.
அவனே தறிகெட்டு
நடந்தால்
கொடுத்ததைப்
பறிப்பான்.
அவன்தான் கடவுள்

நாட்டை ஆள விட்டு
அழகும் பார்ப்பான்.
அவனே
கொள்ளையடித்தால்
கொடுத்தவனே
பிடுங்கவும் செய்வான்.
அவன் தான் கடவுள்

புரியாதவனுக்கு புதிராய்
இருப்பான்.
தன்னைப் புரிந்தவனுக்கு
அறிவாய் இருப்பான்.
அவன் தான் கடவுள்
கடல் முழுதும்
தண்ணீரை வைப்பான்.
தாகம் எடுத்தால்
தவிக்கவும் வைப்பான்.
அவன் தான் கடவுள்
மாளிகையில்
வாழ்பவன் ஆயுள்
அற்பமாய் முடியும்.
சாலையோரம்
வாழ்பவன் நூறாண்டு
வாழ்வான்.
பின்னிருந்து
இயக்குவான்.
அவன் தான் கடவுள்
தன்னை வெளியே
தேடினால் விளையாட்டு
காட்டுவான்.
(உள்ளத்தின்) உள்ளே
தேடினால் ஓடி வந்து
நிற்பான்.
_அவன் தான் கடவுள்

---



# மீம்ஸ்

எவ்வளவு தைரியும் இருந்தா, பொண்டாட்டி முன்னாடியே என்னை சைட் அடிப்ப.



அவளுக்கு கிட்ட பார்வை. பக்கத்தில நான் நிக்கறதே தெரியாதுங்கிற தைரியத்திலதான்.

பிரபல ஹோட்டல் மட்டன் பிரியாணியில் நெளிந்த புழு !



சரியா வேகல போல...!!

-ரிஷிவந்தியா,தஞ்சாவூர்.

---



## விடுகதை

| | |
|---|---|
| அம்மா பின்னிய நூலை அவிழ்த்தால் போச்சு. அது என்ன? | இடியாப்பம் |
| தண்ணீரில் மிதக்குது கட்டழகிய வீடுகள் -அது என்ன? | கப்பல்கள் |
| தொட்டால் மணக்கும், சுவைத்தால் புளிக்கும். அது என்ன? | எழுமிச்சம்பழம் |
| இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன? | கடிகாரம் |
| உணவு கொடுத்தால் வளரும்; நீர் கொடுத்தால் அழியும். அது என்ன? | நெருப்பு |
| ஊசி போல் இருப்பான், ஊரையே எரிப்பான். அது என்ன? | தீக்குச்சி |

---



# ஜோக்ஸ்

சாப்பிடும் இடத்தில்..

தம்பி..நீங்க பெண்ணுக்கு சொந்தமா.. மாப்பிள்ளைக்கு சொந்தமா?

எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல. பொண்ணு..தாங்க. சொந்தம் ஆகலாம்.

==================

அத்தை.. சினிமாவுக்கு போனீர்களே...படம் எப்படி?.

சிரிச்சு..சிரிச்சு ..பாதி உயிர் போய்விட்டது.

அப்ப..மறுபடியும் போங்க.

==================

கூட்டணி..பற்றி பேச போன தலைவர்கள் ..ஏன் கோபமாக..திரும்ப வந்துவிட்டார்கள்.

கட்சி கதவு மூடி இருந்ததாம்.

==================

யாரும்..கூட்டணிக்கு



வரவில்லை.

பக்கத்து மாநில கட்சியுடன் கூட்டணி வைக்கலாம் தலைவரே..

==================

ஓடி போகலாமா...?. வரதட்சனை.. செய்து என்னை கட்டிக்கொடுக்க.. அப்பாவுக்கு வசதியில்லை.

கொஞ்சம் காத்திருங்க.. சம்மதம் தந்துவிடுவார்.

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## பைரவருக்கு மிளகாய்ப்பொடி அபிஷேகம்? காரணம் இதுதான்..!



பைரவருக்கு பால், தேன், பன்னீர், இளநீர், சந்தனம், விபூதி, மஞ்சள், கரும்புச்சாறு, பஞ்சாமிர்தம், நல்லெண்ணெய், மற்றும் பலவகையான பழச்சாறுகள் கொண்டு அபிஷேகம் செய்து பார்த்திருப்போம். ஆனால், கன்னிகைப்பேர் என்ற ஊரிலுள்ள சிவாநந்தீஸ்வரர் கோவில் பைரவருக்கு மிளகாய்ப்பொடியில் அபிஷேகம் செய்யப்படுகிறது.

பைரவருக்கு எதற்காக மிளகாய்ப்பொடியில் அபிஷேகம் செய்கிறார்கள் என்று பார்க்கலாம்.

பைரவருக்கு மிளகாய்ப்பொடியில் அபிஷேகம் செய்வதால் எதிர்மறை எண்ணங்கள் நீங்குவதாகவும் அதனால் இது சக்திவாய்ந்த அபிஷேகமாகவும் பார்க்கப்படுகிறது.

யார் யாரெல்லாம் இந்த அபிஷேகம் செய்யலாம் :

* பணம் மற்றும் தங்கம் முதலானவற்றை தொலைத்தவர்கள், திருமணத்தடை உள்ளவர்கள், திருட்டு மற்றும் ஏமாற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அபிஷேகத்தை மேற்கொள்ளலாம்.

* திருட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அபிஷேகத்தை செய்யும் போது, திருடியவர்கள் சட்டத்தின் முன் வந்து நிற்பார்கள் என்றும் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

* மிளகாய்ப் பொடியால் அபிஷேகம் செய்து பிரார்த்தனை நிறைவேறியவர்கள், பால் அபிஷேகம் செய்து பைரவரை குளிர்வித்து, பிரார்த்தனையை நிறைவு செய்ய வேண்டும்.

சென்னை - பெரியபாளையம் சாலையில், 36 கி.மீ., துாரத்தில் உள்ளது, கன்னிகைப்பேர் என்ற கிராமம். இங்கிருந்து, 4 கி.மீ., தொலைவில் சிவாநந்தீஸ்வரர் கோவில் உள்ளது . திருவள்ளூரில் இருந்தும் பெரியபாளையம் வழியாகவும் இக்கோவிலுக்கு செல்லலாம்.

எந்தெந்த ராசிக்காரர்கள் எந்தெந்த நாளில் பைரவரை வழிபட வேண்டும்:

* சிம்ம ராசிக்காரர்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், கடக ராசிக்காரர்கள் திங்கட் கிழமையிலும் மேஷம் மற்றும் விருச்சிக ராசிக்காரர்கள் செவ்வாய்க் கிழமையிலும் பைரவரை வழிபாடு செய்யலாம்.

* மிதுனம், கன்னி ராசிக்காரர்கள் புதன்கிழமையிலும், தனுசு, மீனம் ராசிக்காரர்கள் வியாழக்கிழமையிலும், ரிஷபம், துலாம் ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமையில் வழிபாடு செய்யலாம்.

* மகரம் மற்றும் கும்ப ராசிக்காரர்கள் சனிக்கிழமையிலும் பைரவரை வழிபாடு செய்ய நினைத்த காரியங்கள் நடக்கும் என்பது ஐதீகம்.

## செல்வம் பெருக்கும் குபேர லட்சுமி பூஜை



தீபாவளியை ஒட்டி மக்கள் செய்யும் வழிபாட்டில் குபேர லட்சுமி வழிபாடு முக்கியமானது. இந்த பூஜை செய்வதால் நம் இல்லத்தில் சகல ஐஸ்வரியங்களும் பெருகும் என்பது ஐதீகம். பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் விரதம் இருந்து லட்சுமி குபேர பூஜை செய்யலாம்.

பூஜைக்கான ஏற்பாடுகளை தீபாவளிக்கு முந்தைய நாள் இரவே செய்து முடித்துவிடுவது நல்லது.

தீபாவளி அன்று அதிகாலையிலேயே எழுந்து கங்கா நீராடல் செய்த பிறகு, பூஜை அறையில் லட்சுமி குபேரர் படம் மற்றும் குபேர யந்திரத்தை கிழக்கு அல்லது மேற்கு திசை பார்த்தபடி வைத்து, பூஜையறையையும் தெய்வத் திருவுருவங்களையும் மலர்களால் அலங்காரம் செய்யவேண்டும்.


லட்சுமி குபேரர் படத்துக்கு மஞ்சள், குங்குமம் இட வேண்டும். சுவாமி படத்துக்கு முன்பாக தலை வாழை இலை விரித்து, அதில் நவதானியங்களைத் தனித்தனியாகப் பரப்ப வேண்டும். நடுவில் சுத்தமான தண்ணீர் நிரம்பிய சொம்பை வைத்து, தண்ணீரில் சிறிது மஞ்சள் சேர்க்க வேண்டும்.

பிறகு, சொம்பின் வாயில் மாவிலைக் கொத்தைச் செருகி, அதன் நடுவில் ஒரு தேங்காயை மஞ்சள் பூசி, நிறுத்தின வாக்கில் வைக்க வேண்டும். வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் முதலான நிவேதனப் பொருட்களோடு, தட்சணையாக பணம் மற்றும் சில்லறை நாணயங்களையும் சேர்த்து, கலசத்துக்கு முன்பாக வைக்க வேண்டும்.

தொடர்ந்து, மஞ்சளில் பிள்ளையார் பிடித்து, வாழை இலையின் வலது பக்கமாக வைக்க வேண்டும். அவருக்குக் குங்குமம் இட்டு அலங்கரிக்க வேண்டும். அதன்பிறகு, முழுமுதற் கடவுள் விநாயகர் வழிபாட்டோடு பூஜையை ஆரம்பிக்க வேண்டும். பிள்ளையார் மந்திரம், அஷ்டோத்திரம் சொல்லி வழிபடலாம். விநாயகரை வழிபட்ட பிறகு, மகாலட்சுமியின் ஸ்தோத்திரப் பாடல்களை பாராயணம் செய்ய வேண்டும். ஆனைமுகனே போற்றி.. விநாயகா போற்றி... அஷ்டலட்சுமியே போற்றி... குபேர லட்சுமியே போற்றி.. தனலட்சுமியே போற்றி.. என, அருள் தரும் தெய்வப் போற்றிகளைச் சொல்லியும் வழிபடலாம்.

தொடர்ந்து, குபேர ஸ்துதியைச் சொல்லி வழிபட வேண்டும். ஸ்துதி தெரியாதவர்கள், குபேராய நமஹ... தனபதியே நமஹ.. என்று துதித்து, உதிரிப் பூக்களை கலசத்தின் மீது போட்டு அர்ச்சனை செய்ய வேண்டும். அர்ச்சனை செய்து முடித்ததும் வாழைப்பழம், காய்ச்சிய பசும்பால், பாயாசம் ஆகியவற்றை லட்சுமி குபேரருக்கு நைவேத்யம் செய்து, கற்பூர தீபாராதனையோடு பூஜையை நிறைவு செய்யவேண்டும். தாம்பூலத்தில் வைத்திருந்த தட்சணையை ஏழை சுமங்கலிகளுக்கு கொடுப்பது சிறப்பு. தீபாவளி அன்று லட்சுமி குபேர பூஜை செய்வதால், சங்கடங்கள், காரியத்தடைகள் நீங்கும். கடன் பிரச்னைகளில் இருந்து விடுபடலாம்; நம் இல்லத்தில் செல்வம் பெருகும் என்பது ஐதீகம்.

## அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்...!!



**இந்த கோயில் எங்கு உள்ளது?**
செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுகுன்றம் என்னும் ஊரில் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

**இந்த கோயிலுக்கு எப்படி செல்வது?**
செங்கல்பட்டில் இருந்து சுமார் 13 கி.மீ தொலைவில் திருக்கழுகுன்றம் என்னும் ஊர் உள்ளது. திருக்கழுகுன்றத்தில் இருந்து நடந்து செல்லும் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

**இந்த கோயிலின் சிறப்புகள் என்ன?**
இக்கோயிலில் சிவன் மற்றும் அம்மன் இருவரும் சுயம்பு மூர்த்திகள் என்பது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.
சிவத்தலங்களில் கருவறைக்கு எதிரில் இருக்கும் நந்தி இங்கில்லாமல் இருப்பது மாறுபட்ட ஒன்றாகும்.
12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குருபகவான் கன்னி லக்னத்தில் நுழையும் நாளன்று லட்சதீபத் திருவிழா இக்கோயிலில் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது.
இத்தலத்தில் இந்திரன் பூஜித்தான். தொடர்ந்து இன்றும் பூஜித்து வருகிறான் என்பதற்கு அறிகுறியாக இம்மலைமீது உள்ள கருவறைக் கோபுரக் கலசத்தின் அருகில் உள்ள துவாரத்தின் வழியாக இடி விழுந்து சிவலிங்கத்தைச் சுற்றிப் பரவிப் பாய்ந்து விடுகிறது. சில ஆண்டுகளுக்கு ஒருமுறை இது நடக்கிறது. மறுநாள் கருவறை திறக்கும்போது தாங்கவே முடியாத வெப்பத்தை உணரமுடிகிறது.
இக்கோயிலை கழுகு வழிபட்டதால், வழிபடுகின்றதால் இத்தலத்திற்கு திருக்கழுகுன்றம் என பெயர் வந்தது.

**வேறென்ன சிறப்பு?**
சாதாரணமாக கடலில் தான் சங்கு பிறக்கும். ஆனால், இங்கு மட்டுமே தண்ணீரிலேயே சங்கு தோன்றுகின்றது.
மார்க்கண்ட தீர்த்தம் என்று வழங்கப்பட்ட இத்தீர்த்தத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறந்து கொண்டிருப்பதால் இது சங்கு தீர்த்தம் என பெயர் பெற்றது.
இன்றும் இந்த அதிசயம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது மூலிகை கலந்த தடாகம் என்பது குறிப்பிடத்தக்கது.
சங்கு கரை ஒதுங்கியதும் கோயில் அர்ச்சகர்கள் அதை தட்டில் எடுத்து வைப்பார்கள். இதுவரை பிறந்துள்ள பல சங்குகள் இக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

**என்னென்ன திருவிழாக்கள் கொண்டாடப்படுகிறது?**
சித்திரை பெருவிழா 10 நாட்கள் மிக பிரம்மாண்டமாக நடைபெறுகிறது. பௌர்ணமி, அமாவாசை, பிரதோஷம், தீபாவளி, பொங்கல், தமிழ் மற்றும் ஆங்கில வருடபிறப்பு ஆகிய விசேஷ நாட்களில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

**எதற்கெல்லாம் பிரார்த்தனைகள் செய்யப்படுகிறது?**
மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் சங்கு தீர்த்தத்தில் மூழ்கிவிட்டு இறைவனை பிரார்த்தனை செய்தால் முழுமையாக குணமடைகின்றனர் என்பது இப்போதும் நடக்கும் அதிசயம்.
திருமண வரம், குழந்தை வரம் வேண்டுவோர் இத்தலத்தில் பிரார்த்தனை செய்கின்றனர்.
இத்தலத்தில் என்னென்ன நேர்த்திக்கடன்கள் செலுத்தப்படுகிறது?
இக்கோயிலில் வேண்டுதல்கள் நிறைவேறியதும் சுவாமி மற்றும் அம்பாளுக்கு வஸ்திரம் சாற்றியும், அபிஷேக ஆராதனைகள் செய்தும் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

## அருள்மிகு உத்தண்ட வேலாயுதசுவாமி திருக்கோயில்...!!



**இந்த கோயில் எங்கு உள்ளது?**
கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஊதியூர் என்னும் ஊரில் அருள்மிகு உத்தண்ட வேலாயுதசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

**இந்த கோயிலுக்கு எப்படி செல்வது?**
கோயம்புத்தூரில் இருந்து சுமார் 73 கி.மீ தொலைவில் ஊதியூர் என்னும் ஊர் உள்ளது. ஊதியூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து நடந்து செல்லும் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

**இந்த கோயிலின் சிறப்புகள் என்ன?**
கருவறையில் தண்டம் ஏந்தி, இடது கையை இடுப்பில் வைத்து, வெற்றி வேலுடன் நின்ற கோலத்தில், மலர் அலங்காரத்தில் வேலாயுதசுவாமி பக்தர்களுக்கு கண்குளிர காட்சியளிக்கிறார்.
சக்திகிரி மற்றும் சிவகிரியை காவடியில் வைத்து சுமந்த கோலத்தில் அருள்பாலிக்கும் இவரை இடும்ப குமரன் என அழைக்கின்றனர்.
இக்கோயிலில் கிழக்கு நோக்கிய நிலையில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் மற்றும் வாத்திய மண்டபம் என நான்கு பகுதிகள் உள்ளது.
உட்பிரகாரத்தில் கன்னிமூல கணபதி, முனியப்பன், கன்னிமார், கருப்பராயன், நவகிரகங்கள் மற்றும் பைரவர் ஆகியோர் தனிச்சன்னதிகளில் அருள்பாலிக்கின்றனர்.

**வேறென்ன சிறப்பு?**
கோயிலுக்கு மேலே உள்ள மலைப்பகுதியில் கிழக்கு நோக்கிய திசையில் கொங்கண சித்தருக்கு கோயில் உள்ளது. இக்கோயிலில் கொங்கண சித்தர் வடக்கு நோக்கி யோக நிஷ்டையில் அமர்ந்துள்ளார்.
கொங்கண சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபட்ட முருகனின் விக்கிரகம் இங்குள்ளது.
இக்கோயிலில் பாத விநாயகர், இடும்பன், ஆஞ்சநேயர் ஆகியோரின் சன்னதிகள் உள்ளன.
ராஜகோபுரத்தின் முன் தீபஸ்தம்பம் அமைக்கப்பட்டுள்ளது.
புகை மூட்டி ஊதியதால் ஊதிமலை என்றும், கொங்கண சித்தர் தவம் செய்து நெருப்பு ஊதி பொன் தயாரித்ததால் பொன் ஊதிமலை என்றும், கொங்கணகிரி என்றும், அனுமன் எடுத்துச் சென்ற சஞ்சீவி மலையின் ஒரு பகுதி இது என்று கருதப்படுவதால் சஞ்சீவி மலை என்றும் பல பெயர்களில் இம்மலை அழைக்கப்படுவதாக தலபுராணம் கூறுகின்றன.
மலைப்பாதையின் தொடக்கத்தில் சுதை சிற்பங்களை கொண்ட கோபுரத்துடன் அமைந்துள்ள அழகான மயில் மண்டபத்தில், கலைநயத்துடன் கூடிய 4 கல் தூண்கள் வீற்றிருப்பது அழகுக்கு அழகு சேர்ப்பதாக அமைந்துள்ளது.
என்னென்ன திருவிழாக்கள் கொண்டாடப்படுகிறது?
கந்தசஷ்டியும், தைப்பூசமும் இக்கோயிலில் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.
கிருத்திகை, சஷ்டி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய மாத விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

**எதற்கெல்லாம் பிரார்த்தனைகள் செய்யப்படுகிறது?**
திருமணத்தடை, குழந்தைப்பேறின்மை ஆகியவற்றிற்கு இத்தலத்தில் பிரார்த்தனை செய்கின்றனர்.
அனைத்து காரியங்களிலும் எந்த தடையும் ஏற்படாமல் வெற்றி கிடைக்க இக்கோயிலில் பிரார்த்தனை செய்கின்றனர்.
இத்தலத்தில் என்னென்ன நேர்த்திக்கடன்கள் செலுத்தப்படுகிறது?
இக்கோயிலில் வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் வேலாயுதசுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தும், நெய்தீபம் ஏற்றியும் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

## குழந்தை பாக்கியம் அருளும் பதிமலை முருகன்

தமிழ்நாட்டில் முருகப்பெருமானுக்கு பல புகழ்பெற்ற மலைக்கோவில்கள் உள்ளன. அந்த வகையில் மிகவும் பழமையும், வரலாற்று சிறப்பும் வாய்ந்த கோவில்தான் பதிமலை முருகன் கோவில். பசுமை நிறைந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு அங்கமாக திகழும் பதிமலை, கோவை மாவட்டம் குமிட்டிபதி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.

**கோவில் அமைப்பு**

கோவில், சிறிய மலைக் குன்றின் மீது சிறிய அளவில் அமைந்துள்ளது. குன்றின்மீது ஏறும் முன் சிறிய அலங்கார நுழைவுவாசல் ஒன்று அனைவரையும் வரவேற்கிறது. சுமார் 350 படிகள் கொண்ட இந்த சிறிய குன்றின் மீது முருகப்பெருமான் பாலதண்டாயுதபாணியாக அருள்பாலிக்கிறார். மலைக் கற்களைக் கொண்டு கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரே ஒரு சன்னிதியை கொண்ட கோவில் கருவறையில் முருகப்பெருமான் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். அவர் வலது கையில் வேல் ஏந்தி, பார்ப்பவர்களை பரவசப்படுத்தும் வகையில் அருள்பாலிக்கிறார். அவருக்கு எதிரே பலி பீடமும், மயில் வாகனமும் காட்சி தருகின்றன. கருவறை வாசலின் இடதுப்பக்கம் விநாயகப்பெருமான் வீற்றிருந்து அருள் வழங்குகின்றார்.

இக்கோவிலின் இடது பக்கத்தில் அன்னை சக்தி தேவி தனிச் சன்னிதியில் இருந்து அருள்பாலிக்கிறார். அவருக்கு எதிரே சிம்ம வாகனமும், நடப்பட்ட சூலங்களும், கொடி மரமும் காட்சி தருகின்றன. இக்குன்றின் மேற்பகுதியில் வற்றாத கிணறு ஒன்று அமையப்பெற்றுள்ளது. இந்தக் கிணற்றில் உள்ள நீரில் தான் சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது.

**குகை ஓவியம்**

கோவில் இருக்கும் மலைக்குன்றின் மேல் இருந்து சற்று கீழே வந்தால் மிகவும்



பழமைவாய்ந்த மலைக் குகைகள் காணப்படுகின்றன. இங்கு ஆதிகால மனிதர்கள் வாழ்ந்ததற்கான பல சான்றுகள் உள்ளன. இங்குள்ள குகை ஓவியங்கள் சுமார் 4000 ஆண்டுகள் பழமையானது என்று கருதப்படுகிறது. இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த கோவிலும் மிகமிகப் பழமையானது என்றே கூறப்படுகிறது.

பழங்காலத்தில் இப்பகுதியில் யானை வளர்ப்பு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டதோடு மட்டுமில்லாமல் யானைச் சந்தையும் நடைபெற்றதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சேர-சோழ போர்களின் போது இம்மலை போர்வீரர்களுக்கு கண்காணிப்பு கோபுரம் போல பயன்பட்டதாகவும், ஆதித் தமிழர்கள் வழிபட்ட முருகன் கோவில் இது என்றும் கூறப்படுகிறது.

**வழிபாடு**

இயற்கை எழில் சூழ்ந்த மலை மீது அமைந்திருக்கும் இந்த திருக்கோவிலுக்கு வந்தாலே மன அமைதி கிடைக்கும் என்கிறார்கள். திருமணத் தடை விலகவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் இங்கு பக்தர்கள் வழிபாடு செய்கின்றனர். இந்த முருகப்பெருமானை வழிபட்டால் பிடித்தமான வேலை, சொந்த வீடு யோகம் போன்றவை கிட்டும் என்று பலன் பெற்ற பக்தர்கள் கூறுகிறார்கள்.

கோவிலில் முருகனுக்கு உரிய கார்த்திகை, சஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் சிறப்பு பூஜைகளும், வழிபாடுகளும் நடத்தப்படுகிறது. மேலும் ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பவுர்ணமி பூஜைகளும், அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறுகிறது.

இக்கோவிலுக்குச் செல்ல இரண்டு படி வழிகள் உள்ளன. ஒன்று அந்தக் காலத்தில் இக்கோவிலுக்குச் செல்ல பயன்படுத்தப்பட்ட படிகள் போன்று மலையிலேயே செதுக்கப்பட்ட கரடு முரடான பாதை. மற்றொன்று தற்போது பக்தர்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட எளிதாக ஏறிச் செல்லக்கூடிய படிப் பாதையாகும்.

கோவில், காலை 9.30 மணி முதல் மதியம் 2 மணி வரை பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

**அமைவிடம்**

கோயம்புத்தூரில் இருந்து பாலக்காடு செல்லும் வழியில் 20 கிலோமீட்டர் தொலைவில் இந்த குமிட்டிபதி மலைக்கோவில் அமைந்துள்ளது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No

8122664699

## துணை முதல்வர் உதயநிதிக்கு பிறந்தநாள் வாழ்த்து




துணை முதல்வர் உதயநிதிக்கு முதல்வர் ஸ்டாலின் முத்தமிட்டு பிறந்தநாள் வாழ்த்து கூறினார். உடன் துர்கா ஸ்டாலின்.



சென்னை அசோக்நகர் பகுதி குடியிருப்போர் சங்கத்தினரை பாஜக மாநில செயலாளர் வினோஜ் செல்வம் சந்தித்து, குறைகளை கேட்டறிந்தார்.

## கார்த்திகை தீப உற்சவ வழிபாடு





கோவையில் ரேஸ்கோர்ஸ் சாரதாம்பாள் கோவிலில் 12,000 விளக்குகள் ஏற்றி கார்த்திகை தீப உற்சவ வழிபாடு நடந்தது.

## கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்: குடும்பத்தினர் சி.பி.ஐ. முன்பு ஆஜர்

**கரூர், டிச.28:** கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி விஜய் பங்கேற்ற தவெக பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்ற உத்தரவின்படி சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் நடைபெற்றபோது அங்கு வந்த ஆம்புலன்ஸ் டிரைவர்களுக்கு சி.பி.ஐ. அதிகாரிகள் ஏற்கெனவே சம்மன் அனுப்பியிருந்தனர். இதில் இதுவரை சுமார் 20-க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வாகன டிரைவர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள் ஆகியோரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் கூட்ட நெரிசல் சம்பந்தமாக தொடர்பாக ஏற்கனவே விசாரணைக்காக சி.பி.ஐ. தரப்பில் சம்மன் அனுப்பப்பட்டவர்களில் உயிரிழந்தவர்களின் 9 குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் இன்று சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜர் ஆனார்கள். அவர்கள் சி.பி.ஐ. அதிகாரிகள் தங்கி விசாரணை நடத்தி வரும் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள பொதுப்பணித்துறையின் சுற்றுலா மாளிகைக்கு வந்தனர். அவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை கேட்டதாக கூறப்படுகிறது. இதனயடுத்து சிபிஐ அதிகாரிகள் தொடர்ந்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

### ரவுசு மணி

வெளித்தோற்றத்தை வைத்து யாரையும் எடை போடாதீர்கள் ... குரலை வெளிப்படுத்தும் வரை.... காகமும் குயிலும் ஒரே மாதிரி தான் தெரியும்



முத்து ராமகிருஷ்ணன்.V சென்னை 18

## துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள்



துணை முதல்வர் உதயநிதி தனது பிறந்தநாளையொட்டி, கருணாநிதி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் அமைச்சர்கள், திமுக முன்னணியினர் உள்ளனர்.

## முதல்வர் ஸ்டாலினுக்கு விவசாயிகள் நன்றி



காட்டுமன்னார் கோவில் வட்டத்தில் 30 வருவாய்கிராமங்களை டெல்டா பகுதியை அறிவித்தமைக்காக முதல்வர் ஸ்டாலினை அந்தப் பகுதி விவசாயிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர். உடன் அமைச்சர் எம்ஆர்கேபன்னீர்செல்வம், சிந்தனைச் செல்வன் எம்எல்ஏ உள்ளனர்.

## குழந்தைகள் நலன்- சேவை விருது



சென்னை தலைமைச் செயலகத்தில் 2025ம் ஆண்டுக்கான குழந்தைகள் நலன்- சேவை விருதுகளை தஞ்சை அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசினர் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி புனித மரியன்னை கருணை இல்லம், சென்னை அரசினர்கூர்நோக்கு இல்லம், ராமநாதபுரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றுக்கு முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் கீதாஜீவன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், சமூகநலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீமுரளிதரன், குழந்தைகள், சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் ஷில்பா உள்ளனர்.

## பள்ளிவாசல்கள்- தர்காக்களை புனரமைக்க நிதி



பள்ளிவாசல்கள் & தர்காக்களை புனரமைக்க ரூ.4.45 கோடி நிதியை நிர்வாகிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார். உடன்அமைச்சர்கள் நாசர், மெய்யநாதன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

## பேருந்து நிழற் குடை அமைக்க பூமி பூஜை



திருவொற்றியூர் எம் ஜி ஆர் நகரில் ரூபாய் 13லட்சத்தில் பேருந்து நிழற் குடை அமைக்க பூமி பூஜையை அதிமுககவுன்சிலர் கார்த்திக் நடத்தி வைத்தார்.

## துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள்



துணை முதல்வர் உதயநிதி, தனது பிறந்தநாளையொட்டி, சென்னை - வேப்பேரி, பெரியார் திடலில் 10 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி, 25 விளையாட்டு குழு வீரர்களுக்கு உபகரணங்கள், 100 திருநங்கைகளுக்கு நலத்திட்டம் உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள்,திமுகவினர் குடும்பங்களுக்கு நிதியுதவி உள்ளிட்டவற்றை வழங்கினார்.

## உலக மீன்வள தின கொண்டாட்டம்



உலக மீன்வள தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

## கர்ப்பிணிகளுக்கு நலத்திட்ட உதவி



கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் சேகர்பாபு முன்னிலையில் நடந்த நிகழ்வில் கர்ப்பிணிகளுக்கு நலத்திட்ட உதவிகளை திரைப்பட நடிகை நளினி, முனைவர். எழிலரசி ஆகியோர் வழங்கினர்.

## முன்னாள் எம்.பி சிலை திறப்பு



தேசிய பால்வள தினத்தை முன்னிட்டு, தமிழ்நாட்டின் பால்வள வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளரான முன்னாள் எம்.பி., எஸ்.கே.பரமசிவம் சிலையை ஈரோடு சித்தோடு ஆவின் வளாகத்தில் முதலமைச்சர் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் ஆவின் ஊழியர்களுடன் அமைச்சர் மனோ தங்கராஜ் மரியாதை செலுத்தினார்.

## பாஜக முகவர்கள் ஆலோசனை கூட்டம்




கோவா பனாஜியில் பாஜக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் பாஜக முன்னணி நிர்வாகி அண்ணாமலை பங்கேற்றார்.

## புதிய பாஜக அலுவலகம் திறப்பு



மொடக்குறிச்சி தொகுதியில் கொல்லன் கோவில் பேரூராட்சியில் அமைக்கப்பட்ட புதிய பாஜக அலுவலகத்தை சரஸ்வதி எம்.எல்.ஏ, திறந்துவைத்தார்.

## திருமண விழா



மதுரையில் நேற்று நடந்த ராமநாதபுரம் ஜமீன் குடும்பத்தின் திருமண விழாவில் மணமக்கள் நாகேந்திர சேதுபதி, சிந்துவுக்கு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வாழ்த்துகள் தெரிவித்தார்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### தேர்வு, நேர்காணல் கிடையாது; விண்ணப்பித்தால் போதும், அரசு துறைகளில் வேலை உண்டு

நீங்கள் அரசு துறைகளில் பணி செய்ய விரும்புகிறீர்களா? தேர்வில்லாமல் உங்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? மத்திய அரசின் இந்த நிறுவனத்தின் மூலம் அரசு துறைகளில் வேலையை உங்களால் பெற முடியும். ஆம், பிராட்காஸ்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் (BECIL) எனப்படும் மத்திய அரசு கன்சல்டன்சி நிறுவனம், பல்துறைகளில் இருக்கும் பணி வாய்ப்புகளுக்கு தகுந்த ஆட்களை தேர்வு செய்து அனுப்பி வருகிறது. அதுவும் தேர்வில்லாமல், நேரடியாக மதிப்பெண்கள் அடிப்படையில் அல்லது நேர்காணல் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்த நிறுவனத்தைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

தமிழ்நாடு அரசு துறைகளில் இருக்கும் பணியிடங்களை நிரப்ப டிஎன்பிஎஸ்சி, டிஆர்பி, எம்ஆர்பி, டிஎன்யுஎஸ்ஆர்பி ஆகியவை செயல்படுகிறது. ஆட்சேர்ப்பு வாரியங்களில் மூலம் போட்டித்தேர்வு நடத்தப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்படுகிறது. இதுவே மத்திய அரசு துறைகளில் இருக்கும் பணிகளுக்கு எஸ்எஸ்சி, யுபிஎஸ்சி, ஆர்ஆர்பி, ஐபிபிஎஸ் ஆகிய தேர்வு வாரியங்கள் உள்ளன. இவைமட்டுமின்றி பொதுத்துறை நிறுவன காலிப்பணியிடங்கள் நிறுவனத்தின் மூலமே நிரப்பப்படுகிறது. இவையில்லாமல் பல்வேறு துறைகளில் உள்ள திட்டங்களில் பணி செய்ய ஆட்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படுகிறார்கள்.டிச.2-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அந்த வகையில், பெரும்பாலானவர்கள் அறியாமல் இருக்கும் நிறுவனமாக BECIL உள்ளது. மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறையின் கீழ் பிராட்காஸ்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் இந்தியா நிறுவனம் செயல்படுகிறது. மத்திய அரசின் பல்துறைகளில் தகவல் தொடர்பு சார்ந்த பணிகளுக்கான ஆட்களை வழங்குதல், பாராமரித்தல், மேம்பாடு ஆகியவற்றுக்கு உதவியாக இருந்து வருகிறது. தகுதியான ஆட்களை வழங்குதல் மற்றும் திட்ட செயல்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முதன்மையாக கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தில் மூலம் ஏற்படுத்தி தரப்படும் வாய்ப்புகளை இளைஞர்கள் https://www.becil.com/Vacancies என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக அறிந்துகொள்ளலாம். பல்வேறு துறை அறிவிப்புகள் இடம்பெறும். அதில் உங்களின் கல்வித்தகுதிக்கு ஏற்ப பணி வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியல் வெளியிடப்படும்.

## சுற்றுலா: இயற்கையின் சொர்க்கம்! தேனி மாவட்டச் சுற்றுலாத் தலங்கள்



தேனி மாவட்டத்தில் சுற்றுலா செல்வதற்கு ஏகப்பட்ட பகுதிகள் உள்ளன. தேனி மாவட்டம் மேகமலை பகுதியில் பார்க்க வேண்டிய இடங்கள் அதிகம் உள்ளன. தேயிலை தோட்டங்கள் சுருளி நீர்வீழ்ச்சி மணலார் அணை மேகமலை வனவிலங்கு சரணாலயம் மற்றும் கும்பக்கரை அருவி போடி மெட்டு கௌமாரி அம்மன் கோவில் போன்ற சிறப்புமிக்க பகுதிகளும் கண்களுக்கு விருந்தளிக்கும் இயற்கை சூழ்ந்த இடங்களும் நம்மை வரவேற்கிறது

அக்டோபர் முதல் மே மாதம் வரை பார்வையிட சிறந்த நேரமாகும்.

மேகமலையில் இயற்கை காடுகள் தேயிலை தோட்டங்கள் நிரம்பி வழிகிறது. மேகமலை பச்சம்மா குச்சி என அழைக்கப்படுகிறது. எங்கு பார்த்தாலும் பசுமையாக உள்ளதால் இந்த பெயர் வந்தது. 18 ஊசி வளைவுகள் உள்ளன. அதில் வளைந்து நெளிந்து செல்வது புதிய அனுபவமாக இருக்கும். மூடுபனி இந்தப் பகுதியில் நிரந்தரமாக உள்ளது. தேயிலை தோட்டங்கள் பசுமையான போர்வையை போர்த்தியது போன்று காணப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 1500 மீட்டர் உயரத்தில் உள்ளது இந்த மேகமலை பகுதி. தேயிலை தோட்டங்களும் ஏலக்காய் தோட்டங்களும் அதிகம் காணப்படும் பகுதி ஆகும்.

இதமான வானிலை கண்கவர் காட்சிகள் மென்மையான காற்று நம்மை வரவேற்கிறது.

இங்கு வனவிலங்கு சரணாலயம் வெள்ளிமலை ஏலக்காய் தோட்டம் தேயிலை தோட்டம் நிறைந்து காணப்படுகிறது. சுருளி அருவி இரண்டு இடங்களில் விழுகிறது. வெள்ளிமலை 1250 மீட்டர் உயரத்தில் உள்ளது.

தேனியில் இருந்து மேகமலைக்கு 54 கிலோ மீட்டர் செல்லவேண்டும்.

மேகமலை வனப்பகுதியில் புகழ்பெற்ற கண்ணகி கோவில் உள்ளது. இந்த கோவில் ஆனது தமிழ்நாடு மற்றும் கேரளா வனப்பகுதியில் அமைந்துள்ளது.

போடியில் இருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் குரங்கணி பகுதியில் சிறந்த சுற்றுலா பகுதியாக காணப்படுகிறது.

இங்குள்ள சுருளி அருவி சுமார் 150 அடி உயரத்தில் இருந்து விழுகிறது. அருவி விழுந்த இடத்திலிருந்து வெகு தூரம் ஆறு போன்று காட்சியளிக்கும்.

### கும்பக்கரை அருவி

பெரிய பாறைகள் இடையே இருந்து வரும் அருவியாகும். கண்கவர் நீர்வீழ்ச்சி பார்ப்போரை பரவசமடையச் செய்யும். இந்தப் பகுதியில் குளிப்பதற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### போடி மெட்டு

போடியில் இருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்த போடி மெட்டு. 4500 அடி உயரத்தில் உள்ளது.

இந்தப் பகுதியில் நிறைய திரைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. கேரளாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

### கௌமாரி அம்மன் கோவில்

தேனியில் இருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவில் இந்த கோவில் அமைந்துள்ளது. இதன் மேற்பகுதிக்கு செல்பவர்கள் இந்த அம்மனை வழிபட்டு சொல்வது வழக்கம்.

## முன்னாள் முதல்வர் ரப்ரி தேவி அரசு பங்களாவை காலி செய்ய உத்தரவு:

பாட்னா, நவ.28:

பீகாரில் முன்னாள் முதல்வர் ரப்ரி தேவியின் அரசு பங்களாவை காலி செய்யுமாறு மாநில அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சித் தலைவர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் அவரது மனைவி ரப்ரி தேவி ஆகியோர் கடந்த 20 ஆண்டுகளாக பாட்னாவில் உள்ள 10, சர்க்குலர் சாலை இல்லத்தில் வசித்து வந்தனர். முன்னாள் முதல்வர்களுக்கு ஆயுட்காலம் முழுவதும் அரசு பங்களா ஒதுக்கீடு செய்யும் முறையை கடந்த 2019ம் ஆண்டு பாட்னா உயர்நீதிமன்றம் ரத்து செய்திருந்தது. இந்நிலையில், சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயகக் கூட்டணி புதிய ஆட்சியை அமைத்துள்ள சூழலில், அமைச்சர்கள் மற்றும் தலைவர்களுக்கான குடியிருப்பு ஒதுக்கீடுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில், மாநில கட்டிட கட்டுமானத் துறை நேற்று ரப்ரி தேவிக்கு நோட்டீஸ் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில், ‘தற்போது வசித்து வரும் பங்களாவை உடனடியாக காலி செய்துவிட்டு, சட்ட மேலவை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள 39, ஹார்டிங்சாலை இல்லத்திற்கு மாற வேண்டும்’ என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

## போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு ரூ.860 கோடி பணப்பலன்கள்: அரசாணை வெளியீடு

சென்னை, நவ.28:

*தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி, ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்க வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, விடுப்பு சம்பளம், ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை போன்றவை, வழங்கப்படாமல் உள்ளன.*




*இந்த பணப்பலன்களை வழங்கக்கோரி, போக்குவரத்து தொழிற்சங்கங்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், அரசு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி, 2024ம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை ஓய்வு பெற்றவர்களுக்கு பணப்பலன் வழங்க, ரூ.860 கோடியே 32 லட்சத்து 76 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து, தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கு ரூ.104 கோடியே 4 லட்சத்து 28 ஆயிரமும், அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கு ரூ.44 கோடியே 74 லட்சத்து 16 ஆயிரமும், விழுப்புரம் அரசு போக்குவரத்து கழகத்திற்கு ரூ.127 கோடியே 85 லட்சத்து 24 ஆயிரமும், சேலம் போக்குவரத்து கழகத்திற்கு ரூ.84 கோடியே 65 லட்சத்து 3 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*இதேபோன்று, கோவை போக்குவரத்து கழகத்திற்கு ரூ.104 கோடியே 10 லட்சத்து 92 ஆயிரமும், கும்பகோணம் போக்குவரத்து கழகத்திற்கு ரூ.197 கோடியே 38 லட்சத்து 15 ஆயிரமும், மதுரை போக்குவரத்து கழகத்திற்கு ரூ.103 கோடியே 90 லட்சத்து 38 ஆயிரமும், திருநெல்வேலி போக்குவரத்து கழகத்திற்கு ரூ.93 கோடியே 64 லட்சத்து 60 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## தடையை மீறி பிடித்த மீன்கள் பறிமுதல்: மீனவர்களுக்கு எச்சரிக்கை

தொண்டி, நவ.28:

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி கடலில் தடை உத்தரவை மீறி மீன்பிடித்தவர்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்து, மீன்களை பறிமுதல் செய்தனர். வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் கடலுக்கு செல்ல தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், 3 நாட்களாக மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இந்நிலையில், தொண்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மீனவர்கள் சிலர் தடை உத்தரவை மீறி கடலுக்கு மீன்பிடிக்க செல்வதாகவும், பிடித்த மீன்களை மார்க்கெட்டில் விற்பதாகவும் மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு புகார் வந்தது.

இதையடுத்து தொண்டி மீன்மார்கெட்டில் மீன்வளத்துறை ஆய்வாளர் அபுதாஹிர் மற்றும் போலீசார் திடீரென ஆய்வு செய்தனர். அப்போது, கடலில் தடையை மீறி பிடித்து விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட மீன்களை பறிமுதல் செய்தனர். தடை உத்தரவை மீறி கடலுக்கு செல்லக்கூடாது எனவும் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். அப்போது மீனவர்கள் சிலர் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது. இதுகுறித்து மீன்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் கடலுக்கு செல்ல தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி மீன் பிடிக்க செல்வோருக்கு அபதாரம் விதிக்கப்படும். மேலும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதுடன் அரசின் நிவாரண உதவிகளும் நிறுத்தப்படும்’ என எச்சரிக்கை விடுத்தனர்.

## நெல்லை, தென்காசியில் மழை குறைவு; தாமிரபரணிக்கு தண்ணீர் வரத்து குறைந்தது

நெல்லை, நவ.28:

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைய தொடங்கிய நிலையில், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் கடந்த ஒரு வார காலமாக நல்ல மழை காணப்பட்டது. நேற்று காலையில் குறைய தொடங்கிய மழை படிப்படியாக கடும் சரிவை இப்போது எதிர்கொண்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் அதிக மழையை கொடுக்கும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள மாஞ்சோலை மற்றும் காக்காச்சியில் தலா 2 மிமீ மழையே பெய்திருந்தது. ஊத்து, காக்காச்சியிலும் இன்று 5 மிமீ மழை கூட பதிவாகவில்லை. நகர்புறங்களை பொறுத்தவரை மூலைக்கரைப்பட்டியில் மட்டுமே 1 மிமீ மழை இன்று பதிவாகியுள்ளது. நெல்லை மாவட்டத்தில் நேற்று மழை குறைந்த நிலையில் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

நெல்லை மாவட்டத்தின் பிரதான அணையான 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணை பகுதியில் சில நாட்களாக பெய்த மழையால் நேற்று 9266 கன அடி நீர் வந்து கொண்டிருந்த நிலையில், தற்போது 3,200 கன அடியாக குறைந்துள்ளது. இதேபோல் அணையில் இருந்து இன்று காலை நிலவரப்படி 2 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே வெளியேற்றப்படுகிறது.

## ‘டியூட்’ படத்தில் பாடல்களை நீக்கக்கோரி இளையராஜா தாக்கல் செய்த மனு: சென்னை ஐகோர்ட் ஒத்திவைப்பு

சென்னை, நவ.28:

*சமீபத்தில் வெளியான ‘டியூட்’ திரைப்படத்தில் தனது அனுமதியின்றி பயன்படுத்தப் பட்டுள்ள பாடல்களை நீக்கக்கோரி இசையமைப்பாளர் இளையராஜா தாக்கல் செய்த மனு மீதான உத்தரவை சென்னை ஐகோர்ட் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்துள்ளது.*

*தீபாவளிக்கு வெளியான டியூட் திரைப்படத்தில், தனது இசையமைப்பில் வெளியான புது நெல்லு புது நாத்து திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த, கருத்த மச்சான் மற்றும் பணக்காரன் படத்தில் இடம்பெற்றிருந்த 100 வருஷம் இந்த மாப்பிள்ளைக்கு ஆகிய பாடல்களை தனது அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறி இசையமைப்பாளர் இளையராஜா சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள அந்த மனுவில், படத்தில் இடம்பெற்றுள்ள இந்த இரண்டு பாடல்களையும் நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.*

*இந்த வழக்கானது, நீதிபதி என். செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, 30 ஆண்டுகளுக்கு முன் வெளியான இந்த பாடல்களை தற்போது கேட்டு ரசிக்கின்றனர். இதனால் இளையராஜா எப்படி பாதிக்கப்படுகிறார் எனவும், பழைய பாடல்களை பயன்படுத்துவது தற்போது ட்ரெண்டாகி வருவதாகவும் நீதிபதி குறிப்பிட்டார்.*

*இதற்கு பதில் அளித்து வாதிட்ட இளையராஜா தரப்பு மூத்த வழக்கறிஞர் பிரபாகரன், தனது அனுமதி இல்லாமல் பதிப்புரிமைச் சட்டத்தை மீறும் வகையில் இந்த பாடல்கள் படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தனது பாடலை உருமாற்றி உள்ளனர். பாடலுக்கான உரிமை தங்களிடம் உள்ளது. அதனால், படத்திலிருந்து பாடலை நீக்கியும், பாடலுக்கு தடை விதித்தும், இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.*



*அப்போது ‘டியூட்’ பட தயாரிப்பு நிறுவனத்தின் தரப்பில் ஆஜராகி இருந்த வழக்கறிஞரிடம் நீதிபதி செந்தில்குமார், தொடர்ச்சியாக மனுதாரரின் பாடல்களை பதிப்புரிமையை மீறி பயன்படுத்துவது ஏன் என கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த திரைப்பட தயாரிப்பு நிறுவனமான மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன், பாடல்களின் உரிமையை எக்கோ நிறுவனத்திடமிருந்து சோனி நிறுவனம் பெற்றிருந்ததாகவும், சோனி நிறுவனத்திடம் இருந்து இந்த பாடல்களை படத்தில் பயன்படுத்துவதற்கான அனுமதியை பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.*

*இப்போதைய இளையராஜா தரப்பில் ஏற்கனவே எக்கோ நிறுவனம் பயன்படுத்த இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்துள்ளதாக சுட்டிக்காட்டினார். அப்போது குறுக்கிட்ட நீதிபதி, படம் திரையரங்கிலும் ஓ டி டி தளங்களிலும் வெளியாகும் வரை அமைதியாக இருந்துவிட்டு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்தது ஏன் என இளையராஜா தரப்புக்கு கேள்வி எழுப்பினார்.*

*தேதி குறிப்பிடாமல்...*

*இதற்கு பதில் அளித்த இளையராஜா தரப்பு வழக்கறிஞர், ஏற்கனவே இது சம்பந்தமாக தயாரிப்பாளர் தரப்பிற்கு நோட்டீஸ் அனுப்பிய போது, அதுபோல எந்த நபரும் இல்லை என்று நோட்டீஸ் திருப்பி அனுப்பப்பட்டதாக புகார் தெரிவித்தார். வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனு மீது உத்தரவு பிறப்பிப்பதற்காக தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தார்.*

# மருதமலை முருகன் கோவிலில் ரூ.57 கோடியில் திருப்பணிகள் மும்முரம் : அலுவலர்களுடன் சேகர்பாபு ஆய்வு



**சென்னை நவ.28:**

இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆணையர் அலுவலகத்தில் கோவை மாவட்டம், மருதமலை, சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ரூ.57.05 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவு (மாஸ்டர் பிளான்) மற்றும் தனித்துவமான திட்டத்தின் (ஐகானிக் புராஜக்ட்) கீழ் நடைபெற்று வரும் திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்திடும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.


இக்கூட்டத்தில் மருதமலை, சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் ரூ.40.53 கோடி மதிப்பீட்டில் 3 கட்டங்களாக நடைபெற்று வரும் அன்னதானக்கூடம், முன்மண்டபம், 11 படிக்கட்டு மண்டபங்கள், சுற்றுச்சுவர், மின்தூக்கி, பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பணிகள், பேருந்து பயணச்சீட்டு வழங்குமிடம்,

படிப்பாதையுடன் இணைக்கும் முன்மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், மலை மற்றும் அடிவாரத்தில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பணியாளர் குடியிருப்புகள் மற்றும் தனித்துவமான திட்டத்தின் கீழ் ரூ.16.52 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் முகப்பு வளைவு, வசந்த மண்டபம், யாகசாலை, மடப்பள்ளி, பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமானப் பணிகள், மலைப்பாதை சாலைகள் மேம்படுத்தும் பணிகள் ஆகியவை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சர் பேசுகையில், 'அறுபடை வீடுகளுக்கு நிகராக திகழ்ந்து வரும் மருதமலை, சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு ரூ.57.05 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்து, பக்தர்களின் பயன்பாட்டிற்கு வழங்கிடும் வகையில் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்றிட வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

## குடலும் மூளையும் பேசுவதை ஒட்டு கேட்கலாம்



பல ஆண்டுகளாக, குடல் ஒரு செரிமான உறுப்பாகவே கருதப்பட்டது. இது உண்மைதானா என்பதை அறிய, கேம்பிரிட்ஜ் பல்கலை ஆய்வாளர்கள் வித்தியாசமான ஓர் ஆய்வை செய்து பார்த்தனர்.

அவர்கள், குடலும், மூளையும் பரஸ்பரம் பரிமாறும் சமிக்ஞைகளை நிகழ் நேரத்தில் பதிவு செய்வதற்காக, குடல் சுவர்களில் ஒரு தலைமுடி அளவே உள்ள கருவியை பொருத்தினர்.

இந்தக் கருவி, 'இரண்டாவது மூளை' என்று அழைக்கப்படும் இரைப்பைக் குழாயில் அமைந்திருக்கும் பல லட்சம் நியூரான்களைக் கொண்ட நரம்பு மண்டலத்துடன் தொடர்பு கொள்கிறது.

மேலும், சமிக்ஞைகள் மற்றும் நரம்புத் துடிப்புகள் வாயிலாக இது மூளையுடன் எவ்வாறு பேசுகிறது என்பதைக் கண்காணிக்கிறது. விழித்திருக்கும் விலங்குகளிடமிருந்து, உணவு அல்லது மன அழுத்தத்தின் கீழ் தகவல்களைப் பதிவு செய்யும் திறன் நமக்குக் கிடைத்துள்ளது. இதன் பொருள், குடல்--மூளைத் தொடர்பு எவ்வாறு ஆரோக்கிய த்திற்கும் நோய்க்கும் அடிப்படையாக இருக்கிறது என்பதை நாம் இறுதியாகக் கண்டறியலாம்.

மூளை--குடல் ஆகியவற்றுக்கு இடையே நடக்கும் உரையாடலை ஒட்டுக்கேட்பதன் வாயிலாக, ஒரு மனிதரின் உடல் நலத்தை தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். அதேபோல, குரோன்ஸ் நோய், பெருங்குடல் அழற்சி, குடல் எரிச்சல் நோய் மற்றும் நரம்பியல் குறைபாடுகள் ஏற்படுவதற்கு முன்பே அவற்றைத் தெரிந்துகொள்ளவும், சிகிச்சை தரவும், இந்த நிகழ்நேர ஒட்டுக்கேட்டல் உதவும். மேலும், உடல் பருமன், அனோரெக்சியா எனப்படும் எடை இழப்பு நோய் போன்றவற்றுக்கு சிகிச்சைகளைக் கண்டுபிடிக்கவு ம் இந்த முறை உதவும்.

# ஊட்டி தாவரவியல் பூங்கா குளங்களில் சீரமைப்பு பணி மும்முரம்



**ஊட்டி, நவ.28:**

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள குளங்களில் அல்லிச் செடிகள் அகற்றப்பட்டு சீரமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள அரசு தாவரவியல் பூங்காவிற்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

குறிப்பாக கோடைகாலங்களில் அதிக அளவு சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகளை வரவேற்கும் வகையில் ஆண்டுதோறும் கோடை சீசனுக்காக பூங்காவை தயார் செய்வது வழக்கம்.

இந்நிலையில் அடுத்த ஆண்டு வரும் கோடை சீசனுக்கு பூங்காவை தயார் செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. தற்போது பூங்காவில் உள்ள அனைத்து பாத்திகளும் தயார் செய்யப்பட்டு நாற்று நடவும் பணிகள் துவக்கப்பட்டு உள்ளது.

இதற்காக விதைப்பு பணிகளும், நாற்று உற்பத்தியும் தீவிரமாக நடந்து வருகிறது. இது தவிர பூங்காவில் பல்வேறு மேம்பாட்டு பணிகளும் நடந்து வருகின்றன.

தற்போது தாவரவியல் பூங்காவில் உள்ள குளங்களை சீரமைக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. இதற்காக பூங்கா நடுவில் உள்ள பெரிய குளத்தில் இருந்து அல்லி செடிகள் அகற்றப்பட்டு, குளத்தின் கரையோரங்கள் சீரமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

இதேபோல் பூங்கா நுழைவாயில் பகுதியில் உள்ள குளங்களும் சீரமைக்கும் பணி நடக்கிறது. குளங்களை சுற்றி இருந்த மலர் செடிகள் அனைத்தும் அகற்றப்பட்டு, அங்கு புதிய மலர் செடிகள் நடவு செய்வதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

# பெண்களுக்கு ரூ.10 லட்சம் வரை வங்கிக் கடன், ரூ.2 லட்சம் மானியம்: சென்னை கலெக்டர் தகவல்

**சென்னை, நவ.28:**

தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் துவங்க ஆர்வம் உள்ள பெண்கள் உரிய ஆவணங்களுடன் WWW.MSMEONLINE.TN.GOV.IN என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம் என சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி, சேவை மற்றும் வணிகம் சார்ந்த தொழில்களுக்கும் ரூ.10 லட்சம் வரை வங்கிக் கடனுதவியும், 25 சதவீதம் (அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வரை) மானியமும் வழங்குவதோடு, உரிய பயிற்சியும் வழங்கப்படும். தொழில் வளர்ச்சிக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பெண்கள் மற்றும் திருநங்கைகள் தகுதியானவர்கள் ஆவார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், ஆதரவற்ற கைம்பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். குறைந்தபட்ச வயது 18, அதிகபட்ச வயது 55 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தில் மட்டும் பொருட்கள் தயாரிப்பு, விவசாய உற்பத்தி கழிவுகளில் (தவிடு, வைக்கோல்) இருந்து பொருட்கள் தயாரித்தல், தென்னை நார் மூலம் தயாரிக்கப்படும் செடி வளர்க்கும் தொட்டிகள், காகித கழிவுகளிருந்து பென்சில் தயாரித்தல், ஆடை வடிவமைப்பு, அலங்கார அணிகலன்கள் தயாரிப்பு, கண்ணாடி ஓவியம், கண்ணாடி பொருட்கள் தயாரிப்பு, பட்டுநூல் அணிகலன் தயாரிப்பு, வீட்டில் தயார் செய்யும் உணவு பொருட்கள் விற்பனையகம், யோகா நிலையம், உடற்பயிற்சி நிலையம், சலவை நிலையங்கள், மணப்பெண் அலங்கார நிலையம் இதர தகுதியான தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, இத்திட்டத்தில் தொழில் துவங்க ஆர்வமுள்ள பெண்கள் உரிய ஆவணங்களான புகைப்படம், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதி சான்றிதழ், திட்ட அறிக்கை, வங்கி கணக்கு விவரம், விலைப்புள்ளி பட்டியலுடன் WWW.MSMEONLINE.TN.GOV.IN என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

# டிசம்பர் 1ம் தேதி முதல் அனுமதி; செம்மொழி பூங்காவுக்கு நுழைவு கட்டணம் நிர்ணயம்



**கோவை, நவ. 28:**

டிசம்பர் 1ம் தேதி முதல் செம்மொழி பூங்காவிற்கு அனுமதி அளிக்கப்பட உள்ளது. நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.15, சிறியவர்களுக்கு ரூ.5 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கோவை காந்திபுரத்தில் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 45 ஏக்கரில் ரூ.208.50 கோடி மதிப்பீட்டில் செம்மொழி பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த செம்மொழி பூங்கா தனித்துவ அம்சங்களுடன், உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக, அரசு அதிகாரிகள் அடங்கிய சிறப்பு குழுவினர், லண்டன் சென்று கியூ பூங்கா மற்றும் சிங்கப்பூரில் உள்ள தாவரவியல் பூங்கா, ஷாங்காய் பூங்காக்களை பார்வையிட்டனர். அங்குள்ள செடி, கொடிகள், தாவரங்கள் மற்றும் அவற்றை பராமரிக்க எடுத்துக் கொள்ளும் முயற்சிகள், வெற்றிகள் மற்றும் தோல்விகளை ஆராய்ந்தனர். இதைத்தொடர்ந்து, செம்மொழி பூங்காவில் செயல்படுத்தி உள்ளனர்.

23 விதமான தோட்டங்கள் அமைக்கப்பட்டு, அதில் 2 ஆயிரம் வகையான தாவரங்கள் இடம் பெற்றுள்ளன. அதேபோல சங்க காலத்தில் இடம் பெற்றிருந்த அரிய வகை மர வகைகள், மேற்குத்தொடர்ச்சி மலை வாழ் அரியவகை தாவரங்கள் இப்பூங்காவில் வைக்கப்பட்டுள்ளன. செடி, கொடிகள், தாவரங்கள், அரிய வகை மரங்களை ரசித்து செல்லும் வகையில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. எப்போதும் பசுமையுடன் காணப்படும் நறுமணமிக்க மரமான தென் அமெரிக்காவில் பெரு, சிலி, பிரேசிலில் காணப்படும் மிளகு மரம் இடம் பெற்றுள்ளது. வெள்ளை மற்றும் மஞ்சள் நிற செந்தூரம் மரமும், மிகவும் அரிய வகையான கருப்பு அத்தி போன்சாய் மரமும் நடப்பட்டுள்ளது. முழங்கால் அளவுக்கு செடிகள் வளர்க்கப்பட்டு, சிறுவர், சிறுமியர் 'மேஸ்' விளையாட்டு உருவாக்கப்பட்டுள்ளது. கடையேழு வள்ளல்கள் சிலைகள் வைக்கப்பட்டுள்ளது. மழை நீரை சேமிக்க 15 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவதற்கான நவீன வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது. முதியோர், மாற்றுத்திறனாளிகள் பூங்காவை சுற்றிப்பார்க்கும் வகையில், பேட்டரி வாகனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வருகிற திங்கட்கிழமை (டிசம்பர் 1ம் தேதி) முதல் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட உள்ளனர். அதற்கு நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ. 15, சிறியவர்களுக்கு ரூ.5, வீடியோ கேமிரா அனுமதிக்க ரூ.50, நடைப்பயிற்சி மேற்கொள்ள மாதக்கட்டணம் ரூ.100, ஆண்டு கட்டணம் ரூ.1000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோல திரைப்பட ஒளிப்பதிவுக்கு ஒரு நாளைக்கு ரூ.25 ஆயிரமும், குறும்பட ஒளிப்பதிவுக்கு ஒரு நாளைக்கு ரூ.2 ஆயிரமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டணம் வரும் 28ம் தேதி நடைபெறும் மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது. அதன் பின்னர் நடைமுறைக்கு கொண்டுவரப்பட உள்ளது.

## க்ரைம் கார்னர்

### மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் விற்பனை: 2 பேர் கைது

**சென்னை, நவ.28:**

வேப்பேரி பகுதியில் சட்டவிரோதமாக மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

வேப்பேரி காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் புரசைவாக்கம், தானா தெரு, ஆவின் பூத் அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 2 நபர்களை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், வேப்பேரி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த சுதர்சன், தேவ் ஆனந்த் ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2.19 கிராம் மெத்தம்பெட்டமைன் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் இருவரும் மேற்படி மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளை பெங்களூரிலிருந்து வாங்கி வந்தது தெரியவந்தது.

### துறையூர் வழக்கறிஞர் வீட்டில் விலை உயர்ந்த பைக் திருட்டு

**துறையூர், நவ.28:**

திருச்சி மாவட்டம் துறையூர் பெரிய தெப்பக்குளம் பகுதியில் வசித்து வருபவர் ராஜா, இவர் துறையூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார். இவருடன் இவரது தம்பி சதீஷ் குமார் மற்றும் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று இரவு வழக்கம் போல் குடும்பத்தினர், வீட்டின் கேட்டை பூட்டிவிட்டு தூங்க சென்று விட்டனர். அதிகாலை எழுந்து பார்த்த பொழுது, வீட்டில் வைத்திருந்த விலை உயர்ந்த சுமார் ரூ. 2 லட்சம் மதிப்புள்ள இருசக்கர வாகனம் திருடு போனது தெரிய வந்தது.

மேலும் அவரது வீட்டில் வைத்திருந்த மற்றொரு இரு சக்கர வாகனம் பெட்ரோல் இல்லாத காரணத்தால் திருடர்கள் வீட்டில் இருந்து சுமார் 100 அடி தூரத்தில் சாலை ஓரத்தில் தூக்கி எறிந்து விட்டு சென்றுள்ளனர். இதே போல் ஆத்தூர் சாலையில் இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடையில் வைக்கப்பட்டிருந்த ஸ்கூட்டரை திருடி சென்ற ஆசாமிகள், பாதி வழியில் பெட்ரோல் இல்லாததால் துறையூர் காவல் தாய் அம்மன் கோவில் அருகே, அந்த வாகனத்தையும் நிறுத்தி விட்டு சென்றுள்ளனர். இது பற்றி தகவல் அறிந்த துறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து அடுத்தடுத்து இரு சக்கர வாகனங்களை திருடிய மர்ம நபர்களை, வலை வீசி தேடுகின்றனர். மேலும் ,அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

### ஏ.டி.எம் மையத்தில் பணம் டொசிட் செய்ய வந்தவரை மிரட்டி ரூ. 8 லட்சம் பறிப்பு: ஆசாமி கைது

**சென்னை, நவ. 28:**

அபிராமபுரம் பகுதியில் ஏ.டி.எம் மையத்தில் டெபாசிட் செய்து கொண்டிருந்த நபரை மிரட்டி ரூ. 8 லட்சம் பணத்தை பறித்துச்சென்ற நபரை கைது செய்த போலீசார் பணத்தை மீட்டனர்.

சென்னை, திருவல்லிக்கேணி பகுதியைச்சேர்ந்த சையது முகமது, பையில் ரூ.10 லட்சம் பணத்தை எடுத்துக்கொண்டு அபிராமபுரம், சிருங்கேரி மடம் சாலையில் உள்ள ஏ.டி.எம் மையத்திற்கு சென்று அங்கு உள்ள டெபாசிட் இயந்திரத்தில் அவரது நண்பர்களின், வங்கி கணக்கில் பணத்தை டெபாசிட் செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு தலைக்கவசம் அணிந்து வந்த 2 நபர்கள் அரிவாளை காட்டி மிரட்டி மேற்படி சையது முகமது டெபாசிட் செய்தது போக மீதமிருந்த சுமார் ரூ.8 லட்சத்து 9 ஆயிரத்து 500 அடங்கிய பணப்பையை பறித்துக்கொண்டு தப்பிச்சென்றனர். இது குறித்து சையது முகமது அபிராமபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட பாண்டியராஜா என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ. 8 லட்சம் அடங்கிய பணப்பையை மீட்டனர். மேலும் குற்றச் செயலுக்கு பயன்படுத்திய அரிவாள் மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளியை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

### ஐகோர்ட் மதுரை கிளை பாதுகாப்பு பணியில் இருந்த காவலர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

**மதுரை, நவ. 28:**

மதுரையில் பாதுகாப்பு பணியில் இருந்த சிறப்பு காவல்படை காவலர் தற்கொலை கடிதம் எழுதி வைத்துவிட்டு துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மதுரை மாவட்டம், எழுமலை கோட்டைப்பட்டியைச் சேர்ந்த மகாலிங்கம் என்ற சிறப்புப் படை காவலர் 2023 ஆம் ஆண்டு காவலர் பணியில் சேர்ந்துள்ளார். சிறப்பு காவல்படை காவலரான மகாலிங்கம் சென்னை ஐகோர்ட் மதுரை கிளை முன்பாக நேற்றிரவு முதல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் திடீரென பாதுகாப்பிற்காக வைத்திருந்த துப்பாக்கியால் தனக்குதானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்துள்ளார். அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் இருந்த மற்ற காவலர்கள், மகாலிங்கத்தை மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும்வழியிலேயே உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதையடுத்து காவலர் மகாலிங்கத்தின் உடல், உடற்கூராய்வுக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஆபரேஷன் சிந்தூரின் போது உரி நீர்மின் திட்டத்தை தகர்க்க திட்டமிட்ட பாகிஸ்தான்: சதியை முறியடித்த ராணுவ வீரர்களுக்கு விருது

ஸ்ரீநகர், நவ.28:

ஆபரேஷன் சிந்தூரின் போது உரி நீர்மின் திட்டத்தை தகர்க்க முயற்சித்த பாகிஸ்தானின் சதித்திட்டத்தை முறியடித்த இந்திய ராணுவ வீரர்களுக்கு விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.



ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைமேற்கொண்டது. இதில் பாகிஸ்தானில் உள்ள முக்கியமான பயங்கரவாத முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக களமிறங்கிய பாகிஸ்தான் ராணுவத்துக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. இறுதியில் பாகிஸ்தான் ராணுவம் கெஞ்சி கேட்டுக் கொண்டதால், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியது.

இந்த நிலையில் ஆபரேஷன் சிந்தூரின் போது, பாகிஸ்தான் நடத்தவிருந்த மிகப்பெரிய சதித்திட்டத்தை மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர். இந்த செயலில் ஈடுபட்ட 19 வீரர்களுக்கு நேற்று விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சிஐஎஸ்எப் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் தொடங்கப்பட்ட மே 6ம் தேதி இரவு, இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியது. இதனால் உரி நீர்மின்நிலையத் திட்டங்கள் உள்ளிட்ட முக்கியமான உள்கட்டமைப்புகள் ஆபத்திற்கு உள்ளாகின. உரி நீர்மின் நிலையத்தை நோக்கி பாகிஸ்தான் டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது, துணை தளபதி ரவி யாதவ் தலைமையிலான குழு, பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்துக் கொண்டே, அப்பகுதியில் உள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றினர். பாகிஸ்தான் டிரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டது.

# விளையாட்டு செய்திகள்

## மதுரையில் மாநில வாலிபால் போட்டி: வெற்றி பெற்ற அணிக்கு பரிசு

மதுரை, நவ.28:

மதுரையில் "ஸ்டார்குரு" சேரிட்டபிள் பவுண்டேசன், ஸ்டார் குரூப் ஆப் கம்பெனிகள் சார்பில், பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாநில அளவிலான 19 வயதுக்கு உட்பட்டோ ருக்கான வாலிபால் போட்டிகள் கரிமேடு ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் 2 நாட்கள் நடைபெற்றது.

இதில் மதுரை, திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல், சேலம், சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றது. மகளிருக்கான இறுதிப் போட்டியில், சேலம் செயின்ட் மேரீஸ் அணி முதலிடத்தையும், ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் தஞ்சாவூர் எஸ்.டி.ஏ.டி அணியும் முதலிடத்தையும் பெற்று, சாம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூ.10,000மும், 2வது பரிசாக ரூ.8,000மும், 3வது பரிசு ரூ.6,000 மற்றும் சுழல் கோப்பைகளை "ஸ்டார்குரு" சாரிட்டபிள் பவுண்டேஷன் நிறுவனர் 'சமூகசேவகர்' குருசாமி வழங்கினார்.

தினம் 1000 பேருக்கு அன்னதானம்:

சமூக சேவகரான 'ஸ்டார்குரு' பவுண்டேஷன் நிறுவனர் குருசாமி, விளையாட்டு துறையில் முன்னேற துடிக்கும் மாணவர்களை தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து ஊக்குவித்து வருகிறார். ஆதரவற்ற மற்றும் ஏழை எளிய மாணவர்களின் கல்விக்கு உதவி இருக்கிறார். மேலும், தொடர்ந்து 650 நாட்களை தாண்டி தினமும் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கி வருகிறார். தொடர்ந்து இதுபோல் பல சமூக சேவைகளை செய்து வரும் குருசாமி மதுரை மக்களின் அன்பையும், பாராட்டு தலையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அகமதாபாத்தில் 2030-ல் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி: அதிகாரப்பூர்வ அறிவிப்பு

கிளாஸ்கோ, நவ.28:

2030-ம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் நடை பெறும் என அதிகாரப்பூர்வ அறிவிப்பு நேற்று வெளி யானது.

72 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங் கேற்கும் காமன்வெல்த் விளையாட்டு போட்டியை நடத் துவதற்கான உரிமையை பெற இந்தியா உள்பட பல் வேறு நாடுகள் போட்டியிட்டன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு காமன்வெல்த் விளையாட்டு குழுவினர் அகமதாபாத் நகரில் ஆய்வு நடத்தினர். இந்நிலையில், காமன்வெல்த் போட்டியை நடத்த இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் 2030-ம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகள் நடத்த காமன்வெல்த் கூட்டமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடுவதற்கான காமன்வெல்த் விளையாட்டு பொதுக் குழுக் கூட்டம் இங்கிலாந்தின் கிளாஸ்கோ நகரில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காமன்வெல்த் விளை யாட்டுப் போட்டி பொதுக்குழுவில் உள்ள 74 உறுப்பினர் கள், 2030-ம் ஆண்டு நடைபெறவுள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை அகமதாபாத்தில் நடத்த ஒப் புதல் அளித்தனர். இதையடுத்து 2030-ல் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி நடைபெறும் நகரம் அகமதாபாத் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து காமன்வெல்த் விளையாட்டு அமைப் பின் தலைவர் டாக்டர் டொனால்டு ருகாரே கூறும்போது, "இளம் வீரர்கள், லட்சியம், வளமான கலாச்சாரம், மகத் தான விளையாட்டு ஆர்வம், விளையாட்டுப் போட்டிக் கான வசதிகளை இந்தியா கொண்டு வந்துள்ளது. 2030-ல் அகமதாபாத்தில் காமன்வெல்த் விளையாட்டு நடை பெறும்" என்றார்.

2036-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு இந்திய அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. போட்டியை நடத்துவதற்கான நகரங்களின் பட்டியலில் அகம தாபாத்தும் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து அங்கு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான தரத் துடன் மைதானங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

2030-ல் காமன்வெல்த் விளையாட்டை நடத்துவதற் கான உரிமையை பெறுவதில் அகமதாபாத் நகருடன், நைஜீரியாவிலுள்ள அபுஜா நகரும் போட்டியிட்டது. ஆனால் காமன்வெல்த் அமைப்பு அகமதாபாத்தைத் தேர்வு செய்துள்ளது. முதல் காமன்வெல்த் போட்டி கனடாவின் ஹாமில்டன் நகரில் நடைபெற்றது. இந்தி யாவில் முதன்முறையாக 2010-ம் ஆண்டு டெல்லியில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

## உலகக் கோப்பை செஸ்: ஜாவோகிர் சாம்பியன்

கோவா, நவ.28:

ஃபிடே உலகக் கோப்பை செஸ் தொடர் கோவா வில் நடைபெற்று வந்தது. இதன் இறுதிப் போட்டி யில் உஸ்பெகிஸ்தானின் 19 வயதான ஜாவோகிர் சிந் தரோவ், சீனாவின் வெய் யி மோதினார்கள். முதலில் இவர்கள் விளையாடிய 2 கிளாசிக்கல் ஆட்டங்களும் டிரா வில் முடிவடைந்திருந்தன. இதையடுத்து வெற்றியை தீர் மானிப்பதற்கான டைபிரேக்கர் ஆட்டங்கள் நேற்று நடை பெற்றன. இதில் முதல் ஆட்டம் டிராவில் முடிவடைந் திருந்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற 2-வது ஆட் டத்தில் ஜாவோகிர் சிந்தரோவ் வெற்றி பெற்றார். முடிவில் ஜாவோகிர் சிந்தரோவ் 2.5-1.5 என்ற புள்ளிகள் கணக் கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் இளம் வயதில் உலகக் கோப்பை செஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையை படைத் தார் ஜாவோகிர் சிந்தரோவ். சாம்பியன் பட்டம் வென்ற அவருக்கு விஸ்வநாதன் ஆனந்த் கோப்பையுடன் ரூ.1 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

## எஸ்ஐஆருக்கு எதிரான மனுக்கள்: டிச.4-இல் விசாரணை

புதுடெல்லி, நவ.28:

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற் கொள்வதற்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட மனுக்கள் வருகிற டிசம்பர் 4 ஆம் தேதி விசாரிக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் அறிவித் துள்ளது.

தமிழகம், கேரளம், மேற்குவங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரி வித்து பல்வேறு மாநிலங் களில் இருந்து உச்சநீதி மன்றத்தில் மனு அளிக்கப் பட்டுள்ளது.

கேரள அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு வில், டிசம்பர் 9 மற்றும் 11 தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், எஸ்ஐஆர் பணிகள் இடையூறுகளை ஏற்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, கேரள மாநில மனுக்கள் டிச.2 ஆம் தேதியும், தமிழக மனுக்கள் டிச.4 ஆம் தேதியும், மேற்கு வங்க மனுக்கள் டிச.9 ஆம் தேதியும் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் எஸ்ஆர்ஐ பணிகளுக்கு எதிராக திமுக, சிபிஎம், மதிமுக, விசிக உள்ளிட்ட கட்சிகள் மனு தாக்கல் செய்துள்ளன. இந்நிலையில், உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமை யிலான நீதிபதிகள் எஸ். என்.வி பாட்டீ மற்றும் ஜாய்மால்ய பாக்சி ஆகி யோர் அடங்கிய அமர்வு, தேர்தல் ஆணையம் பதி லளிக்க உத்தரவிட்டுள்ளது.

## மராட்டிய மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு ரூ.9,800 கோடி: மத்திய மந்திரிசபை ஒப்புதல்





புதுடெல்லி, நவ.28:

மராட்டிய மாநில மெட்ரோ ரெயில் திட்டத்தை ரூ.9,800 கோடியில் நிறைவேற்ற மத்திய மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய மந்திரி சபை மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரி சபை கூட்டங்களில் 4 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த 4 திட்டங்களும் ரூ.19 ஆயிரத்து 919 கோடி மதிப்பிலானவை ஆகும்.

இதுகுறித்து மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் நேற்று விரிவாக எடுத்துரைத்தார்.

அதில் முக்கியமானது பூமியில் கிடைக்கும் அரிய நிரந்தர காந்தங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான திட்டமாகும். இந்த திட்டம் ரூ.7,280 கோடி மதிப்பிலானது. இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 6 ஆயிரம் டன் காந்தத்தை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது.

மின்சார வாகனங்கள், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி, தொழில்துறை பயன்பாடுகள் மற்றும் நுகர்வோர் மின்னணு சாதனங்கள் ஆகியவற்றின் தேவை வளர்ந்து வருவதை கருத்தில் கொண்டு இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாக மந்திரி தெரிவித்தார். இந்த திட்டத்தின் மொத்த காலம் 7 ஆண்டுகள் ஆகும். இதில் ரூ.750 கோடி மூலதன மானியமாக அடங்கி உள்ளது.

மந்திரிசபை ஒப்புதல் கொடுத்த அடுத்த முக்கியமான திட்டம் புனே மெட்ரோ ரெயிலின் 2-ம் கட்ட திட்டமாகும். இந்த திட்டம் ரூ.9,858 கோடி மதிப்பிலானது. அடுத்ததாக குஜராத் மற்றும் மராட்டிய மாநிலங்களில் 4 மாவட்டங்களை உள்ளடக்கிய 2 ரெயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

## 'ஜல் ஜீவன்' திட்டத்தில் முறைகேடு: தமிழ்நாடு உள்பட 7 மாநிலங்களுக்கு மத்திய அரசு ரூ.129 கோடி அபராதம்




புதுடெல்லி, நவ.28:

ஜல்ஜீவன் திட்டத்தில் முறைகேடு நடந்துள்ளதாக கூறி தமிழ்நாடு உள்பட 7 மாநிலங்களுக்கு பிரதமர் மோடி உத்தரவின் பேரில் ரூ.129 கோடி அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது.

'இல்லம்தோறும் குழாய் இணைப்பு' என்ற முழக்கத்தில் குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்கும் திட்டமான 'ஜல் ஜீவன் மிஷன்' என்ற திட்டத்தை பிரதமர் மோடி கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந்தேதி தொடங்கி வைத்தார். இதற்கிடையே இந்த திட்டத்தின் பணிகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு வந்தது. சில மாநிலங்களில் பல முறைகேடுகள் நடந்திருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அதாவது குஜராத், மராட்டியம், கர்நாடகம், தமிழ்நாடு, திரிபுரா, அசாம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய 7 மாநிலங்களில் முறை கேடுகள் நடந்திருப்பது தெரியவந்தது. இதனை அதிகாரிகள் பிரதமர் மோடியின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். இதனால் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், திட்டத்தை தீவிரமாக கண்காணிக்கவும் உத்தர விட்டார்.

இதனைத்தொடர்ந்து அந்த மாநிலங்களுக்கு ரூ.129 கோடியே 67 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. இதில் அதிகபட்சமாக குஜராத் மாநிலத்துக்கு ரூ.120 கோடியே 65 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

ராஜஸ்தானுக்கு ரூ.5.34 கோடியும், மராட்டிய மாநிலத்துக்கு ரூ.2 கோடியே 2 லட்சமும், திரிபுராவுக்கு ரூ.1 கோடியே 22 லட்சமும், கர்நாடகத்துக்கு ரூ.1 கோடியே ஒரு லட்சமும், அசாம் மாநிலத்துக்கு ரூ.5 லட்சத்து 8 ஆயிரமும், தமிழ்நாட்டுக்கு ரூ.3 லட்சமும் அபராதம் விதிக்கப் பட்டது. இதனை உடனடியாக வசூலிக்கவும் பிரதமர் அலுவலகத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இதன்பேரில் குஜராத் மாநிலத்தில் இதுவரை ரூ.6 கோடியே 65 லட்சம் வசூலிக்கப்பட்டு உள்ளது. மொத்தமாக ரூ.12 கோடியே 95 லட்சம் வசூலிக்கப்பட்டு உள்ளது. இந்த தகவல்களை சம்பந்தப்பட்ட துறையின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்து உள்ளார்.

## இரண்டாம் திருமணம் செய்தால் 10 ஆண்டு சிறை: அசாம் பேரவையில் மசோதா நிறைவேற்றம்

கவுகாத்தி, நவ.28:



முதல் திருமணத்திலிருந்து சட்டப்பூர்வமாக விவாகரத்து பெறாமல், இரண்டாவது திருமணம் செய்து கொள்பவர்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கில், அசாம் சட்டப்பேரவையில் இன்று (நவ.27) 'அசாம் பலதார மண தடை மசோதா - 2025' நிறைவேற்றப்பட்டது.

அசாம் பலதார மண தடை சட்டம் நவம்பர் 25 அன்று அசாம் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, இன்று நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பேசிய முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, "குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் ஒப்புதலுக்காக மசோதாவை நாங்கள் அனுப்பி வைப்போம். அவர் ஒரு பெண் என்பதால், மசோதாவுக்கு ஒப்புதல் மறுக்கப்படும் என்று நான் நினைக்கவில்லை. இந்த மசோதா பெண்களைப் பாதுகாப்பதையும், பலதார மணத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இஸ்லாம் இயல்பாகவே பலதார மணத்தை ஊக்குவிக்கிறது என்ற பரவலான நம்பிக்கை என்பது உண்மையில் தவறானது. நபிகள் நாயகத்தின் சிந்தனைப் போக்கு பலதார மணத்தை ஊக்குவிப்பதல்ல; மாறாக அதிகப்படியானவற்றைக் கட்டுப்படுத்துவதாகும். முதல் மனைவியின் சம்மதம் இல்லாமல், இரண்டாவது திருமணம் இஸ்லாத்தில் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகாது" என்று அவர் சட்டப்பேரவையில் கூறினார். மேலும், பலதார மணத்தை தடை செய்த பல முஸ்லிம் நாடுகளையும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், "நான் மீண்டும் முதலமைச்சரானால், பொதுசிவில் சட்டத்தை கொண்டு வருவேன். இது இந்த அவைக்கு நான் அளிக்கும் உறுதிமொழி" என்று கூறினார்.

பலதார மண எதிர்ப்பு மசோதா, இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்காக முந்தைய திருமணத்தை மறைப்பவர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், கடுமையான அபராதமும் விதிக்கிறது. தொடர்ந்து குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகள் இரு மடங்கு தண்டனை விதிக்கப்படும்.

காவல் துறையினரிடம் இரண்டாம் திருமணத்தை மறைப்பவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ.1 லட்சம் வரை அபராதமும் விதிக்க இந்த மசோதா வழிவகுக்கிறது. அத்தகைய திருமணங்களைச் செய்துவைக்கும் மதகுருமார்கள் அல்லது காஜிகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ.1.5 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படலாம்.

இருப்பினும், இந்தச் சட்டம் அசாமின் ஆறாவது அட்டவணைப் பகுதிகளான போடோலாந்து, கர்பி அங்லாங் மற்றும் வடக்கு கச்சார் ஹில்ஸ் ஆகிய தன்னாட்சி கவுன்சிலால் நிர்வகிக்கப்படும் பகுதிகளுக்கு பொருந்தாது. மேலும், பிரிவு 342-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் பழங்குடியினரும் இந்த மசோதாவின் வரம்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் அசாமில் சில பழங்குடியினரின் சட்டங்கள் பலதார மணத்தை அனுமதிக்கின்றன.

# இலங்கை கனமழை, நிலச்சரிவு பலி 31 ஆக அதிகரிப்பு- 4,000 பேர் பாதிப்பு

**இலங்கை, நவ.28:**

இலங்கையில் கடந்த 11 நாட்களாக பெய்து வரும் கனமழை, வெள்ளம், நிலச்சரிவு காரணமாக இதுவரை 31பேர் உயிரிழந்ததாகவும், 4,000-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கையின்பேரிடர்மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால், மொத்தமுள்ள 25 நிர்வாக மாவட்டங்களில் 17 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.



இந்நிலையில், வானிலை பாதிப்பு தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள இலங்கையின் பேரிடர் மேலாண்மை மையம், “நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இதுவரை 31 மரணங்கள் பதிவாகி உள்ளன. 1,158 குடும்பங்களைச் சேர்ந்த 4,008 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 14 பேர் காணாமல் போயுள்ளனர்.

கனமழை காரணமாக இலங்கையின் பல இடங்களில் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 41 குடும்பங்களைச் சேர்ந்த 131 பேர் 5 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும், 136 குடும்பங்களைச் சேர்ந்த 472 பேர் தற்போது உறவினர் வீடுகளில் தங்கி உள்ளனர்” என தெரிவித்துள்ளது.


இதனிடையே, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிவாரணமாக வழங்க அந்நாட்டின் அதிபர் அநுர குமார திசநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் கனமழையால் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதற்கு அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் ஆழ்ந்த வேதனையை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “இலங்கையில் சமீபத்தில் பெய்த கனமழை காரணமாகவும், நிலச்சரிவு காரணமாகவும் பலர் உயிரிழந்திருப்பதையும் பொருட்கள் சேதமடைந்திருப்பதையும் அறிந்து ஆழ்ந்த துயரடைந்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு எங்கள் ஆதரவை தெரிவித்துக்கொள்கிறோம்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெள்ளை மாளிகை அருகே துப்பாக்கிச் சூடு: ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் கைது



**வாஷிங்டன், நவ.28:**

வெள்ளை மாளிகை அருகே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலில் இரண்டு காவலர்கள் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக அதிபர் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வாஷிங்டன் நகரின் மையப்பகுதியில், வெள்ளை மாளிகைக்கு அருகே நடந்த இந்த துப்பாக்கிச்சூடு தாக்குதலில், அமெரிக்க தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

மேற்கு விர்ஜீனியா தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இந்த வீரர்கள், உடனடியாக சிகிச்சைக்காக இரண்டு வெவ்வேறு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதிகாரிகள் துரிதமாகச் செயல்பட்டு, தாக்குதல் நடத்திய நபரைக் கைது செய்தனர். தாக்குதலின்போது அந்த நபரும் கடுமையாகக் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் நடந்த போது, அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தேங்க்ஸ்கிவிங் விடுறையை கொண்டாடுவதற்காக புளோரிடாவில் உள்ள தனது மார்-ஏ-லாகோ விருந்தகத்தில் இருந்தார். இந்த தாக்குதல் குறித்த விவரங்கள் உடனடியாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் அவர் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றவாளியை ‘மிருகம்’ என்று குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், “காயமடைந்திருந்தாலும், அந்த மிருகம் மிகப் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும்,” என்று எச்சரித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புப் படை வீரர்களை பாராட்டியுள்ள ட்ரம்ப், இந்தத் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து, பாதுகாப்பை மேலும் பலப்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி, வாஷிங்டன் நகரத்துக்கு மேலும் 500 தேசிய பாதுகாப்புப் படை வீரர்களை அனுப்புமாறு பாதுகாப்புச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், முன்னாள் அதிபர் ஒபாமா உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ரஹ்மானுல்லா லகன்வால் என்று போலீஸார் அடையாளம் கண்டுள்ளனர். வாஷிங்டன் டி.சி.யில் உள்ள வெள்ளை மாளிகைக்கு அருகே, ரஹ்மானுல்லா முதலில் அங்கிருந்த பெண் காவலரின் மார்பிலும், தலையிலும் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

பின்னர் அங்கிருந்த மற்றொரு காவலரையும் நோக்கிச் சுட்டிருக்கிறார். இதனைக் கண்ட அருகில் இருந்த இன்னொரு காவலர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தாக்குதல் நடத்திய நபரைச் சுட்டு வீழ்த்தினார்.

இதில் ரஹ்மனுல்லாவுக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவருடைய உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். 29 வயதான அவர், கடந்த 2021-ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் நிலவிய குழப்பான சூழலின்போது அமெரிக்காவில் தஞ்சம் அடைந்தவர் என்று கூறப்படுகிறது.

## ஹாங்காங் தீ விபத்து: பலி 55 ஆக அதிகரிப்பு - பலருக்கு தீக்காயம்

**ஹாங்காய், நவ.28:**

ஹாங்காங் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்களில் ஏற்பட்ட தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது. 70-க்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயம் அடைந்த நிலையில், 279 பேரை காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஹாங்காங்கின் டய் போ பகுதியில் வாங் பக் கோர்ட் என்ற அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பும் 31 மாடிகளை கொண்ட கட்டிடங்களாகும். இங்குள்ள 2,000-க்கும் மேற்பட்ட வீடுகளில் சுமார் 5,000 பேர் வசித்து வந்தனர்.

இங்கு, கடந்த சில மாதங்களாக பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தன.

இந்தச் சூழலில் கடந்த புதன்கிழமை பிற்பகலில் வாங் பக் கோர்ட் வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. மூங்கில் சாரம், தார்பாலின் காரணமாக 8 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் தீ மளமளவென்று பரவியது.

ஒரே நேரத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகளிலும் வானளாவிய உயரத்துக்கு தீப்பற்றி எரிந்தது. சுமார் 800 தீயணைப்பு படை வீரர்கள், 128 தீயணைப்பு லாரிகள் மூலம் தீயை அணைக்கும் பணி தீவிரமாக நடைபெற்றது. 20 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ அணைக்கப்பட்டது. 1000-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். 100-க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் பயன்படுத்தப்பட்டன.

வாங் பக் கோர்ட் வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 55 பேர் உயிரிழந்தனர். 8 தீயணைப்பு படை வீரர்கள் உட்பட 70-க்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனிடையே, தீ விபத்து நிகழ்ந்த குடியிருப்புகளில் இருந்து இதுவரை 279 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதேவேளையில், இந்த தீ விபத்து குறித்த விசாரணையும் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

பிரிட்டனின் காலனியாக இருந்த ஹாங்காங் கடந்த 1997 ஜூலை 1-ம் தேதி சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் தன்னாட்சி அதிகாரம் பெற்ற பிராந்தியமாக ஹாங்காங் செயல்படுகிறது. இங்கு 263 தீவுகள் உள்ளன.

இதில் ஹாங்காங், லந்தாவு ஆகியவை மிகப் பெரிய தீவுகள் ஆகும். நிர்வாக ரீதியாக 18 மாவட்டங்களாக ஹாங்காங் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இதில் டய் போ மாவட்டமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென் ஆப்பிரிக்காவை புறக்கணிக்கும் டிரம்ப்

**வாஷிங்டன், நவ.28:**

2026 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறும் ஜி-20 மாநாட்டில் தென்ஆப்பிரிக்காவை புறக்கணிக்க உள்ளதாக டிரம்ப் பேசியுள்ளார். அடுத்த ஆண்டு நடைபெறும் ஜி-20 மாநாட்டிற்கு தென் ஆப்பிரிக்காவை அழைக்கப்போவதில்லை. அந்த நாட்டிற்கான அனைத்து அமெரிக்க உதவிகளும் நிறுத்தப்படும் என டிரம்ப் தெரிவித்திருந்தார். டிரம்ப்பின் இந்த செயலை கண்டித்ததுடன் அவர் தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராகத் தவறான தகவல்கள் தெரிவிப்பது, வருந்தத்தக்கது என்று தென்ஆப்பிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோசா கூறியுள்ளார் தெரிவித்துள்ளார்.

## சிறையில் இம்ரான் கான் நிலை என்ன? - பாகிஸ்தானில் பதற்றம்

**ராவல்பிண்டி, நவ.28:**

பாகிஸ்தான் சிறையில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கொலை செய்யப்பட்டு விட்டதாக நேற்று சமூக வலைதளங்களில் செய்திகள் பரவின. ராவல்பிண்டி சிறைக்கு வெளியில் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சித் தொண்டர்கள் திரண்டு ரகளையில் ஈடுபட்டனர். இம்ரான் கானின் சகோதரிகள் மீதும் போலீஸார் தாக்குதல் நடத்தியதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒரு செய்தி சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. அடியாலா சிறைக்குள் வைத்து, இம்ரான் கானை பாகிஸ்தான் ராணுவம் கொலை செய்துவிட்டதாகவும், அவரை போலீஸார் கடுமையாக தாக்கி இருப்பதாகவும் சமூக வலைதளப் பதிவுகள் ஏராளமாக வெளியாயின.

இந்த பதிவுகள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிவந்தன. இதையடுத்து அடியாலா சிறை வளாகத்தில் இம்ரான் கானின் பிடிஐ கட்சி ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டனர். இம்ரான் கானை பார்க்க வேண்டும் என்று அவர்கள் சிறை வளாகத்துக்குள் புகுந்து ரகளையில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அங்கு கூடுதல் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பிடிஐ கட்சித் தொண்டர்கள் தொடர்ந்து இரவு, பகலாக சிறை வளாகத்தில் போராட்டம் நடத்தி வருகின்றனர். பாகிஸ்தான் அரசுக்கு எதிராக கோஷங்களையும் அவர்கள் எழுப்பி வருகின்றனர்.

## தொடர் மழை இயற்கை சீற்றம்: இலங்கையில் மோசமடையும் நிலைமை

இலங்கையில் கடந்த 11 நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 4,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையையொட்டி காற்றழுத்த தாழ்வுநிலை மண்டலம் வலுவ டைந்துள்ள நிலையில் 200 மி.மீ-க்கும் அதிகமான கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என எச்சரிக்கப்பட்டுள் ளது. இந்நிலையில் தற்போதைய சூழல் குறித்து விவாதிக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் ஜனாதிபதி அனுர குமார திஸாநா யக்க அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## நைஜீரியாவில் அதிகரிக்கும் ஆள்கடத்தல்: அவசர நிலை அறிவித்த ஜனாதிபதி

நைஜீரியாவில் பயங்கரவாதத் தாக்கு தல்கள், ஆள்கடத்தல்கள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இதனை எதிர்கொள்ளும் விதமாக அந்நாட்டின் ஜனாதிபதி போலா டினுபு நாடு தழுவிய அவசர நிலை அறிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில், அதிகரித்து வரும் பாதுகாப்பின்மையை கருத்தில் கொண்டு கூடுதலாக 20,000 காவல்துறையினர் நிய மிக்கப்படுவார்கள். குறிப்பாகப் பாதுகாப்புச் சவால் களை எதிர்கொள்ளும் பகுதிகளில், அதிக வீரர்களைப் பணியமர்த்துவதன் மூலம் சூழலை கட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது. தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பாகிஸ்தான் அரசோ, ராணுவமோ இந்தத் தாக்குதல்கள் குறித்து உடனடி எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

# இந்தோனேசியாவில் கடும் வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவில் சிக்கி 49 பேர் உயிரிழப்பு

**ஜகார்த்தா, நவ.28:**

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 49 பேர் உயிரிழந்தனர் என்றும், 67 பேரைக் காணவில்லை எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.



இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா மாகாணத்தில் கடந்த வாரம் பெய்த கனமழை காரணமாக நேற்று ஆறுகளில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப் பெருக்கால் 2,000-க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள் மூழ்கின என்று தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்கு தபனுலி மாவட்டத்தில் இன்று (நவ.27) 17 உடல்களும், சிபோல்கா நகரில் 8 உடல்களும் மீட்கப்பட்டதாக வடக்கு சுமத்ரா மாகாண காவல் துறையின் செய்தித் தொடர்பாளர் ஃபெர்ரி வாலிண்டுகன் தெரிவித்தார்.

மத்திய தபனுலி மாவட்டத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர் என்றும், பாக்பக் பாரத் மாவட்டத்தில் 2 பேரும், ஹம்பாங் ஹசுண்டுடான் மாவட்டத்தில் 2 பேர் மற்றும் நியாஸ் தீவில் ஒருவர் உயிரிழந்தனர் என வாலிண்டுகன் தெரிவித்தார்.

மேலும், சில தொலைதூரப் பகுதிகளை இன்னும் அடைய முடியவில்லை என்றும், இதனால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். வடக்கு சுமத்ரா மாகாணத்தில் மழை தொடரும் என்றும், அடுத்த வாரம் வரை தீவிர மழை பெய்யும் அபாயம் தொடரும் என்றும் இந்தோனேசியாவின் வானிலை மையம் தெரிவித்துள்ளது. வடக்கு சுமத்ரா மாகாணத்தில் வெள்ளத்தால் சுமார் 47,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 1,500பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு சுமத்ரா மாகாண தலைநகர் படாங்கில் உள்ள லுமின் பார்க் குடியிருப்புப் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய6 பேரின் உடல்களை மீட்புக் குழுக்கள் மீட்டதாக பேரிடர் மீட்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. படாங்க் பரியாமன் மாவட்டத்தில் 3,300-க்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

17,000 தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில், அக்டோபர் முதல் மார்ச் வரை பெய்யும் பருவ மழையால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.